# ஞானச்சுடர்





மாசி 2018

242 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

**பொருள்:** உயிர்களிடத்துக் கருணையுடைய மனமுடையவர்கள் இருண்ட நரகத்தில் செல்லமாட்டார்.

(243)

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

**பொருள்:** உயிர்களிடம் கருணையைச் செலுத்துகின்றவர்களுக்கு அஞ்சத்தக்க பாவச் செயல்கள் தோன்றா.


(244)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஆன்மா நீ



அன்பி னுருகி அவனேநா னென்றுசொல்லி
இன்பக் கடலில் இளைப்பாறித் – துன்பமற்று
எந்நாளும் வாழ்வாய் இறப்பும் பிறப்புமில்லைச்
சொன்னே னிதுவே சுகம் 01

ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியு நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை ஆன்மாநீ – உண்மையில்
செம்மையாய் வாழ்ந்துசீ வன்சிவ னென்றமுழு
உண்மை யறிவாய் உகந்து 02

உகந்து மனங்குவிந்து ஒன்றுக்கு மஞ்சா
தகந்தை அவாவெகுளி யாற்றிச் – சகந்தனிலே
தாமரையிற் றண்ணீர்போற் சாராமற் சார்ந்துநற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து 03

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 242

2018 பொருளடக்கம் மாசி


| | | |
|---|---|---|
| சதாசிவம் | திருமதி ந. பரமேஸ்வரி | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -08 |
| மகத்துவம் மிக்க மகா... | காரை எம்.பி. அருளானந்தன் | 09 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -15 |
| சத்திய ஞான சன்மார்க்க... | சு. சிவராசா | 16 -19 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 20 -21 |
| சொல்லும் செயலும்... | கு. சோமசுந்தரம் | 22 -24 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 25 -26 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 27 -28 |
| சைவசமயம் அழிந்துவிடும்... | பு. கதிரித்தம்பி | 29 -31 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 32 -34 |
| மஞ்ஞை நடமிடும் மாதோட்டம் | கே.எஸ். சிவஞானராஜா | 35 -40 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 -42 |
| மணிவாசகத் தேன் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 43 -44 |
| சிறுதுளி பெரு வெள்ளம் | மூ. சிவலிங்கம் | 45 -46 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 47 -49 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 50 -55 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 56 -62 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 63 -64 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

2018ஆம் ஆண்டு தைமாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகால ஈடுபாடு கொண்டவரும், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவற் தலைவராக மிளிரும் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தமது உரையில் ஆச்சிரமம் ஆற்றும் அறப்பணிகளின் தன்மைபற்றி விபரித்ததோடு ஆற்றும் பணிகள்மூலம் இடர்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாட்டில் முன்னிலை வகிக்கின்றது என்று கூறியதுடன், பேரவையால் வெளியிடப்பட்டு வருகின்ற ஞானச்சுடர்மூலம் இலங்கையில் மட்டுமல்ல புலம்பெயர்ந்து பிற நாட்டில் வாழுகின்ற சைவ மக்களினது மன எழுச்சியையும் வளர்ப்பதில் முன்நிற்கின்றது என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

கடந்த பத்தொன்பது வருடகாலமாக மாதாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடரின் மதிப்பீட்டுரையை ஆச்சிரமச் செயற்பாட்டுக்கு முன்னின்று உழைப்பவரும் அதிபருமாகிய ஆ. சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஞானச்சுடர் வெளிவந்த காலத்திலிருந்து தைமாத மலருக்குரிய வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை வழங்குவதில் திரு ஆறு. திருமுருகனோடு இணைந்து நானும் செயலாற்றுவது சந்நிதி வேற்பெருமானது திருவருள் மாட்சியே என்று கூறியதுடன் 241 மாத காலமாக ஒரு ஆன்மீக சஞ்சிகை மாதம் தவறாமல் வெளிவருவதென்பது ஒரு சாதனையே. அத்தகைய வளர்ச்சிக்கு ஆன்மீகம் சார்ந்த அனைவரினதும் ஒத்துழைப்பே மூலகாரணம் என்று கூறியதோடு தைமாத மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறித் தனது மதிப்பீட்டுரையின் இறுதியில் தைமாத மலருக்குரிய சிறப்புப்பிரதிகளைப் பெறுபவர்களைப் பாராட்டியதோடு குறிப்பாக மக்கள் வங்கியினைச் சார்ந்த அன்பர்களின் செயற்பாட்டையும் போற்றி வாழ்த்தி நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சார்பாக 1998 தை மாதத்தில் "ஞானச்சுடர்" ஆன்மிக சஞ்சிகையின் முதற் பிரதி வெளியானது. இன்று ஆண்டு பத்தொன்பது கடந்து இருபதாவது ஆண்டினில் காலடி வைக்கிறோம். சில அசாதாரண சந்தர்ப்பங்களில் மட்டும் "ஞானச்சுடர்" வெளியீட்டு தேதிகள் மாற்றம் பெற்றனவே தவிர, ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளியன்றும் "ஞானச்சுடர்" வெளியாகியமை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

சமயம் சார்ந்த கட்டுரைகள் - கவிதைகள் தவிர வேறு எதனையும் உள்வாங்காமல், மக்களின் ஆன்மிக ஈடேற்றம் ஒன்றையே நோக்காகக் கொண்டு வெளிவரும் ஞானச்சுடரின் 242ஆவது மலர் - அழகுற வடிவமைக்கப்பட்ட புதிய அட்டைப் படம் தாங்கி உங்கள் கைகளில் இன்று தவழ்கிறது.

சந்நிதியான் ஆச்சிரமத்தினதும் - சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினதும் ஒவ்வொரு நிகழ்ச்சியினையும் - கடமையினையும் ஒழுங்குபடுத்தி நிறைவேற்றி வைக்கும் சந்நிதி வேலவனின் அருட்கடாட்சமே நமது வெற்றிக்குத் துணை நிற்கிறது.

அன்பான வாசகர்களே! எதிர்காலத்திலும் இன்னும் சிறப்பாக நாம் பணியாற்ற என்றும் எம்மோடு இணைந்திருங்கள். "ஞானச்சுடர்" வாசகர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரியதாகுக.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 06. பூத வேதாள வகுப்பு

வருண சரவண மடுவில் வருமொரு
　　மதலை மறைகமழ் குதலை மொழியினன்
மதுக ராரவ மந்திர சிந்துர
　　மணம றாத கடம்பு புனைந்தவன்
மட்டொழுகு சாரமது ரித்ததே னைப்பருக
　　மர்க்கடச முகமமை தொட்டிறா லெட்டுவரை
மன்றற் பைம்புனத் தாள்ப தாம்புயம்
　　வந்திக் குந்தனிக் காம வாஞ்சையன்
மத்தமு டித்தரு ளத்தர்ப்ரி யப்பட
　　நித்தம றைப்பொரு ளைத்தெளி வித்தவன்
மாத்திரமு மந்தரமு நீருநில னுங்கனக
　　மால்வரையு டன்சுழல வாசுகிவி டம்பொழிய
மகரசலி லங்கடைந் திந்த்ராதி யர்க்கமுது
　　பகிர்தரு முகுந்தன்மன் பஞ்சாயு தக்கடவுள்
மருகன்மற வாதவர்நி னைப்பவவைமு டிக்குமவ
　　னுருகுமடி யாரிருவி னைத்தொகைய றுக்குமவன்
மறவர்பொ ருப்பி லொருத்திபொ ருட்ட நாளின
　　வடிவமு மூக்க நரைத்தவி ருத்த வேதியன்
மாதரா ரூப னிராகுல சிந்தைய
　　னாதிகூ தாள மதாணிய லங்க்ருதன்
வரத விதரண விரத அநுபவ
　　மவுன குருபர னிபுண குணதரன்
வனஜ ஜாதனை யன்றுமு னிந்தற
　　வலிய பாரவி லங்கிடு புங்கவன்
மட்டிலிரு நாலுதிசை கட்டுநே மிக்கிரியு
　　முத்தரகு ணாதிகுட தசஷிணா திக்கிரியும்
மங்கத் துங்கவிட் டேறு வாங்கிய
　　செங்கைப் பங்கயச் சோதி காங்கெயன்
மத்தம லத்ரய மித்தைத விர்த்தருள்
　　சுத்தப வித்ரநி வர்த்திய ளிப்பவன்
வாரணமு கன்றனது தாதையைவ லங்சுழல
　　வாகைமயில் கொண்டுலகு சூழ்நொடிவ ருங்குமரன்
மயமுறு ப்ரபஞ்சமுஞ் சங்கேத ஷட்சமய
　　வழியுமன முங்கடந் தெங்கேனு நிற்குமவன்
மதுரமொழி யாலுலக னைத்தையுமு ணர்த்துமவன்
　　வடவனல நேர்கொடிய குக்குடமு யர்த்தகுகன்
மரகத பசஷி குலத்துர கத்தி வாகரர்
　　வடிவையு ருக்கி வடித்தநி ருக்கை வேல்கொடு
வாரிகோ கோவென வாய்விட வந்தெதிர்
　　சூரமா சேனையை மோதுக ளந்தனில்:,

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

M. இந்துசேகரம்
(அவுஸ்திரேலியா)

சிவபாலன் சுந்தரமூர்த்தி
(சுவிஸ்லாந்து)

N. கதிர்காமநாதன்
(யாழ்ப்பாணம்)

திருமதி. த. சுரேந்திரநாதன்
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)

செ. நவரெத்தினராசா J.P
(கப்பூது, குப்பிளான்)

ந. யோகேஸ்வரன்
(பாடசாலைவீதி, கோண்டாவில்)

அதிபர்
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)

த. இராசேஸ்வரன்
(இராஜ உதயம், அல்வாய்)

சி. பத்மநாதன் J.P
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)

சி. சிவம்
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)

வ. நந்தகுமார்
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)

T. பாக்கியம்
(கந்தர்மடம்)

நா. பவளம்
(அச்சுவேலி)

திருமதி தேவதாஸ் தயானி
(அச்சுவேலி)

கணேசகுலசிங்கம் துஷிகரன்
(அச்சுவேலி)

பொ. இராமலிங்கமூர்த்தி
(இளை. உதவி மின் அத்தியட்சகர், கரவெட்டி)

சி. மகாலிங்கம் J.P
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
சு. சிவதாசன் G.S
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
தலைவர், செயலாளர்
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
உரிமையாளர்
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
ஐ. லோகஞானம்
(அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்)
ஆ. விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
V. அரியராசா
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
கந்தசாமி தேவராணி
(ஆனைக்கோட்டை)
க. யோகேந்திரநாதன் G.S
(தும்பளை, பருத்தித்துறை)
உரிமையாளர்
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
செ. சந்திரமூர்த்தி
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
சி. பஞ்சலிங்கம்
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
செ. தேவேந்திரா
(ஒஸ்காவீதி,. உரும்பராய்)
இராசரெட்ணம் வசந்தன்
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
இ. குமாரதாசன்
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
R. குலசிங்கம்
(இளை. அதிபர், கோண்டாவில்)
N. K. தங்கராசா
(இளை. தபாலதிபர், புலோலி)
இ. பாலகிருஷ்ணன்
(முகமாலை)
இ. சொக்கலிங்கம்
(நாவற்குழி)

உரிமையாளர்
(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)
செ. செல்வரெத்தினம்
(இளை. அதிபர், சுண்ணாகம்)
த. விவேகானந்தன்
(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)
இ. ஜெயபாலன்
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
மா. ந. பரமேஸ்வரன்
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
பா. கேதீஸ்
(உரும்பராய்)
S. ஈஸ்வரன்
(டச்சுவீதி, சித்தங்கேணி)
ச. மதனகுமார்
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
கெ. தவராசா
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
வி. ந. ஸ்ரீதரன்
(இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்))
செ. செல்விகா
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
சி. இராசரத்தினம்
(இராஜஸ்தான், சுதுமலை)
வே. மதிபாலசிங்கம்
(செட்டியதெரு, கரவெட்டி)
நா. முருகையா
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
செல்வராசா பொன்னுத்துரை
(கரந்தன், நீர்வேலி)
விஸ்வலிங்கம் குகலிங்கம்
(பண்ணாகம், சுழிபுரம்)
மா. தேவநேரு
(செட்டிவளவு லேன், இணுவில்)
சசிகரன் கௌதமன்
(அச்சுவேலி)

செ. பாலச்சந்திரன்
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)
(நெல்லியடி, கரவெட்டி)
தி. பாலசுப்பிரமணியம்
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
ஆறுமுகம் கந்தையா
(நீர்வேலி)
நாகன் கிருஸ்ணபிள்ளை
(கோண்டாவில்)
சி. கந்தையா
(சுண்ணாகம்)
K. விஷ்ணுமோகன்
(உரும்பராய் கிழக்கு)
பொ. சிற்றம்பலம்
(கொடிகாமம்)
ச.க. தம்பு
(அல்லாரை, மீசாலை)
சிதம்பரநாதன் ஸ்ரீகரன்
(புத்தூர்)
நாகராசா சாந்தி
(அச்சுவேலி)
க. ரட்ணேஸ்வரன்
(இளை. அதிபர், சங்கானை)
க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்
(ஆனைக்கோட்டை)
திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்
(வட்டுக்கோட்டை)
திருமதி செல்வநாயகம்
(வடலியடைப்பு)
திருமதி சீதாதேவி இந்திரன்
(யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை, மீசாலை)
உரிமையாளர்
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

# சதாசிவம்

–திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள்–

சதாசிவ மகிமை சொல்லச் சந்ததமும்
பிதாச்சாரம் பேணும் பிரானே
மோன கணபதியே ஞானகுருவே
எனக்குத் துணையிருந்து காப்பாய்

**சதாசிவம்**

எப்பொழுதும் சிவத்தியானத்திலிருப்பது “சதாசிவம்” “சிவம்” என்றால் அன்பு. சதாகாலமும் சீவர்களைப் பற்றியே சிந்தித்து சகல சீவராசிகளையும் அன்புடன் இரட்சிப்பதால் இது சதாசிவம் எனப்படுகின்றது. சிவத்திலிருந்தே சகல சீவராசிகளும் தோன்றின. அன்பின் சக்தியால்தான் உயிர்கள் இயங்குகின்றன. “அன்பு” என்பது உணர்வு. இந்த அன்பைப் பூரணமாக யாரிடம் கண்டு அனுபவிக்கின்றோமோ அவரே “கடவுள்” எனப்படுகின்றார். இவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர், ஏகமானவர் (ஒன்றானவர்)

இந்த அன்பெனும் உணர்வை எப்படி இந்த உலகம் புரிந்துகொள்ள முடியும்? இந்த சாஸ்வதமான அன்பைப் புரிய வைக்கவே சதாசிவம் அம்மையப்பனாக (தாயும் தந்தையுமாக) அன்னையும் பிதாவுமாக தோற்றமெடுத்து உலகைப் படைத்தது. ஒவ்வோர் உயிரிலும் உணர்வாகக் கலந்து சீராக உலகை இயங்க வைப்பது அன்பு. (சிவம்) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கிணங்க ஒவ்வொரு குழந்தையும் முதன் முதலில் அன்பைப் புரிந்து உணர்ந்து கொள்வது தாய் தந்தையிடமிருந்தே. உலகுக்கெல்லாம் அன்பை வாரி வழங்கும் கருணை வள்ளலாகிய கடவுளே “சதாசிவம்” என்றும் “பரப்பிரம்மம்” என்றும் அழைக்கப்படும் மூல மூர்த்தி ஆவார். அன்பில்லாமல் உலகம் இல்லை, உயிர்கள் இல்லை. உணர்ந்து கொள்ளும் அறிவும் இல்லை. அன்பில்லாவிட்டால் எதுவும் இல்லை; எல்லாம் சூன்யம். ஆகவே உலகின் மூலம் அன்பு. வாழ்வின் இயக்கத்திற்குக் காரணமாவது



*அடிவாரத்திலிருந்து அண்ணாந்து பார்ப்பவன் சிகரத்தை அடையமாட்டான்.*

அன்பு. முடிவில்லாத உலக இயக்கத்திற்கு இதுவே உறுதுணையாகும்.

ஆகவே இது ஆதியந்தம் இல்லாதது. குழந்தை பிறந்ததும் முதன் முதலில் சுவைப்பது தாய் தந்தையரின் அன்பையே. ஆகவே இறைவன் "ஆதி" என்று அழைக்கப்படுகின்றான். குழந்தைகள் வளர்ந்து தாய் தந்தையராகி அன்பைக் கொடுத்தும், பெற்றும் அனுபவிக்கும் வாழ்க்கையின் நடுப்பகுதியே "நடு" என்று அழைக்கப்படுவதாகும். பிறந்தவர் உடலைவிட்டு உயிர் பிரியும்போது அந்த இறப்பு "அந்தம்" எனப்படுகின்றது. இறந்த உடலையும் சிவமாகப் பாவித்து அன்புடன் கிரியைகளைச் செய்யும்போது அது அந்திமக் கிரியை என அழைக்கப்படுகின்றது. மனித வாழ்வில் ஆதி, அந்தம், நடு என்பன தோற்றப்படுகின்றன. ஆனால் இந்த உலகம் தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருப்பதால் இதை இயக்கும் இயக்குனராகிய (இறைவன்) கடவுள் என்றுமுள்ளவராகக் கணிக்கப்படுகின்றார்.

இந்த அன்பெனும் சிவம் உருவாக, அருவாக, அருவுருவாகத் தோன்றியும், தோன்றாமலும் இன்ன உருவமென்று அறிய முடியாமலும் இருப்பதால் யாவையுமாய்" (எல்லாமாய்) அல்லையுமாய் ஒன்றுமேயில்லாச் சூனிய வெளியாகவும் உணர்வால் உணர்ந்து கொண்டதனாலேயே மணிவாசகப் பெருமானாகிய மாணிக்கவாசகர் திருவாசகத்தைப் பொருளுணர்ந்து படித்துத் தாம் கண்ட உண்மையை, தாம் அனுபவித்த ஆனந்தத்தை எல்லோரும் அனுபவிக்க வேண்டுமென அருளி உள்ளார். "மாற்றமாம் வையகத்தே வெவ்வேறே வந்தறிவாம்". இந்த உலகம் கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டேயிருப்பதனால் வெளிப்புறத் தோற்றங்கள் காணும் காட்சிகள் மாறிக்கொண்டே இருக்கும். காலநிலைகள், பருவங்கள், உருவங்கள், ஆடை, அணிகலன்கள், பாவனைப் பொருட்கள் என்பவற்றால் வாழ்வின் புறத்தோற்றத்தில் மாற்றங்கள் நிகழலாம். ஆனால் எல்லாவற்றையும் இயக்கி இரட்சிக்கும் "சதாசிவம்" என்றும் மாறுவதில்லை.

ஒவ்வொரு காட்சிப் பொருளிலும் அந்த இறைவனின் பிரதிபலிப்புத் தோன்றுகின்றது. அந்த இறைவனின் ஒவ்வோர் படைப்பும் அன்பெனும் ஆகர்ஷண சக்தியால் இயங்குகின்றது. ஒவ்வொன்றின் உள்ளேயும் அன்பாய் உள்ளிருந்து ஆட்டுவிக்கின்ற இறைவனின் பிரதிபலிப்பே தில்லைத் திருத்தாண்டவம். "தாம் தாமென்று" ஒவ்வொன்றினுள்ளேயும் ஒழிந்திருந்து ஆட்டுவிக்கும் பரம்பொருளின் தத்துவமே நடராஜ தத்துவமாகும்.

உதாரணமாக விதை முளைக்கின்றது. மரமாகின்றது. ஒவ்வொன்றும் ஓர்விதம். பலபல வர்ணங்கள், பலபல வாசனைகள் இவையெல்லாம் எவ்வாறு நிகழ்கின்றன? தேனில் இனிமை எவ்வாறு வந்தது இவற்றை எல்லாம் ஆராய்ந்தால் ஆராய்ச்சி ஒருபோதும் முடியாது. ஏனெனில் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டேயிருக்கும் உலகை ஆராய்ந்து அறிய முடியாது. பூவில் வாசனைபோல், தேனில் இனிமைபோல், பாலில் நெய்போல், விறகில் தீபோல் உள்ளிருந்து ஒளிரும் அறிவே (உணர்வே) சிவமாகிய அன்பு. இந்த இறைவனாகிய ஒன்றுதான் உலகத் தோற்றம். இயக்கம் எல்லாவற்றிற்குமான மூலப் பொருள் என்பதை உணர்ந்து அறிந்து கொண்டால் உலக வாழ்க்கை எளிதாகின்றது. இந்த இறைவனின் அருட்கடாட்சமின்றி எந்த ஆராய்ச்சியிலும் வெற்றிபெற முடியாது. இறைவனை மறந்து தானே கர்த்தா என மனிதன் எண்ணிக்கொண்டு புவியை மாசுபடச் செய்யும் ஆராய்ச்சிகளையும் கண்டுபிடிப்புகளையும் செய்வதோடு தங்களுக்குள்ளே பகையையும், போட்டி பொறாமைகளையும் வளர்த்துக்கொண்டு "நான்" "நான்"

*குறைவானதற்குத் திருப்தியடைவதே நிறைவான செல்வம்.*

என அகங்காரம் கொண்டு அழிவுக்கான கருவிகளைக் கண்டு பிடிப்பதும் கோர யுத்தங்களில் ஈடுபடுவதும் கண்டு இறைவன் ஆடும் அகோர தாண்டவமே ஊழிக் கூத்து.

கோரமில்லாதது "அகோரம்" ஆகின்றது. இறைவனை விட்டு மனிதர்கள் தத்தம் போக்கில் விலகிச் செல்வதால்; இறைவனை நேசிக்காததால் அவன் படைப்பை இரட்சிக்காததால் இறைவனுக்குக் கோரமில்லாது போகின்றது. இதனால் அகோரம் உண்டாகின்றது. இயற்கை சீற்றம் கொள்கின்றது. புயல், வெள்ளம், நில நடுக்கம், எரிமலை குமுறல், கடும் வறட்சி, அக்கினிப் புயல் என்பன உண்டாகின்றன. இதுவே நடன சபேசனின் ஊழிக்கூத்து.

இறைவன் நமக்காகக் கொடுக்கப்பட்ட நன்கொடைகள்தான் இவ்வுலகில் நம்மைத் தாங்கி நிற்கும் பூமி, சுவாசிக்கும் காற்று. தாகத்திற்கு நீர் பசிக்கு உணவு என்பன. இவையெல்லாம் இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட பொதுச்சொத்து. உலகிலுள்ள எல்லாப் பொருட்களுமே இறைவனுடையவை. இந்த இறைச் சொத்தை நாசம் செய்தால் இயற்கை சீற்றம் கொள்கின்றது. பொதுச் சொத்துக்களைத் தத்தம் தேவைகளுக்கு அதிகமாகத் தேடித் தமக்கெனச் சொந்தம் கொண்டாடும்போது அதனால் உலகம் பாதிக்கப்படுகின்றது. எத்தனை ஜீவராசிகளைப் படைத்தானோ இறைவன் அத்தனையும் வாழத் தேவையான மூலப்பொருட்களையும் படைத்துள்ளான். மனிதன் தன் சிற்றறிவால் தனக்குத் தனக்கென்று தேவைக்கு அதிகமாக எடுத்துக்கொள்வதால் சிலருக்கு எதுவும் கிடைக்காமற் போகின்றது. இதுவும் இயற்கைக்கு (இறைவனுக்கு) விரோதமான செயல் ஆகின்றது. இத்தகைய செயல்கள் மனிதனின் தேக, மன ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றது. இதனால் மனிதனுக்குக் கிடைப்பது திருப்தியற்ற துயர வாழ்வாகும்.

உலகைப் படைத்தவனை யாசித்து நேசித்துப் பெற்ற அறிவால்; உலகம் எத்தனை அழகானது; அற்புதமானது. அதிசயமானது என்பதை அறிந்து கொள்ளும்போது இயற்கையை ரசிக்கும் உணர்வு ஊற்றெடுக்கின்றது. மலர், செடி, கொடி, மரங்கள், மலைகள், நீரூற்றுக்கள் பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகள் இவையெல்லாவற்றையும் பார்த்து ரசிக்கும்போதுதான் இறைவனின் ஆனந்தத் தாண்டவம் புலனாகின்றது. இத்தகைய ரசிகமனம் படைத்த மனிதனே.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மானிலத்தே.

என்று இறைவனை ரசித்துப் பாடியுள்ளான். ஆகவே மனித மனம் எவ்வளவு தூய்மையாகவும் இறைபற்றுடனும் விளங்குகின்றதோ அங்கே இறைவன் ஆனந்த நடமிடும் கருணை வள்ளலாகக் கற்பக தருவாக எல்லோரையும் இரட்சிக்கும் இரட்சகராகக் காணப்படுகின்றான்.

*அச்சம் அபாயத்திலிருந்து தப்ப வைக்கும், ஆனால் வீரம் அதில் உறுதுணையாக நிற்கும்.*

பேராசை, பதவி, புகழ், வெற்றி என்பவற்றைக் குறுக்கு வழியில் பெறுவதற்காக இறைவன் வகுத்த நெறியை, விதியை மனிதன் மீறி நடக்கின்றான். இவன் அகோர தாண்டவமான இறைவனின் ஊழிக்கூத்தைக் காண்கின்றான். இத்தகையோர் கண்களுக்கு இறைவன் பயங்கரவாதியாகத் தண்டனை அளிப்பவனாகக் காணப்படுகின்றான். இவன் சுடலையில் பேய்களோடு ஆடுகின்றான். மண்டையோட்டை மாலையாக அணிகின்றான் என்று சிவனைப் பேயென்று புறக்கணிப்பவர்கள் இறை நேசமில்லாத; இறைவனின் அன்பை உணராத அபாக்கியவான்களே. "சுடலை" என்றால் சுடு+அலை தீச்சுவாலை. "மண்டையோட்டு மாலை" என்பது உருத்திராக்கமாலை "பேய்" என்பது அகப்பேய் (அறியாமை) ஆகவே ஒவ்வோர் மனத்திலும் அறியாமையால் எழும் தீய எண்ணங்களான அகப்பேயை விரட்டுவதற்கு இறைவன் உருத்திராக்கமணிந்த கோலத்தில் துன்பமென்னும் தீயை ஏந்தியவராக ஒவ்வொருவர் இதயத்திலும் நின்றாடுகின்றார். துன்பத் தீயால் அகவிருள் அகன்று ஞானஒளி அங்கே பிரகாசிக்கின்றது. அப்போதுதான் இறைவனின் கருணை நமக்குப் புரிகின்றது.

"ஓம்" என்னும் ஓங்காரத்தை உணர்ந்து ஓதுபவர்கள் இறைவன் இருப்பை உணர்கின்றனர். அவன் வழியை, விதியை யாசிக்கின்றனர். இல்லையென்பார்க்கு இறைவன் தென்படுவதில்லை. இவர்கள் சூனியத்தைப் பார்க்கின்றனர். அதனால் இறைவன் இல்லையென்பவரையும் இரட்சிக்கின்றான். வேளைவரும்போது தன் இருப்பை உணர்த்துகின்றான். இவ்வாறு தன்னை; தன் இருப்பை உணர்த்துதல் "அருளல்" எனப்படுகின்றது. அதாவது மனிதன் இறை சிந்தனையோடு, இறை நம்பிக்கையோடு இருக்கும்போது தெளிவாக இருக்கின்றான். இதனால் நல்ல ரசிகனாக ஆனந்தமாக இருக்கின்றான். புற அழகில் மயங்கி புறப் பொருட்களைத் தகாத வழியில் சொந்தமாக்கி அனுபவிக்க வேண்டுமென்ற பேராசையால் உந்தப்படும்போது மனம் மயங்குகின்றது. அங்கே மாயை என்னும் இருள் சூழ்கின்றது. இது மறைத்தல் எனப்படுகின்றது.

ஆகவே நம் வாழ்வில் நிறை பிறழாது வாழ வாழ்க்கையை அளவுடன் அனுபவித்துச் சுவைத்து, ரசித்து ஆனந்தமடைய சிவத்தியானம் முக்கியமாகின்றது. அதாவது இறைவன் (கடவுள்) அன்பு சொரூபமானவர் எப்போதும் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிதலே சிவத்தியானமாகும் என்று யோகர் சுவாமி கூறியுள்ளார்கள். சந்தமூர்த்தியாகத் தட்சணாமூர்த்தியாக விளங்கும் சிவ்னின் திருக்கோலமே சதாசிவ மூர்த்தமாகும். இவரே உலகத்தின் குருவானவர். ஆகவே சதாசிவனின் திருவருளை உலகமுழுவதும் பெற்றுய்ய எல்லாம் வல்ல நடன சபேசனாம் சிவன் தன் ஆடலால் உலகம் முழுவதையும் ஆட்கொள்வானாக.

வையக மெல்லாம் வளமுடன் வாழ
தெய்வீகக் கூத்து உலகெங்கும் ஆடி
உய்ய வைக்க எம்பெருமானின்
ஆடிய பாதத்தைத் தேடிய தாயை
வாழ்த்தி வணங்கிப் பிரார்த்திப்போமாக.

*கோழைகள் பலமுறை மடிவர், வீரனுக்கு ஒருமுறைதான் மரணம்.*

# திருச்சதகம் (தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 05. கைம்மாறு கொடுத்தல்

53. கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே.

**ப-ரை:**

கண் ஆர- என் கண்கள் மகிழ்ச்சி நிறையும் வண்ணம் நீறு இட்ட அன்பரோடு யாவரும் காண- திருவெண்ணீறு அணிந்த மெய்யடியார்களோடு மற்றுமுள்ள யாவரும் காணும் வண்ணம் கட்டு அறுத்து எனை ஆண்டு- பாசபந்தத்தினை அறுத்து என்னை ஆட்கொண்டருளி, பட்டி மண்டபம் ஏற்றினை- சமய உண்மைகளை ஆராயும் வித்தியா மண்டபத்தில் என்னைச் சேர்த்தருளினை; அதனால், எட்டினோடு இரண்டும் அறியேனை ஏற்றினை- எட்டும் இரண்டும் அறியாத என்னை உயர்வடையச் செய்தனை.

கண்கள் மகிழ்ச்சி நிறையும் வண்ணம், திருநீறிட்ட மெய்யன்பர்களோடு மற்றுமுள்ள யாவரும் காணும் வண்ணம் பாச பந்தத்தினை அறுத்து என்னை ஆட்கொண்டருளிப் பட்டி மண்டபத்தில் ஏற்றினை; அதனால் எட்டினோடு இரண்டும் அறியாத என்னை உயர்வடையச் செய்தனை. இவற்றிற்குச் செய்யத்தக்க கைம்மாறு யாதுளது என்பதாம்.

கட்டறுத்தெனை யாண்டு- அநாதிபந்தமாகிய ஆணவத்தினைக் கெடுத்து என்னை ஆட்கொண்டருளி,

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை"

குயில் 9.

"எந்தை யெந்தாய் சுற்றம்மற்று மெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தெனை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்"

பூவல் 2.

"கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு"

அச்சோ 6.

என அடிகள் பிறாண்டும் அருளியவாறு காண்க. கண்ணார அறுத்து ஆண்டு ஏற்றினை என இயைக்க. இனி, கண்ணாரக் காண ஏற்றினை எனக் கூட்டிப் பொருளுரைப்பினுமமையும். நீறு திருவருட்பேற்றின் அறிகுறியாதலின் நீறிட்ட அன்பர்

அத்திருவருட் பேற்றினையுடைய அன்பர்கள் என்க. திருவெண்ணீற்றிற்கு வீடுபேறாகிய செல்வத்தைக் கொடுப்பது என்னும் பொருளமைந்த விபூதி என்னும் பெயருண்மையுமறிக. அன்பர் என்றது இறைவனுடன் வந்த மெய்யடியார்களை. யாவரும் என்றது அடிகளுடன் வந்தவர்களையும் மற்றும் ஆங்குள்ளவர்களையுமாகும்.

கல்வி பயிலும் களம் என்னும் பொருளுடைய "பட்டியம்" என்னும் சொல் இங்கே "பட்டி மண்டபம்" என நின்றது. பட்டிமண்டபம்- வித்தியா மண்டபம். சிலப் 5:192 அடி. நல் உரை.

"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்" மணி 1.60-61.
"பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" கம்ப. நகர 62.

என வருவன காண்க.

ஏற்றினை இரண்டினுள் முதற்கணுள்ளது சேர்ந்தருளினை எனவும், ஏனையது உயர்வடையச் செய்தனையெனவும் பொருள் தந்து நின்றன. அன்றி அவற்றுள் ஒன்றினுக்கு இடப ஊர்தியையுடையவனே எனப் பொருள்கொண்டு இறைவனைக் குறித்ததாகக் கொள்ளின், முன்னர்க் "கட்டறுத்தெனை" எனவும் பின்னர் "அறியேனை" எனவும் வந்த இரண்டாம் வேற்றுமைகளுக்கு முடிக்குஞ்சொல் "ஏற்றினை" என்னும் ஒன்றே உளதாகும். அதனால் அவ்வேற்றுமைகளுள் ஒன்று பொருளின்றி நின்று வற்றும். ஆதலால் "இறைவனே" என்னும் எழுவாயை அவாநிலையான் வருவித்துக் கட்டறுத்தெனைப் பட்டிமண்டபம் ஏற்றினை யெனவும் அறியேனை ஏற்றினை எனவும் தனித்தனி இயைத்துப் பொருள் கோடலே சிறப்புடைத்தாமென்க.

எட்டினோடு இரண்டு பத்து; பத்து என்னும் எண்ணின் தமிழ்க்குறி யகரம்; யகரம் திருவைந்தெழுத்தில் ஒன்று, அது தூலபஞ்சாக்கரத்தில் இறுதியிலும், சூக்குமபஞ்சாக்கரத்தில் நடுவிலும் அமையும். அந்த யகரம் உயிரினைக் குறிப்பதாக உயிராகிய என்னியல்பை அறியாத என்னை என்பது எட்டினோரண்டும் அறியேனை என்பதற்குப் பொருளாகும். உயிராகிய என்னியல்பை அறியாத இழிபுடைய என்னை நின் பேரருளால் சமய உண்மைகளை ஆராயும் பட்டிமண்டபம் ஏற்றினை எனவும், அதனால் என்னை உயர்வடையச் செய்தனை எனவும் கொள்க.

எட்டினோடு இரண்டு பத்து என்னும் எண்ணின் தமிழ்க் குறியாகிய யகரத்தைக் குறிப்பது என்பதனையும், அந்த யகரம் ஆன்மாவைக் குறிக்கும் என்பதனையும்.

"எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் சீட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே
யவாயமற நின்றாடு வான்"

என உண்மைவிளக்கத்தும்,

"எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழையர்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே" 963.

எனத் திருமந்திரத்தும் வருவனவற்றானுமறிக.

எட்டினோ டிரண்டும் அறியேனை என்றது எட்டும் இரண்டும் பத்து என்று அறியாத என்னை எனவும் பொருள்படும். இனி எட்டினோடு இரண்டும் என்பதில் ஓடு எண்ணுப் பொருளாதலின் எட்டும் இரண்டும் எனவே பொருள்படும் அதனால் எட்டு என்னும் எண்ணைக் குறிக்கும் அகரமும், இரண்டு என்னும் எண்ணைக் குறிக்கும் உகரமும் கொள்ளப்படுமாறன்றி முன்னது அகரத்தைக் குறிப்பது எனவும், பின்னது உகரத்தையும் மகரத்தையும் குறிப்பது எனவும் கொண்டு அம்மூன்று எழுத்துக்களும் சேர்ந்து பிரணவத்தைக் குறிக்கும் எனப் பொருள் கோடல் இயையாமை காண்க. இனி, எட்டினோடிரண்டு பத்து; அது இறைவன்பால் வைக்கும் பத்திக்குப் பெயராய் அப்பத்தியில்லாத என்னை எனவும் பொருள்படும். பத்து என்பது பத்தியைக் குறித்தலை "பத்துடை யடியவர்க் கெளியவன்" (திவ். திருவாய் 13:1) என்புழிக் காண்க.

இதன்கண், என்னை ஆண்டு பட்டிமண்டபம் ஏற்றினை எனவும் என்னியல்பை அறியாத என்னை உயர்வடையச் செய்தனை எனவும், அடிகள் கூறுமுகத்தால் இவற்றிற்கு யான் செய்யும் கைம்மாறு யாதோவென அடிகள் வருந்துதல் குறிப்பிற் புலப்படுதலால் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 49.

54. அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோவல்ல னோவரு ளீசனே.

**ப-ரை:**

அறிவனே- அறிவுருவானவனே. அமுதே- அமுதத் தன்மையுடையவனே, அடி நாயினேன் எனை- கீழாகிய நாயின் தன்மையுடையவனாகிய என்னை, அறிவன் ஆக கொண்டோ ஆண்டது- அறியத்தக்கவன் எனத் திருவுள்ளம் பற்றியோ ஆட்கொண்டருளியது? ஆண்ட நாள் கண்டது அறிவிலாமை அன்றே- அடியேனை ஆட்கொண்டருளிய காலத்தில் யான் கண்டது அறிவிலாமை அன்றோ? அறிவனோ அல்லனோ ஈசனே அருள்- இந்நிலையில் யான் அறிவுடையேனோ; அறிவில்லேனோ அருளிச் சொல்வாயாக.

அறிவனே அமுதே கீழாகிய நாயின் தன்மையுடையோனாகிய என்னை அறியத் தக்கவன் எனத் திருவுள்ளம் பற்றியோ ஆட்கொண்டருளியது? அடியேனை ஆட்கொண்டருளிய நாளில் யான் கண்டது அறிவிலாமை அன்றே; இந்நிலையில் யான் அறிவுடையேனோ அறிவில்லேனோ அருளிச் செய்வாயாக என்பதாம்.

அறிவது என்பது இயல்பாகவே எல்லாமறிபவன் என்னும் அவனது இறைமைக் குணத்தைக் குறித்து, அமுது தன்னை உண்டாரை நரைதிரை மூப்புச் சாக்காடுகளின்றி இனிதிருக்கச் செய்வது. இறைவனும் தம்மையடைந்த பக்குவான்மாக்களுக்குப் பேரொவொழி யாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா இன்பத் தன்மையை அருளுதலின் அமுதே என்றார். அடி என்பது ஈண்டு கீழ்மைப் பொருட்டு.

அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது என்றது அறியுந் தகுதி என்பாலிருப்பதாகத் திருவுள்ளம் பற்றியோ என்னை ஆட்கொண்டருளியது என்றவாறு, இங்ஙனம் அடிகள்

வினாவுமாற்றால் தகுதியுடையேன் அல்லன் என்பது கூறியதாகும். அதனை "அறிவிலாமை யன்றே யான் கண்டது" என்பதும் வலியுறுத்தும்.

ஆண்டநாள் கண்டது அறியாமை யன்றே என்றது. அடிகள் இறைவன் தம்மை ஆட்கொண்டபொழுது தம்பால் தாம் கண்டது அறியாமையல்லவா என்பதனால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு மெய்யுணர்வினை அடைந்த அடிகள் தமது முன்னைய நிலையை எண்ணிக் கூறியதாகும். இதனை "அறிதோ றறியாமை கண்டற்றால்" என்னும் திருக்குறள் வலியுறுத்தி நிற்றல் காண்க.

அறிவனோ அல்லனோ அருள் என்றது அறியுந் தகுதியுடையேனாகக் கொண்டு நின்னால் ஆட்கொள்ளப்பட்ட யான் ஆட்கொண்டபின் அறிவிலாமையாகிய முன்னைய நிலையை அறிந்தேன்; ஆட்கொண்டமையால் அறிவுடையேனாயின் நின் அருட் காட்சியைக் கண்ட யான் பின் அதனைப் பிரியப்பெறேன். இப்பொழுது பிரியப்பெற்றமையால் அறிவிலனாகின்றேன். ஆதலால் அறிவிலனாகின்ற நிலைமையை நீக்கி நின் திருவடிக் காட்சியைத் தந்தருள வேண்டும் என்பது கருத்து.

இதன்கண், இறைவனது அருட்காட்சியைப் பிரிந்த அடிகள் கைம்மாறு கொடுக்க மாட்டாமையொடு பிரிந்தமையையும் ஆற்றாராய் அக்காட்சியை அருளவேண்டும் என்னும் கருத்துத் தோன்றுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

(தொடரும்...

## பொன்குடமும் மண்குடமும்

ஓர் ஊரில் இரண்டு பெண்கள் இருந்தார்கள். இருவரும் தோழிகள். அவர்கள் ஒன்றாகவே இருப்பார்கள். பள்ளிக்கூடம் போகும்போதும், சந்தைக்குப் போகும்போதும், ஊருணிக்கு நீர் அள்ளிவரச் செல்லும்போதும் இருவரும் ஒன்றாகவே செல்வார்கள். நீர் அள்ளச் செல்லும்போது ஒருத்தி பொன்குடம் எடுத்து வருவாள். மற்றொருத்தி மண்குடம் எடுத்து வருவாள். நீர் மொண்டபின் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் வீட்டுக்குத் திரும்பி வருவார்கள்.

ஒருநாள் இருவரும் நீர் தூக்கிக்கொண்டு தத்தம் வீட்டுக்கு திரும்பிச் சென்றுகொண்டிருந்தார்கள். வழியில் சாலையோரத்தில் ஒரு கால்வாய் வெட்டிக் கிடந்தது. அந்தக் கால்வாயைக் கண்டவுடன் ஒருத்தி கேட்டாள், "தலையில் உள்ள குடத்தோடு இந்தக் கால்வாயைத் தாண்டவேண்டும். உன்னால் முடியுமா?" அதற்கு மற்றொருத்தி பதில் சொன்னாள், "என்னால் முடியும் உன்னால்த்தான் முடியாது".

ஏன் முடியாது? வேண்டுமானால் இருவருமே தாண்டிப் பார்த்துவிடுவோம் என்றாள் முதலில் கேட்டவள். இருவரும் அந்தக் கால்வாயைத் தாண்ட அதன் அருகில் சென்றார்கள். முதலில் ஒருத்தி தாவினாள். அவள் கால்வாயைத் தாண்டிவிட்டாள். ஆனால் அவள் தலையில் இருந்த பொன்குடம் கீழே தரையில் விழுந்து தண்ணீர் கொட்டிவிட்டது. குடமும் ஒரு பக்கம் நெளிந்துவிட்டது. தொடர்ந்து தாவிய மற்றொருத்தியும் கால்வாயைத் தாண்டிவிட்டாள். அவள் தலையில் இருந்த மண்குடம் கீழே விழுந்து உடைந்துவிட்டது. சுற்றிலும் தண்ணீர் சிந்தியது. முதல் பெண் நெளிந்துபோன பொன்குடத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் தண்ணீர் மொண்டுவர ஊருணிக்குச் சென்றாள். இரண்டாவது பெண், தாயார் கோபிப்பாளே என்று பயந்து அழுதுகொண்டே வெறுங்கையோடு வீட்டுக்குத் திரும்பினாள்.

***கதையின் நீதி:*** பொன்குடம் உடைந்தால் பொன்னாகவேயிருக்கும். மண்குடம் உடைந்தால் மண்ணாகிவிடும். உயர்ந்த குணம் படைத்தவர்கள் வறுமையடைந்தாலும் பயனுள்ளவர்களாகவே இருப்பார்கள். இழிந்த குணம் படைத்தவர்கள் வறுமையுற்றால் எவ்விதப் பயனும் அல்லாதவர்களாகி விடுவார்கள்.

*நாள் நன்றாகத் தொடங்கினால் நாம் வருந்தவேண்டியதில்லை.*

# மகத்துவம் மிக்க மகா சிவராத்திரி

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

சிவராத்திரி சிவனுக்குரிய இரவு மட்டுமல்ல அது மங்களத்திற்கும் உரிய இரவாகும். சிவம் என்பதற்கு மங்களம் என்று பொருள். மகா சிவராத்திரியின் மேன்மையை வாதூலம் முதலிய ஆகமங்கள், சிவமகாபுராணம், ஸ்காந்தம், பத்மம் உள்ளிட்ட பத்து புராணங்களும் குறிப்பிடுகின்றன.

சிவராத்திரி விரதம் மேற்கொள்பவர்கள் ஒருபொழுது உணவை மட்டுமே முதல் நாளில் உண்ணவேண்டும். நீராடிச் சிவ சந்நிதியில் சிவபூஜையை மேற்கொள்வது சிறந்தது. பூஜை செய்ய முடியாதவர்கள் கோயிலுக்குச் சென்று அங்கு நடக்கும் பூஜையைக் கண்டு களிக்கலாம். அன்று முழுவதும் உபவாசமாக இருக்கவேண்டும். பகலில் உறங்கக் கூடாது இரவிலும் நான்கு ஜாமங்களிலும் சிவபூஜையில் கலந்துகொள்ள வேண்டும்.



### பூஜை முறைகள்

"சிவ பூஜா விதி" என்ற நூல் சிவராத்திரி தினத்தில் நான்கு ஜாமமும் எவ்விதம் பூஜை முறை அமைய வேண்டும் என்று விளக்கம் தருகிறது.

### முதல் ஜாமம்

முதல் ஜாமத்தில் பஞ்சகௌவியம் கொண்டு சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து, செம்பட்டு ஆடை அணிவித்து அரிசி அட்சதை இட்டு, பொன்னாபரணம் சாற்றி, வில்வஇலை, தாமரை, அலரி மலர்களால் அர்ச்சித்து பச்சை கற்பூரம் சந்தனம் சேர்ந்த தூபமூட்டி, புஷ்பதீபம் காட்டி, முற்கான்னம், வில்வ பழம், பாலன்னம் நைவேத்தியம் செய்து ரிக்வேதம் பாராயணம் செய்து பூசை செய்ய வேண்டும்.

### இரண்டாவது ஜாமம்

பஞ்சாமிர்தத்தினால் அபிஷேகம் செய்து, மஞ்சள் ஆடைசாற்றி, யவை அட்சதையிட்டு மரகத ரத்தினாபரணம் அணிவித்து துளசி, வில்வ இலைகள், சண்பகம், தாமரை மலர்களால் அர்ச்சித்து அகிற்புகை காட்டி, நட்சத்திரதீபம் ஏற்றி, பலாப்பழம் மற்றும் பாயசன்னம், பரமான்னம் நைவேத்தியம் செய்து யசுர் வேதம் ஓதி வழிபட வேண்டும்.

ஆயத்தம் செய்யாதவனுக்கு அனைத்தும் திடீர் மரணமே.

### மூன்றாம் ஜாமம்

தேன் அபிஷேகம் செய்து வெண்பட்டு அணிவித்து, கோதுமை அட்சதையிட்டு, மாணிக்காபரணம் சாற்றி, முட்கிலுவை, வில்வம் அறுகு இலைகளாலும், செங்கழுநீர், அத்தி, பிச்சி பூக்களாலும் அர்ச்சித்து, கஸ்தூரி கலந்த சந்தனம், பச்சைக் கற்பூர தூப மூட்டி, பஞ்சமுக தீபம் காட்டி இருசாரன்னம், மாவும், நெய்யும் சேர்த்த பலகாரங்களைப் படைத்து சாமவேதம் பாடிச் சிவப்பரம்பொருளை வழிபடவேண்டும்.

### நான்காம் ஜாமம்

கருப்பஞ்சாறு அபிஷேகம் செய்து, நீலப்பட்டு அணிவித்து, அரிசி, உளுந்து, பயறு போன்றவற்றை அட்சதையாக இட்டு, முத்தாபரணம் சாற்றி, விளாஇலை, நந்தியாவர்த்தம், நீலோற்பலம் போன்ற நறுமண பூக்களைச் சாற்றி புனுகு சேர்ந்த சந்தனம் குங்குமப்பூ தூபமூட்டி, வில்வ தீபமேற்றி சுத்தான்னம், கோதுமை சர்க்கரை, நெய் சேர்ந்த உணவு வகைகளையும் பலவகை பழங்களையும் படைத்து அதர்வண வேதமோதி வழிபடவேண்டும்.

### சிவ கிருபை கிடைக்கும்

நான்கு ஜாமங்களிலும் சிவபூசை செய்ய முடியாதவர்கள் இயன்ற வகையில் பூஜித்தால் சிவகிருபை நிச்சயம் கிடைக்கும்.

வேதம் ஓதத் தெரியாதவர்கள் தமிழ்வேதமென போற்றும் தேவாரம் போன்ற திருமுறைகளை ஓதலாம். "நைவேத்தியம்" படைப்பவர்கள் தம் வசதிக்கேற்ப தமக்குப் பிடித்தவற்றைப் படைப்பதில் தவறில்லை என்று நந்திகேசுவர புராணம் கூறுகிறது. இந்த உண்மை அபிஷேகம், அலங்கார அணிகலன்கள் ஆகியவற்றுக்கும் பொருந்தும்.

நான்கு ஜாமமும் இறைவனின் அற்புதங்கள் பற்றிய கதைகளைக் காதுகுளிரக் கேட்கலாம்.

### உபவாசம்

முற்றிலும் உபவாசம் இருப்பதுதான் சிறந்தது. அது முடியாதவர்கள் முதலாவது ஜாமம் மட்டுமாவது உபவாசத்தை மேற்கொள்ளலாம். விரத சமயத்தில் பாலும் நீரும் பழமும் உண்பதற்கு உகந்தன. பலகாரம் உட்கொள்வது சரியல்ல.

சிவராத்திரி முடிந்த மறுநாள் மகேசுவர பூஜை தினமாகும். அன்று பாரணை எனப் படும். உபவாசத்திற்குப் பிறகு உட்கொள்ளும் முதல் உணவை உட்கொள்ள வேண்டும். பிறகு பகல் பொழுதை சிவபுராணங்களைக் கேட்டு அல்லது சொல்லி சிவசிந்தனையில் கழிக்க வேண்டும். இரவில் உணவின்றி உறங்கச் செல்ல வேண்டும்.

### அடிமுடி தேடியது

சிவபிரானின் அடியும் முடியும் தேடிச் சென்ற திருமாலும் பிரமனும் அவை தென்படாமையால் திகைத்து நின்றனர்.

*கடவுளை வஞ்சிக்க நினைப்பவன் தன்னைத்தானே வஞ்சித்துக் கொண்டவன்.*

அப்போது உருவிலி ஆகிய எம்பிரான் ஜோதி வடிவினராகத் தோன்றுகிறார். உருவிலியான சிவன் அருவுருவமாகிய லிங்க வடிவத்தில் லிங்கோற்பவ காலத்தில் தோன்றியதால் இது மகா சிவராத்திரி என்பர் சிலர்.

மேலே குறிப்பிட்ட காரணங்கள் சிவராத்திரிக்குச் சொல்லப்பட்டாலும் உயிர்களின் துன்ப நீக்கத்திற்கும் மன மாசு அகலவும் அவை குறிக்கோளாவதை உணரலாம்.

"உருவமற்ற முழுமுதற் கடவுள் பக்தர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி, அருபத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் இடையே உள்ள ஜோதிர்லிங்கமாகக் காட்சி அளித்த நன்னாளே மகா சிவராத்திரி.

இந்தப் புனிதமான தினம் பிரார்த்தனைக்கும் தியானத்துக்கும் சிறந்த நாள். அன்று நடு இரவில் பரமசிவன் லிங்கோற்பவராகத் தோன்றுகிறார்.

எம்பெருமானை நாள்தோறும் நினைக்காமலிருந்தாலும் இந்த சிவராத்திரி நன்னாளிலாவது நினைத்து அவரது அருள்பிரவாகத்துக்கு பாத்திரமாவோமாக.

## செல்வச் சந்நிதியானின் செயற்கரம் நம் மோகனதாஸ் சுவாமிகள்



மனிதம் தொலைந்து வரும் சமுதாயத்திலும்
மகான் ஒருவர் மௌனமாய் வாழ்கின்றார்
பல்லின மக்கள் வாழும் இலங்கைத் தீவிலும்
இனம், மதம், மொழி கடந்து திகழ்கின்றார் - அவரே
நம்மவர் மோகனதாஸ் சுவாமிகள்.

பட்டங்களால் பலர் பெருமை கொண்டனர்
சிலரே பட்டங்களுக்கும் பெருமை கொடுத்தனர்
சந்நிதியானின் செயற்கரம் நம் சேவையின் நாயகனிற்கு
டாக்டர் பட்டம் வழங்கி பேறடைந்தது தமிழ்நாடு பல்கலை
தனக்குத் தானே பெருமை சேர்த்தது டாக்டர் பட்டம்.

மண்ணுலக மாந்தர்க்கான தன் கருணைமிகு கடமைகளை - கந்தன்
கச்சிதமாய் முடிக்கின்றான் பக்தன் மோகனதாஸ் சுவாமியூடாய்
குருவருளும் திருவருளும் என்றும் கூடவே இருப்பதால்
இல்லையும் இயலாமையும் என்றும் இல்லவே இல்லை - இவரின்
நல் எண்ணங்கள் யாவும் இங்கு திண்ணமாய் ஈடேறும்.

அன்பும் அன்னமும் கல்வியும் கலாசாரமும்
நாடிவரும் நலிவுற்றோருக்கு நன்மை தரும் நல்வாழ்வும் - என
காலத்தின் தேவையறிந்த நம் சுவாமியின் சேவையால்
இன்றும் உயிர்த்திருக்கின்றது கந்தசுவாமியின் வாசகம் - அதுவே
எங்களின் யாசகம். "யாமிருக்க பயமேன்" "கந்தனிருக்க கவலையேன்"

— வெ. சண்முகநாதமுதலி —

ஒருமுறை ஏமாற்றுபவன் எப்போதும் சந்தேகிக்கப்படுவான்.

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## எட்டாம் அதிகாரம்

## இன்புறு நிலை

**ஞானியர் நாடுவது:**

உலகத் தொடர்பை விடுத்து நிட்டை கூடி நிற்றலையே ஞானியர் நாடுவர். அவர்க்கு உடம்பும் மிகையாகும். அவர் உடம்பிற் கட்டுண்டிருத்தலைச் சிறிதும் பொறார். உடம்பைப் பெரிய சுமையாகக் கருதுவர். இந்நிலைக்கு ஓர் உவமை கூறலாம்.

ஊரின் புறத்தே ஓர் இடுகாடு. அதனை நோக்கி விரைந்து வருகிறான் ஓர் ஆடவன். அவன் கையில் ஒரு சவம்! அவன் கூலிக்காக அதைச் சுமந்து வருகிறான். இடுகாட்டில் அதைச் சேர்த்துவிடவேண்டும். அவ்வளவே அவன் வேலை. மற்று, அவனுக்கும் அச்சவத்துக்கும் வேறு எவ்வித ஒட்டும் இல்லை; உறவும் இல்லை. அப்பிணச் சுமையை எப்போது கீழே இறக்கலாம் என்ற விரைவே அவன் உள்ளத்தில் நிறைந்திருக்கிறது. அவனது உள்ள நிலை போன்றது ஞானிகளின் நிலை.

பிணத்தைச் சுமந்து செல்பவனுக்கும் அப்பிணத்திற்கும் என்ன தொடர்போ அன்ன தொடர்பே தமக்கும் தம் உடம்பிற்கும் என்று கருதுவர் ஞானிகள். அதனால் தம் உடம்பை விரையக் கழித்தலையே அவர்கள் கருதியிருப்பர். மாணிக்கவாசகர், "தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண் வலையே" என்று கூறுவது உடல் வாழ்க்கையில் அவருக்கிருந்த வெறுப்பினைப் புலப்படுத்தும். "வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்" என்று கூறுவது, நிட்டையிற் புகுந்து சிவானந்தப் பேற்றைப் பெறுதலில் அவருக்கிருந்த விரைவினைப் புலப்படுத்தும்.

ஞான நிட்டையாகிய இது மோன சமாதி எனப்படும். பேசா அநுபூதி என்பதும் இதுவே. இது மனம் வாக்குகள் செயற்படும் நிலை அன்று. ஆதலால் இதில் விளையும் சிவானந்தம் அனுபவத்தால் அறியப்படுமேயன்றி, அயலவர் உரையால் அறிய வராது. "மருவி இருவரும் புணரவந்த இன்பம் வாயினாற் பேசரிது; மணந்தவர் தாம் உணர்வர்" என்றது இது பற்றியேயாம்.

**ஞானமும் அன்பும்:**

ஞானமாவது பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு அறிவது. அவ்வாறு அறியும் பொழுதே, துன்பந்தரும் பொருளை விட்டு நீங்கி இன்பம் தரும் பொருளைப் பற்ற முடியும். எனவே

உறுதிகள் அளித்து ஒன்றும் செய்யாதவன் புதர் மண்டிய பூங்கா.

இன்பப் பொருளைப் பற்றுதற்கு ஏதுவாக இருப்பது ஞானம் என்பது விளங்கும். ஆயினும் அந்த ஞானமே இன்பத்தைத் தந்துவிடாது. ஞானத்தால் அவ்வின்பப் பொருளைப் பற்றியவன் அதனை மேலும் மேலும் விரும்பும் போதே அவனது உணர்வு அப்பொருளிடத்தில் அழுந்தி இன்பத்தை அனுபவித்தல் கூடும். அந்த விருப்பமே அன்பு. அந்த அன்பு எந்த அளவிற்கு மிகுகின்றதோ அந்த அளவிற்கு இன்பமும் மிகுந்து செல்லும். இதனால், ஞானத்தால் வருவது அன்பு என்பதும், அந்த அன்பினால் விளைவது இன்பம் என்பதும் பெறப்படும். எனவே, நிட்டை நிலையில் உள்ள பெரு மக்கள் சிவம் ஒன்றையே அறிந்து, அதன்பால் மேலும் மேலும் அன்பு மீதூரப்பெற்று, அதனிடத்தே அழுந்தி ஆராத இன்பத்தைத் துய்த்து நிற்பர் என்பது இனிது விளங்கும்.

இங்கே ஒன்றைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஞானமும் அன்பும் இணை பிரியாதவை. இவையிரண்டும் ஒன்றை ஒன்று விட்டு நிற்பன அல்ல. ஒன்றில் ஒன்று கலந்தேயிருக்கும். முற்றிய ஞானத்தின் பயனே பக்தி என்பதைத் தெளிவுறுத்தி,

"ஞானம் ஈசன்பால் அன்பே
என்றனர் ஞானம் உண்டார்"

(திருஞானசம்பந்தர் புராணம் செ. 843)

என்று சேக்கிழார் பெருமான் அருளிச் செய்துள்ளமை காணலாம். இப்பிறப்பில் பத்தி நிலையில் உள்ளவரும் கூட முற்பிறப்பில் ஞான நிலையில் நின்ற தொடர்புடையவர்களே என்பது சிவநெறிக் கொள்கையாகும்.

சில சமயத்தார் ஞானம் வேறு, பக்தி வேறு என்று கொண்டு, ஞானத்தையே உயர்த்திக் கூறுவர்; ஞானம் ஒன்றே முத்திக்கு வழி என்றும் வலியுறுத்துவர். ஞானத்தை மட்டும் வேண்டிப் பத்தியை வேண்டாத அவர்கள் கொள்கையைச் சித்தாந்த சைவம் ஏற்பதில்லை. "ஞானத்தால் வீடு" என்று நாமும் கூறுவோம். ஆனால், அதற்கு நாம் கூறுகிற பொருள் அவர்கள் கூறுவது போலன்று. ஞானம் அன்பாக வடிவெடுத்து இறைவனிடத்து அன்பு மீதூரப் பெற்று அவன் திருவடிக்கீழ் சென்று புகுதலே வீடு என்பது நமது கொள்கையாகும்.

## தொகுத்துக் கூறுதல்:

மேற்கூறிய செய்திகளைக் கருத்திற் கொண்டு பயின்றால் இவ்வதிகாரத்தின் பொருள் முழுதும் இனிது விளங்கும். செய்யுள் அமைந்துள்ள வரிசை முறையில் அவற்றின் கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

தன்முனைப்போடு "யான் செய்கின்றேன்" என்று எண்ணிச் செய்வது, திருவருளைப் பின்னிட்டுத் தான் முற்பட்டு நிற்றலாகும். இவ்வாறு தன்னை முன் நிறுத்திச் செயற்படுவோர் முன்புகுவார் ஆவார். "நாம் செயற்படுவது திருவருளால்" என்பதை மறவாமல் நினைத்து, தமது செயலை இறைவனது பணியாகக் கருதிச் செயற்படுதல், தன்னைப் பின்னிட்டுத் திருவருளை முன்னிட்டு அதன் வழிநிற்றலாகும். இவ்வாறு நிற்போர் பின் புகுவார் ஆவார். முன் புகுந்தவராகிய அவரே பக்குவம் வந்த காலத்தில் திருவருளின் பின் புகுந்து பேரின்பத்தை எய்துவர்.

உயிர் அருளோடு கூடி ஒற்றுமைப்பட்டிருப்பது அருள்நிலை எனப்படும். அருள் இறைவனது ஒளியாதலின் அவ்வொளி உயிரைப் பற்றியுள்ள மல இருளை ஓட்டும்.

*வார்த்தைகள் வெறும் நீர்க்குமிழிகள், செயல்களே தங்கத் துளிகள்.*

இவ்வாறு உயிர் அருளைச் சேர்ந்ததன் பயனாகப் பாசத்திலிருந்து விடுபடும். இதனால் துன்பம் நீங்கும். இதுவே முடிந்தநிலை அன்று. அறிவின் பயன் இன்பம் தரும் பொருளைச் சார்ந்து இன்புறுதலாகும். இன்பப் பொருளாய் இருப்பது சிவம். சிவம் பகலவன் போலவும், அதன் அருள் பகலவன் ஒளி போலவும் இருப்பவை. கண்போல இருப்பது உயிர். கண் பகலவனது ஒளியைப் பெறுவது போன்றது உயிர் அருளோடு பொருந்துவது. ஒளியைப் பொருந்திய கண் அதனால் பகலவனை நோக்கி அந்த வளப்பெருங் காட்சியில் அழுந்தி நிற்பது போன்றது உயிர் அருள்வழியாகச் சிவத்தையறிந்து இன்புறுவது. இதனால், அருள்நிலையில் இன்பம் இல்லை என்பதும், சிவத்தோடு கூடுவதே இன்பநிலை என்பதும் விளங்கும். உயிரும் அருளும் சேர்வது இருவர் மடந்தையர் சேர்வது போன்றது என்றும். உயிரும் சிவமும் சேர்வது ஒருவனும் ஒருத்தியும் தம்மிற் கலந்து இன்புறுவது போன்றது என்றும் ஆசிரியர் கூறுகிறார்.

ஒருவனும் ஒருத்தியும் கூடும் கூட்டத்தில் அவ்விரு பாலாரும் இன்புறுகின்றனர். இவ் உவமையின்படி பார்த்தால் உயிர் இன்புறுவதுபோலச் சிவமும் இன்புறுதல் வேண்டும். சிவத்திற்கு இன்ப நுகர்ச்சி உண்டோ? என்ற ஐயத்தைப் போக்குகிறார் ஆசிரியர். இன்ப நுகர்ச்சி என்பது உயிருக்கேயன்றிச் சிவத்திற்கு இல்லை என்று தெளிவுபடுத்துகிறார்.

சொற்புணர்ச்சி ஒன்றைக் காட்டி, உயிரும் சிவமும் இயைந்து ஒன்றாய் நிற்றலை விளக்குகிறார். தாள், தலை என்னும் இரு சொற்கள் புணர்ந்து தாடலை என ஒரு சொல்லாய் நிற்றல்போல உயிரும் சிவமும் இயைந்து பிரிப்பின்றி நிற்கும். முத்தியில் இன்பத்தைக் கொடுப்பதாகிய சிவமும், அவ்வின்பத்தைத் துய்ப்பதாகிய உயிரும் ஆகிய இரு பொருளும் உள்ளனவாயினும் இரண்டு என்று சொல்ல வாராதபடி ஒற்றுமைப் பட்டிருக்கும். இந்நிலையே ஏகம் அல்லது ஒன்றாதல் எனப்படும்.

அபேத வாதம் கூறுவோர் உயிரும் இறைவனும் பொருளால் ஒன்றே என்பர். ஒரு பொருளே என்றால் ஒன்றுதல் என்பது எவ்வாறு நிகழும்? இரண்டு பொருள் இருந்தால்தான் ஒன்றுதல் நிகழமுடியும். மேலும், அவர்கள் கூறுவதுபோல ஒன்றே எனில், பெறுவானும் இல்லை. இன்பப்பேறும் இல்லை என்பதாய் முடியும். ஆதலால் அபேதம் எனப்படும் ஒருமைக் கொள்கை பொருந்தாது.

இனி, பேதவாதம் கூறுவோர் உயிரும் இறைவனும் இருளும் ஒளியும்போல முற்றிலும் வேறுபட்ட இருவேறு பொருள்கள் என்பர். இருவேறு தன்மையுடைய பொருள்கள் எக்காலத்திலும் ஒன்றுதல் இயலாது. ஒன்றுதல் இல்லையாயின் அனுபவித்தலும் இல்லையாம். ஆதலால் பேதம் எனப்படும் இருமைக் கொள்கையும் பொருந்தாது.

சித்தாந்த நெறிப்படி, உயிரும் சிவமும் உப்பும் நீரும்போலத் தம்மில் இயைந்து ஒன்றாதற்குரிய இரு பொருள்கள். உப்பு, நீரில் கலந்து வேறு காணப்படாது நிற்றல் போல உயிர் சிவத்தோடு கலந்து ஒன்றாய் நிற்கும். அங்கும் உயிர் உள்ளதாயினும், தான் என்ற உணர்வு தோன்றாமல் தன்னை மறந்து பேரின்பத்தில் மூழ்கியிருக்கும். ஆதலால் உயிர்வேறு காணப்படாமல் சிவம் என்ற ஒரு பொருளே உள்ளது போலத் தோன்றும். இதுவே முத்தியில் உயிரும் சிவமும் நிற்கும் முறையாகும்.

சிவத்தை அடைவிக்கும் ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என நான்கு படிநிலைகளாய் நிகழும். கேட்டல், சிந்தித்தல் என்னும் படிநிலைகளில்

நிற்போருக்கு யான் எனது என்னும் பற்று அறுதல் இல்லை. உலகப் பழக்கத்தை அவர்களால் முற்றிலும்விட இயலாது; திருவருளை உறுதியாகப் பற்றி நிற்றலும் இயலாது. இவர்களைப் "பற்றார்" என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். இந்நிலையைக் கடந்து, தெளிவுணர்வை உற்றுத் திருவருளோடு ஒன்றி நிற்பவர்களை "உற்றார்" என்று குறிப்பிடுகிறார். இதற்கு மேல் திருவருள் வழியாகச் சிவத்தைக் கண்டு அதனோடு கலந்து ஆனந்த வெள்ளத்துள் அழுந்தி நிற்கும் நிலையே நிட்டை எனப்படும். நிட்டையாகிய சிவப்பேற்றினை எய்திய அவர்களையே "பெற்றார்" என்று குறிப்பிடுகிறார்.

இவர்களுள், பற்றாராய் நிற்போர் உலகியலை விடுத்துத் திருவருளை முற்றாக உணர்ந்து அருள் நிலையைத் தலைப்படுவதற்கு என்ன வழி என்பதை அடுத்துக் கூறுகின்றார். தன் செயல் அறுதலே அதற்கு வழியாகும். பேய் பிடிக்கப்பட்டவருக்குத் தன் உணர்வு என்பது இருக்காது. அதுபோன்ற நிலையை ஆன்மா அடைந்து தன் செயல் அற்று நின்றால் திருவருள் வெளிப்பட்டு அவரைத் தன் வயப்படுத்திக்கொள்ளும்.

இவ்வாறு அருள்நிலையைத் தலைப்பட்டோர் அப்பால் ஆனந்த நிலையாகிய அதீத நிலையை எய்துவார். அதுவே நிட்டை நிலையாகும். இன்ப வடிவாகிய சிவத்தில் அழுந்தி நிற்கும் அவர்தம் உணர்வில் அம்மெய்ப்பொருள் ஒன்றுமே தோன்றும். பிறிதொன்றும் தோன்றாது. முன்பு தாம் மேற்கொண்டு செய்து வந்த யோகம், கிரியை, சரியை முதலிய சாதனங்கள், உறங்கியவன் கையிலுள்ள பொருள் எப்படித் தானே நழுவுமோ அப்படியே அவரறியாமலே அவரை விட்டு நீங்கும். அவற்றை இனி மேற்கொள்ள வேண்டியதில்லை என்று எண்ணி அவற்றை விடுவதில்லை. அவற்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவரிடத்தில் எழுவதில்லை.

இந்த இன்புறு நிலையைத் தலைப்பட்ட ஞானியர் சிவத்தை இறுகப் புல்லிப் புணர்ந்து தம்மை மறந்து தமது அறிவையும் மறந்து பேரின்ப வெள்ளத்துள் மூழ்கித் திளைப்பர். நுகர்பவன், நுகர்ச்சி அறிவு, நுகரப்படும் பொருள் ஆகிய மூன்றும் வேறு வேறாய் உள்ள தன்மை தோன்றாத, உரை உணர்வுக்கு எட்டாத இன்ப நிலை அது. "யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே" என்று சொல்வது இந்நிலையையே ஆகும்.

இன்புறு நிலைக்கு அடிப்படை இறைவனிடத்துச் செய்யும் அன்பாகும். இறைவன் செய்துவரும் இடையறா உதவியை நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் நனைந்து நனைந்து அவனிடத்து இடையறாப் பேரன்பு செய்தலே பேரின்பத்திற்கு வழி என்று சொல்லி முடிக்கின்றார் ஆசிரியர்.

(தொடரும்...

## பணிவு... எளிமை!


ஒரு மனிதன் வளரும்போது, அவன் தன்னைத் தானே பூரணமானவனாக ஆக்கிக்கொள்ளும் உற்சாகமும் வளர்கிறது. இதனூடே, தன்னைச் சூழ்ந்திருக்கும் இயற்கையின் வெளிப்பாடுகளை அறியவும் அவன் கற்றுக்கொள்கிறான். ஒருவன் தனது பூரணத்துவத்தை முழுமையாக உணரவும் அதன்மூலம் தன்னம்பிக்கை பெறவும் யோகா கலை உதவுகிறது. அப்படி பூரணத் தன்மையை உணர்ந்தவர்கள், தான் இதுவரை அறிந்திராத புதிய விஷயங்களைத் திறந்த மனத்துடன் அணுகத் தயங்குவதே இல்லை. ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளும் முன்பே அவற்றைப்பற்றி தீர்மானம் செய்துவிடும் மனநிலை அவர்களுக்கு இருக்காது. திறந்த மனமும், பணிவும், எளிமையும் பெருந்தன்மையும் அவர்களிடம் குடிகொள்கின்றன. *-சக்தி-*

*ஊக்கத்தோடு உழைத்தால் ஆக்கம் தேடிவரும்.*

# சத்திய ஞான சன்மார்க்க நெறியில் வாழ்ந்து காட்டிய வள்ளற் பெருமான்

– திரு சு. சிவராசா அவர்கள் –

உலகில் பல மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தாமே உண்மைச் சமயம் என்பதில் உறுதியாகவும், அதனைப் பரப்புவதில் ஊக்கமாகவும் உள்ளனர். சமயவாதிகள் தத்தம் மதங்களால் தட்டிமுக்குப் பட்டிருக்க.... என்பார் மணிவாசகர். இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் சிக்காரான கட்டுப்பாடுகள், போதனைகள், பரப்புரை என்பன கிடையாது. அவரவர் தத்தமது நிலமைக்கும், பக்குவத்திற்கும் ஏற்ற வகையில் வழிபடுவர். நீ, இறைவனை நோக்கி ஒரு அடி முன்னே வைத்தால் அவன் உன்னை நோக்கி நூறு அடிகள் வைக்கிறான் என்பார் சாயிபகவான். "எண்ணுவார் நெஞ்சினில் நன்னுவான் ஈசன்" என்பார் சிவயோக சுவாமிகள்.



இந்து சமயத்தில் மெய்மையையும், மேன்மையையும் பறைசாற்றுவது. அது அளவற்ற ஞானிகளையும் சித்தர்களையும், சீவன் முத்தர்களையும் உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. இந்த வகையில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மகா புருஷர் இராமலிங்க சுவாமிகள் ஆவார். கோவில் நகரமான சிதம்பரத்திற்கு வடமேற்கே மருதூர் என்னும் கிராமம் உண்டு. அவ்வூரில் கணக்குவேலை பார்த்து வந்தவர் இராமையா. இவரின் மனைவி சின்னம்மை. இவர்களிற்கு 5ஆவது பிள்ளையாக 1823.10.05இல் இராமலிங்கன் அவதரித்தார். குழந்தைக்கு 5 மாதங்கள் ஆகின்றபோது சிதம்பர தரிசனம் காண பெற்றோர் எடுத்துச் சென்றார். சுப்பையா தீட்சிதர் தீபாராதனை காட்டியபோது குழந்தை இறைவனை பார்த்து சிரித்தது. இதைக் கவனித்த தீட்சிதர் அப்போது இது கடவுள் குழந்தை என்று கூறி ஆசீர்வதித்தார்.

இராமலிங்கத்தின் ஆறாவது மாதத்தில் தந்தையார் இறந்தார். பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்காக தாயார்

சென்னைக்கு வந்தார். ஐந்தாம் பாராயத்தில் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதியார் என்பவரின் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். பள்ளிப்படிப்பில் மனம் பதியவில்லை. கோவி லிற்கும் குளக்கரைக்கும் சென்று காலத் தைப் போக்கினார். இதை அறிந்த அண்ணன் வீட்டைவிட்டுத் துரத்தி விட்டார். மாலை வேளைகளில் திருட்டுத்தனமாக வந்து அண்ணியார் கொடுத்ததைச் சாப்பிட்டுவிட்டுச் சென்றுவிடுவார். ஒருநாள் ஆறிய உணவைக் கொடுக்கும்போது அண்ணியார் அழுதே விட் டார். அதன் காரணத்தை அறிந்து இராம லிங்கம் வருந்தினார். தான் இனிமேல் கவன மாகப் படிக்க ஒப்புக் கொண்டார். மீண்டும் வீட்டு மாடியில் ஒரு இடம் கிடைத்தது. உள்ளே சென்றவர் தனது வழிபடு தெய்வ மான முருகனை நினைந்து, "நீயே எல்லா வற்றையும் எனக்குக் கற்பிக்க வேணும்" என்று இரங்கி, அழுது வேண்டினார். அறை யில் இருந்த நிலைக்கண்ணாடியில் முருகன் முதற்காட்சி கொடுத்து அருளுபதேசம் செய் தான். இலக்கண, இலக்கியங்களையும் பிற வற்றையும் முருகன் அருளால் ஓதாமலே உணரப்பெற்றார்.

அண்ணன் சபாபதி சொற்பொழிவுகள் ஆற்றி சீவனம் நடத்தி வந்தார். ஒருநாள் சோமு என்கின்ற தனவந்தர் வீட்டில் சொற் பொழிவு ஏற்பாடாகி இருந்தது. சுகயீனம் காரணமாக அவரால் போகமுடியவில்லை. அதனால் தம்பியிடம் தகவல் தெரிவித்து வரும்படி சொல்லி அனுப்பினார். அண்ணனுக் குப் பதிலாக "நீரே பிரசங்கம் செய்யும் என்று" அங்கே உள்ளவர்கள் கேட்டனர். அவர் ஆற்றிய பிரசங்கத்தைக் கேட்டு எல் லோரும் மகிழ்ந்தனர். சில நாட்களின் பின்னர் கந்தகோட்டம், திருமுல்லைவாயில், திருவலி தாயம் முதலிய தலங்களிற்குச் சென்று பதிகங்கள் பாடினார். திருவொற்றியூருக்கு சென்று படம்பக்கநாதரையும் வடிவுடை அம்மையையும் வழிபட்டார். இரவு நெடுநேரம் ஆன பின்னர் வீடு திரும்பினார். எல்லோரும் உறங்கிவிட்டதால் பசியுடன் திண்ணையில் படுத்துக் கொண்டார். வடிவுடை நாயகி அவ ருடைய தமக்கையாக வந்து உணவு ஊட்டி சென்றாள். ஒருநாள் திருவொற்றியூர் வாகன சாலையில் பெருமானார் இருந்ததை அறி யாத பணியாள் கோவிலைப் பூட்டிக்கொண்டு சென்று விட்டார். பசியால் வாடியவருக்கு அன்று ஒற்றியூர் இறைவன் உணவு ஊட்டி மறைந்தார்.

ஒற்றியூர் செல்லும் வீதியில் இருந்த படி நிர்வாண சுவாமி ஒருவர் போவோர் வரு வோரை மிருகங்களின் பெயரைச் சூட்டி அழைத்துக்கொண்டு இருந்தார். வள்ள லாரைப் பார்த்து "உத்தம மனிதன்" போகி றான் என்றானாம். 1849இல் தொழுவூர் வேலா யுதனார் என்பவர் முதல் மாணாக்கனாகச் சேர்ந்தார். 1850இல் அக்காள் மகளான தன கோடியை திருமணம் செய்தார். வள்ளலார் 1851 தொடக்கம் பல நூல்களையும் பதிப்பித் துள்ளார். "ஒழிவிலொடுக்கம்", "தொண்டமல சதகம்", "சின்மயதீபிகை", "மனுமுறைகண்ட வாசகம்" முதலியன அவற்றுள் சிலவாகும்.

1858இல் சென்னையில் இருந்து தல யாத்திரையாக சில தொண்டர்களுடன் புறப் பட்டார். சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், திருவாரூர், மதுரை முதலான பதி களைத் தரிசித்துத் கொண்டு தனது தமய னார் வசித்து வந்த கருங்குழிக்கு வந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த அண்ணன் பரசுராமன் இறந்து போனார். அவரின் முதலாளி ஆன வேங்கடர் என்பவர் இராமலிங்கரையும் மற்ற தொண்டர்களையும் தமது இல்லத்தில் தங்க வைத்துக் கொண்டார். அக்காலத்தில் சிதம் பரம், திருமுதுகுன்றம், திருவண்ணாமலை, திருவதிகை முதலிய தலங்களைத் தரிசித்தார்.

*நரகத் துயரத்தையும் அன்பால் ஆனந்தப்படுத்தலாம்.*

இரவில் விழித்து இருந்து பாமாலைகள் எழுதினார். அகல் விளக்கிற்கு ஊற்றும் எண்ணெய்க் கலயம் உடைந்திருப்பதைக் கண்ட வேங்கடரின் மனைவி புதிய கல யத்தை நீர் நிரப்பி வைத்துவிட்டுச் சென்றார். மண்கலத்தைச் சரிப்படுத்துவதற்கு இவ்வாறு செய்தார்கள். அன்று இரவு அந்தத் தண்ணீரை ஊற்றி அகல் விளக்கை ஏற்றி பாமாலை களை எழுதினார். மறுநாள் இந்த அதிசயத் தைக் கண்டு வள்ளல் பெருமானை எல் லோரும் போற்றி மகிழ்ந்தனர்.

கடவுள் ஒருவரே, அவர் அருட்பெருஞ் சோதியர், சிறுதெய்வ வழிபாடு கூடாது. தெய் வத்தின் பெயரால் பலியிடக்கூடாது. புலால் உண்ணக்கூடாது, எந்த உயிரையும் கொல் லக்கூடாது. சாதி, சமய, மத, இனபேதம் பார்க்கக்கூடாது. எல்லாரையும் நம் சகோதர ராகக் கருதுதல் வேண்டும். எல்லா உயிரை யும் தம் உயிர்போல எண்ணல் வேண்டும். ஏழைகளின் பசியைப் போக்குவதையே இறை வழிபாடாகக் கொள்ளவேண்டும் முதலிய நோக்கங்களை முன்நிறுத்தி 1865இல் சமரச சன்மார்க்க சங்கத்தை ஆரம்பித்தார். ஏழை கள், பசித்தோர், நோயாளர் போன்றவரைக் கண்டு இரங்கினர். வடலூரின் மக்கள் உவந்து கொடுத்த காணி நிலத்தில் 1867இல் வைகாசி மாதம் 11ம் நாளில் சத்திய தருமச்சாலை யைத் தொடக்கினார். தருமச்சாலையில் அன்று மூட்டப்பட்ட அடுப்பு இன்றும் அணையாமல் எரிகிறது. எப்போது யார் வந்து கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் உணவு வழங் கப்பட்டு வருகின்றது. ஏழைகளும் எளியோ ரும் இயலாதோரும் பசி நீங்குகின்றனர். பசி போக்கலும் கொலை, புலை நீக்கலுமாகிய ஜீவகாருண்யமே இச்சாலையின் பணியாக இருந்து வருகின்றது.

வள்ளல் பெருமான் தம்முடைய ஆன் மீக முதிர்ச்சிக்கும், மக்கள் சேவைக்குமாக தோற்றுவித்த அமைப்புக்கள் மூன்று. அவை சன்மார்க்க சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை என்பனவாம். ஞானசபை எண்கோண வடிவமுடையது தாமரைப்பூ பூத் தது போன்ற அமைப்புடையது. இது தென் திசை நோக்கிக் கட்டப்பட்டுள்ளது. இதில் உருவம் எதுவும் கிடையாது. ஜோதிதான் கடவுள். அதற்குமுன் ஏழு திரைகள் தொங்க விடப்பட்டுள்ளன. இத்திரைகளை விலக் கினால் ஜோதி தரிசனம் தெரியும். இங்கு சமய சடங்குகள் இல்லை. மாதா மாதம் பூசத்திலும், தைமாதம் தைப்பூசத்திலும் ஜோதி தரிசனம் நடைபெறுகின்றது. எம்மை இறை ஜோதியைக் காணமுடியாமல் ஆசாபாச திரைகள் தடுக்கின்றன. அவற்றை விலக்கி ஜோதி தரிசனம் பெறுவதே இதன் பொரு ளாகும். 1870இல் சன்மார்க்க சபை நிறுவப் பட்டு தைப்பூசத்தில் தரிசனமும் காட்டப்பட் டது. 1873 ஐப்பசி கார்த்திகை நாளில் தீபம் ஏற்றி மக்களை ஜோதி வழிபாட்டிற்கு அழைத்தார்கள்.

இவருக்கு சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகம் எனும் முத்தேக சித்தி கிடைத்தது. நரை, திரை, மூப்பு, பிணி, பசி, சாயை, கால்தடம், இச்சை, தாகம், வியர்வை இல்லாத சுத்ததேகம் உருவாகும். இதனால்த் தான் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற ஆன்ம தயவின் முதிர்ச்சி கிடைக்கப் பெற்றார்கள். இத்தகைய தேக மாற்றத்தைப் பெற்றதால், 1874ஆம் ஆண்டு தைமாதம் 19ம் நாள் சித்திவளாகத் திரு மாளிகையின் அறையில் புகுந்து அரும்பெருஞ் ஜோதியோடு மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று நிறைந்து விட்டார்.

"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும்" என்று அருளியவாறு வாழ்ந்து காட்டிய வள்ளற் பெருமானாரின் வாழ்வின் நிகழ்ந்த அற்புதங்கள், அதிசயங்கள், பெற்ற

*சிறிய துன்பங்கள் பேசுகின்றன. பெரிய துன்பங்கள் மௌனமாக இருக்கின்றன.*

பெரும்பேறுகள் மகத்தானவை. அருட்பெருஞ் சோதியின் தனிப்பெரும் கருணையைப் பெற்று அச்சோதியோடு ஐக்கியமானார்.

நாம் வாழ்வில் ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கு சமய பெரியோர்கள் பல வழி களைக் காட்டித் தந்துள்ளார்கள். அதில் வள் ளல் காட்டிய வழியும் ஒன்றாகும். இந்த மானிட சரீரத்தை வீணடிக்காமல் உடல், மனம், உயிர் என்னும் மூன்றினாலும் எமக்குப் பொருத்த மான வழியில் நின்று இறை இன்பத்தில் இருக்கும் பெருவாழ்வைப் பெறுவோமாக. வள் ளல் பெருமானின் அனுபூதி நிலையில் அருளப்பெற்ற பாடல்கள் திருவருட்பா எனப் போற்றப்படுகின்றன. திரு அருள் பா- திருவருட்பா. இறைவன் திருவருள் பெற்றுப் பாடப்பெற்ற பாக்களாதலின் இது திரு வருட்பா எனப் பெயர்பெற்றது. வள்ளல் பெரு மானால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே திருவருட்பா. வள்ளல் பெருமான் பாடியருளிய பாடல் தொகுப்பிற்குத் திருவருட்பா எனப் பெயரிட்டவர் தொழுவூர் வேலாயுதனார். இ்.து ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பெற்றுள் ளது. இதில் 1385 பாடல்களும் 5983 பாடல் களும் உள்ளன.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புருவாம் பரசிவமே.

வாடிய பயிரைக் கடண்டபோ தெல்லாம்
வாடினேன், பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர், என்
நேர் உறக் கண்டு உளம் துடித்தேன்
ஈடின் மானிகளால், ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

## எது சொந்தம்?

ஞானி ஒருவரிடம் வந்த பணக்காரர், "சுவாமி எனக்குச் சொந்தமான பொருட்கள் திருட்டுப் போய்விட்டன... அதனால் என் நிம்மதி போய்விட்டது... நீங்கள்தான் அவை திரும்பக் கிடைக்க வழி சொல்ல வேண்டும்...! என வேண்டினார். "திருட்டுப்போனவை நிஜமாகவே உன்னுடையவைதானா...? கேட்டார் ஞானி. செல்வந்தர் உடனே கோபமாகச் சொன்னார் "ஆமாம். அவை எல்லாமே என்னுடையவைதான்..." "அவற்றை நீ பிறந்தபோது கொண்டு வந்தாயா? அல்லது போகும்போது எடுத்துப்போவாயா? சிலகாலம் மட்டுமே உன்வசம் இருக்கப்போகும் பொருள்களை உனக்குச் சொந்தம் என்றும் அவற்றால்தான் உனக்கு நிம்மதி எனவும் சொல்கிறாயே, அது எப்படி? அமைதியாகக் கேட்டார் ஞானி. உணர்ந்த செல்வந்தர் நிம்மதியாக விடைபெற்றார். *-பக்தி-*

*ஒரு மிகச்சிறிய பழமொழியிலிருந்து மிகப்பெரிய ஆறுதல் உண்டாகலாம்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –
தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 07
## சரியாகப் புரிந்துகொள்ளும் தன்மை

### 21. பூரண விடையின் அடிப்படை.

முதலாவது அத்தியாயத்தில் அர்ச்சுனனது வினாக்கள் யாவும் அவனது ஆளுமையின் பல்வேறு மட்டங்களில் இருந்து எழுந்தவை ஆகும். எந்த எந்த மட்டங்களில் இருந்து அந்த வினாக்கள் எழுந்தனவோ அந்த அந்த மட்டங்களுக்குச் சரியாக விடையும் பொருந்துவனவாக இருக்கவேண்டும். அதனாலேதான் கீதை இரண்டாவது அத்தியாயத்திலேயே பொருத்தமானதும் சுருக்கமானதுமான பூரண விடை வழங்கியாயிற்று எனலாம். எனவே நாம் இப்போது ஒரு சரியான பூரண விடைக்கான அடிப்படைக்கு வந்துவிட்டோம். இனிவரும் அத்தியாயங்களில் அதன் விரிவையே நாம் காணப்போகின்றோம்.

### 22. சர்வரோக நிவாரணி.

நோய்கள் எமது உடலில் இருந்து மட்டும் தோன்றுகின்றன அல்ல என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அதேபோல எமது பிரச்சினைகளும் எமது இருப்பின் ஒரு மட்டத்தில் இருந்து மட்டும் தோன்றுவன அல்ல. நோய் எமது பூரண வாழ்க்கை நிலையில் உள்ள குறித்த ஒரு நிலையின் தன்மையை மட்டுமே சுட்டிக்காட்டும். அந்த நோய்க்கான மூலகாரணத்தை அறியாது விட்டால் அந்த நோயைக் குணப்படுத்த முடியாது. மனித ஆளுமை ஒன்றுபட்டதாய் இல்லாமல் சிதறுண்டு இருப்பதனாலேயே பிரச்சினைகள் மனிதர் களுக்கு உருவாகின்றன. அப்படியான ஆளுமை சிதறுண்ட ஒரு மனிதப் பிரதிநிதியாகவே அர்ச்சுனனைக் கீதை எம்முன் நிறுத்துகின்றது. அவனைப் போன்ற எல்லா மனிதர்களுக்கும் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய ஒரு சர்வரோக நிவாரண மருந்தையே கீதை பரிந்து உரைக்கின்றது.

### 23. அறிவில் நிலைபெற்றவன்.

தளம்பாத, உறுதியான, அறிவில் நிலைபெற்றவனைக் கீதை "ஸ்திதப் பிரக்ஞன்" என்று அழைக்கின்றது. இரண்டாவது அத்தியாயத்தின் இறுதியில் அவ்வாறான நோயற்ற மனிதன் இந்த உலகில் எப்படிப் பேசுவான் எவ்வாறு இருப்பான், எவ்வாறு நடந்துகொள்வான் என்பதைக் கீதை விளக்குகின்றது. அந்த மனிதன் நடந்து கொள்ளும் விதத்தை நாம் இப்போதைக்கு விபரமாகப் பார்க்கப்போவதில்லை. நாம் இதுவரை கற்றுக்கொண்டதில்

இருந்து அந்த விபரங்களை ஊகித்துக்கொள்ள முடியும். அவ்வாறான பூரண மனிதன் ஒருவன் இவ்வுலகில் எவ்வாறு நடந்து கொள்வான் என்பதை எம்மில் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளக்கூடியதாகவே இருக்கின்றோம். அதற்கு ஒரு வியாக்கியானம் வழங்கவேண்டிய அவசியம் இல்லை.

**24. முழுதும் உண்மை.**

ஸ்திதப்பிரக்ஞன் என்னும் அறிவில் நிலைபெற்றவனுக்கு எல்லாமே வரவேற்கப்படக் கூடியனவாயும் முற்றுமே சரியானவையாயும் அமையும். அந்த மனிதனுக்கு எல்லாமே நல்லவையாக இருக்கும். ஏனெனில் அவன் தன்னை இப்பிரபஞ்சத்தில் இருந்தும் வேறான ஒருவன் என்று நினைக்க மாட்டான். அவன் ஒரு தனி ஆள் இல்லை என்று பிரபஞ்சமாக வியாபித்துள்ளவனாக மாறிவிடுகின்றான். எனவே அவனுக்கு எல்லாமே வரவேற்கப்படக் கூடியனவாகவும், எல்லாமே ஆளற்ற நிலையில் ஒன்றுபட்டு விடுவதாகவும் வந்து அமைகிறது. அவனே ஸ்திதப்பிரக்ஞன் அல்லது ஞானி. எப்படி எல்லா ஆறுகளையும் சமுத்திரம் வர வேற்கின்றதோ, அவை எல்லாவற்றையும் தன்னுள்ளே ஏற்றுக்கொள்ளுகின்றதோ அது போன்றதே அந்த ஆளற்றவனின் பூரணத்துவமும் கருணையும் ஆகும். கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் அப்படியான பூரணத்துவம் அடைந்தவனை ஸ்திதப்பிரக்ஞன் என்று அழைக்கப்படுவதைக் காணலாம்.

**25. ஆச்சரியமான வினாவும் அற்புத விடையும்.**

நிலையான புரிந்துணர்வும், உலக விவகாரங்களினால் எள்ளளவும் கலங்காத உணர்வும் உடையவன் ஸ்திதப்பிரக்ஞன் ஆவான். அவனே ஆன்மீகத் துணிவு பெற்றவன். வேதாந்த தத்துவ பரிபாஷையில் அவனை ஜீவன் முத்தன் என அழைப்பர். இவ்வளவு ஓர் ஆச்சரியமான செய்தியைக் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் கீதாசிரியன் கூறிவிடு கின்றான். எனவே கீதையின் முதலாவது அத்தியாயத்தில் எடுத்துக்கொள்ளப்பெற்ற பிரச்சினை தான் எவ்வளவு ஆச்சரியமானது! அதற்குக் கீதாசாரியன் கிருஷ்ணன் வழங்கும் விடைதான் எவ்வளவு அற்புதமானது! அந்த அற்புத விடைக்குக் கடமை என்று பெயரிட்டு விடுகின்றான் கிருஷ்ண பரமாத்மா.

(தொடரும்...

---

## அனுமதி

ஓர் ஆற்றங்கரையில் இரண்டு பெரிய மரங்கள் இருந்தன. அந்த வழியாக வந்த ஒரு சிட்டுக்குருவி முதல் மரத்திடம் "மழைக்காலம் தொடங்க இருப்பதால் நானும் என் குஞ்சுகளும் வசிக்க கூடுகட்ட அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டது. முதல் மரம் "முடியாது" என்று மறுத்துவிட்டது. இரண்டாவதாக இருந்த மரம் அனுமதி கொடுத்தது. குருவி கூடுகட்டி குஞ்சுகளோடு மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

சிலமாதங்கள் கழித்து முதல் மரம் ஆற்றில் அடித்துக்கொண்டுபோனது. குருவி கேட்டது: "என்னைக் கூடு கட்ட அனுமதிக்கவில்லை; இப்போது உங்கள் வாழ்க்கை எப்படியாச்சு பார்த்தீங்களா?" என்று இகழ்ச்சியாகக் கேட்டது. அதற்கு முதல் மரம் சொன்னது: "எனது வேர்கள் எல்லாம் இறந்துவிட்டன. இந்தமுறை வெள்ளம் வந்தால் ஆற்றில் அடித்துச் செல்லப்படுவேன் என்று எனக்கு முதலிலேயே தெரியும் அதனால்தான் உன்னை கூடுகட்ட அனுமதிக்கவில்லை"

*நல்ல நண்பர்களுக்கு அடுத்த உயர்ந்த ஸ்தானம் நல்ல புத்தகங்களே.*

# சொல்லும் செயலும் இணைதல் நலம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சொல்லும் செயலும்; மணியும் ஒலியும்போல இணைந்திருப்பதே இயல்பு. சொல் ஒன்றாகவும், செயல் வேறாகவும் இருப்பது இயற்கைக்கு மாறானது; உண்மைக்குப் புறம்பானதாகவும் அமைந்து விடுகிறது. குடும்பங்களிலும் சரி; சமூகங்களிலும்; மற்றைய சமூக, பொருளாதார, அரசியல் துறைகளிலும் சரி; முரண்பாடுகள், பிரச்சினைகள், தோன்றுவதற்கும்; உறவுகள், நல்லிணக்கம் கெடுவதற்கும்; பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்வதற்கும்; நம்பிக்கை இழப்பதற்கும், முக்கிய காரணமாகத் தற்காலத்தில் விளங்குவது சொல்லும் செயலும் எதிரும் புதிருமாக வந்துவிட்டமையேயாகும். "பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை" என்ற பழமொழி எழுந்தமைக்கு அதுவே காரணம். எண்ணம், சொல், செயல் ஆகிய இம்மூன்றினுக்குமிடையே ஒத்திசைவு இருக்கவேண்டியது; மனித நல்லுறவு பேணி; இனிய இணக்கமான, அமைதியான நல்வாழ்வு வாழ்வதற்கும்; முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இன்றியமையாததாகும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்னும் வள்ளுவர் மறைவாக்கு, தீர்க்க தரிசனம் மிக்கது. இன்று அதன் பொருளை, நிதர்சனமாகக் கண்டு கொண்டிருக்கிறோம். இன்று, அநேகமானவர்கள் வாய்ச்சொல்லில் வீரர்கள் ஆனால் செயல்வீரர்கள் அருகி வருகின்றனர். மனிதர்கள், தம் குலத்திற்கு இயல்பானவற்றை விலக்கியும்; அந்நியமானவற்றைத் தம்முடன் வாழ்க்கையில் அவற்றைப் பேணிக் கொண்டும்; இருப்பதில்த்தான் எத்துணை வேட்கையுடையவர்களாக உள்ளனர். தற்காலத்தில், மனிதர்களின் மனங்களில் மறைந்து கிடப்பவற்றை அறிந்து கொள்வது அத்துணை சுலபம் அன்று.

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்கிறது உலகநீதி. கரவு, வஞ்சகம், சூது, சூழ்ச்சி, கழுத்தறுப்பு, முதுகில் குத்துதல், குட்டி முந்துதல் என்பன தற்காலத்தில் மனிதர்களிடையே தாராளமயமாக்கப்பட்டு வருகின்றன. பழி, பாவங்களுக்கு அஞ்சாமல்; பாதகமான விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல்; கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்னும் மனோபாவத்துடன்; யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்னும் மனோபாவத்துடன்; வாழ்ந்து வருகின்ற ஒரு பரம்பரை தற்போது வளர்ந்து வருகின்றது. எவை, எவற்றிற்கு அஞ்சவேண்டுமோ; அவை அவற்றிற்கு அஞ்சி வாழாமை, அறிவீனம். அதனால் ஏற்படுகின்ற விளைவுகள், தமக்கும் பிறர்க்கும் பாரதூரமானவை. முழுச் சமுதாயத்திற்குமே கெடுதிகள், கேடுகள் விளைவிப்பதாகவே, அமைந்துவிடுகின்றன. பாவச் செயல்கள், எதிர்மறை எண்ணங்கள், பேச்சுக்கள் போக்குவாக்குகள் இவற்றிற்கு அஞ்சி, அவற்றைத் தவிர்த்து வாழ்வதுதான்; மனித வாழ்க்கைக்கு அழகும், திருவும் தருவன அறிவுடைமையும் ஆகும்.

"அஞ்சுவதஞ்சாமை பேதமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அஞ்சத்தக்கதைக்

கண்டு, அஞ்சாதிருப்பது மடைமை. துன்பத்தை மாலைசூடி வரவேற்று, தம்முடன் அணைத்துக்கொள்வதற்குச் சமமாகும். அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவது, ஒதுங்கிப்போவது அறிவுடையவரின் செயலாகும். இதுவே வள்ளுவர் தரும் அறிவுரையாகும்.

பொய் சொல்லுவதற்கு அஞ்சவேண்டும். பொய் பேசுவதனால் ஏற்படும் விளைவுகள், படுமோசமானவை. இன்று உண்மை ஒழித்துக்கொண்டது. உண்மையை ஆதரிப்போரின் தொகை அருகிக்கொண்டே வருகிறது. பொய்தான் அதிகாரத்தில் உள்ளது. பொய் பேசுவதும் மனித இயல்புதான்" என்று கூறினாலும்கூட, இன்று ஆச்சரியப்படுவதற்கில்லை. பொய்யை, மெய்யாக்கவும்; மெய்யைப் பொய்யாக்கவும்; வல்லமைபெற்ற இரசவாதிகள் இன்று சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலும் பெருகி வருவதினாலேயே, மனித சமுதாயம் பல்வேறு தொல்லைகளையும் துயரங்களையும் இன்னல்களையும் இடையூறுகளையும் இன்று அனுபவித்துக்கொண்டும்; உள்ளூரப் புலம்பிக்கொண்டும் காலத்தைத் தள்ளிக்கொண்டு போகிறது.

உலகத்தவர் அமைதிபெற வேண்டுமாயின் அவர்களின் அன்றாட வாழ்வில் நிம்மதியும் திருப்தியும் நிறைந்திருக்க வேண்டுமாயின் ஆள்பவர்முதல் ஆள்ப்படுபவர் வரை அவர்களின் சொல்லிலும் செயலிலும் தன்னலம் தற்பற்று இருக்கக்கூடாது பொதுநலம் பேணவேண்டும். மனிதர்கள் அனைவரினதும் உடல் நலம், மனநலம், உயிர்நலம், அமைதி நலம் யாவும் உறுதியாகிவிடும்.

**"அப்பா நான் வேண்டுதல் கேட்டு, அருள்புரிதல் வேண்டும்;**
**ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்"**

என்று இறைவனை நோக்கி, இரந்து வரம் கேட்கின்றார் வடலூர் வள்ளலார். இங்கேதான், பொதுநலம், மிளிர்கிறது. இத்தகைய தியாக உணர்வும் வெளிப்பாடும்; சொல், செயல் இரண்டின் இணைப்பும், மனிதரை மனம், மொழி, செயல் இரண்டின் இணைப்பும்; மனிதரை மனம், மொழி செயல் என்பவற்றில் தூய்மையுடையோர் ஆக்கும். தூய்மையும் தியாகமும் உடைய சிந்தையில்; சாந்தி, சமாதானம், அன்பு, கருணை, மகிழ்ச்சி நிறைவு ஊற்றெடுக்கும்; வெளியே சமுதாயத்தில் பிரவாகிக்கும். ஆட்சியாளர்கள்; நிர்வாகிகள்; சட்டம் ஒழுங்கு பாதுகாவலர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள் ஆகியோர் இத்தகைய பொது நலம் தியாக சிந்தை, சேவை நலம், சொல்லிலும் செயலிலும் ஒருமைப்பாடு என்பனவற்றைக் கொண்டிருப்பவர்களாக இருப்பின் நாட்டில் நல்லாட்சி சமூகத்தில் நல்லிணக்கம்; சட்டம் ஒழுங்கு பேணல்; வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு; இனங்கள், மதங்கள், மொழிகள் இடையே குரோதங்கள், விரோதங்கள் என்பன களையப்பெற்றுப் புரிந்துணர்வு, நல்லுறவு நிலவுதல்; என்பன வளமும் நலமும் பெற்று மக்களின் வாழ்வு சிறக்க, வழி பிறக்கும். நாட்டின் பல்துறை அபிவிருத்திகள் முட்டின்றி நிறைவுபெறும்.

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தும், ஏற்றுக்கொள்ளக்கூடியவை; ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை என்பதில் மாற்றுக் கருத்துக்களோ, மறுப்புக்களோ இருக்கமுடியாது. ஆனால் பொய்யும், புரட்டும், புரளியும் சூதும் வாதும்; சூழ்ச்சிகளும்; திருட்டுக்களும் திருகுதாளங்களும்; ஒழிப்பும் மறைப்பும்; கூடவே இருந்து குழிபறிக்கும் சதிகாரர்களும்; உயிர் குடிக்கும் குள்ளநரிக் கூட்டங்களும்; வாக்குறுதிகளை வாரிவழங்கிவிட்டு, காற்றிலே பறக்கவிட்டு, விநோதம் பார்க்கும் விஷமிகளும்; நிறைந்துள்ள இப்பூவுலகில்; நல்ல நடைமுறை வாழ்க்கை விழுமியக் கருத்துக்களுக்குச் செவிசாய்ப்பவர்கள் யாரும் உள்ளனரா? அவற்றை நடைமுறைப்படுத்துவது

சாத்தியமா? இவற்றை ஏற்றுக்கொள்வார் களா? போன்ற வினாக்கள் எழுவது இயற் கையே. ஆனால் முயன்றால் முடியாதது என்று ஒன்றில்லை. மனிதர்கள் ஆறறிவு படைத்தவர்கள் ஒன்றின் நலம், தீது ஆராய்ந்து அறியும் வல்லமையுடையவர்கள். ஆனபடியினால், "முயற்சி திருவினையாக் கும்" என்பதில் நம்பிக்கை கொள்வோம்; நல்லதே நடக்கும்.

கடின முயற்சிக்கும்; பொறுமைக்கும் நிதானத்திற்கும் நேர்மறை எண்ணங்களையே உற்பத்தி செய்யும் நிலைப்பாட்டிற்கும் நிச் சயம் வெற்றியும் வெகுமதிகளும் உண்டு.

என்றும் உண்மையே பேசவேண்டும். சத்தியத்தின் பாதையிலேயே வாழ்க்கையை இட்டுச் செல்ல வேண்டும். சில சமயங்களில், உண்மை பேசுவதனால், சிலரிடமிருந்து மிரட் டல்களையும், உயிர் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள நேரிடும். அரிச்சந்திரனுக்கும், மகாத்மா காந்தியடிகளுக்கும் ஏற்பட்ட இடர் களையும், இன்னல்களையும் அந்நேரத்தில் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். அவர் களுக்கு வந்த கஷ்ட நஷ்டங்கள்; துன்ப துயரங்களுக்கு மேலாகவா, நமக்கு வந்து விடப்போகிறது. அரிச்சந்திரனும், காந்தியடி களும் எத்தகைய பாதகமான சூழ்நிலை யிலும், சத்தியத்திலிருந்து இம்மியளவும் வழு வாது, சத்தியத்தின் பாதையிலேயே சென்று கொண்டிருந்தார்கள். இறுதியில் வெற்றி பெற் றார்கள். சாதனையாளர்களாக விளங்கினர். உண்மைக்கு அழிவில்லை என்ற நிலைப் பாட்டினை மெய்பித்தவர்கள் வரிசையில் இணைக்கப்பட்டார்கள். எங்களுடைய கருத்துக் கள் ஆக்கபூர்வமானவை, சரியானவை என் பதை ஏற்றுக்கொண்டால்; நாம் கடைசி வரை யில் உறுதியாக இருக்கவேண்டும். ஒழுக் கம், வாழ்க்கையில் விழுப்பந்தரும், உயர்வு தரும். அதனால், நல்லொழுக்கமே உயிரை விட மேலாகப் போற்றப்படவேண்டும். அன்றா டம் வாழ்வில் ஓம்பி, அதன் நலம் காக்கப்பட வேண்டும். அதனால் "ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்கிறது தமிழ்மறையாகிய திருக்குறள். மக்கள் அனைவரும் நல்லொழுக்கம்பேணி, சத்தியத்தின் பாதையில், தம் வாழ்க்கையை இட்டுச் செல்லக் கற்றுக்கொண்டால்; கற்றபடி ஒழுகியும் வந்தால் அகில உலகமுமே அமை திப் பூங்காவாக அமைந்துவிடும். உண்மைக்கு அழிவில்லை; உண்மைக்கே இறுதி வெற்றி. நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு.

உண்மை என்பது உள்ளத்தால் பொய்யாமை- வாய்மை என்பது வாயினால் பேசப்படும் மொழியில், பொய்யாமை; மெய்ம்மை என்பது உடம்பினால் ஆற்றப் படும் செயல்களில் பொய்யாமை. சத்தியம் என்பது இம்மூன்றின் ஒன்றிணைப்பு ஆகும். மனம், வாக்கு, காயம்; அதாவது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றினாலும் பொய் யாமை; சத்தியம் எனப்படுகிறது. அதற்கு மனத்தூய்மை, சொல்தூய்மை, செயல் தூய்மை ஆகிய முத்தூய்மைகளும் பேணப் படுதல் இன்றியமையாததாகும்.

மனிதர்கள் சிந்தித்துச் செயல்புரி கின்ற, வல்லமையும், பண்பாடும், பிறப்பினால் வரித்துக்கொண்டவர்கள். நல்லவற்றை ஏற்க வும், வாழ்வில் அவற்றைப் பேணவும்; இய லுமை அவர்களிடம் உள்ளது. அதேவேளை தீயவற்றைத் தீண்டாது விலக்கி வாழவும் மனிதர்களுக்கு இயலும். மனிதர்கள் தங்கள் பிறப்புரிமைகளை இலட்சியம் செய்து; மனி தத் தன்மைகள் மானுடம், தழுவிய உத்தம வாழ்க்கையை வாழ்வது ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்பும் ஆகும் என்பதை உணர்வோமாக.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

*சிலர் பெருமை பிறப்பால் வரும், சிலர் பெருமை சாதனையால் வரும்.*

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

இங்கேதான் எம்மவரின் ஆற்றல் தெரிகின்றது. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது முதுமொழி. இதனைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடாத்துபவர்கள் எம்மவர். ஆம்! அந்த வகையில் இக்கோவிலின் பரிபாலனமும் எம்மவர்கள் சிலரால் நடாத்தப்படுவதை அறியமுடிந்தது. வெறுமனே வாணிபத்தை நோக்காகக் கொள்ளாது வாணிபத்தூடு அறப்பணிகள் பல செய்து வருபவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவரான திரு கு. கங்கைவேணியனுடன் (வேணி களஞ்சியம்) இந்நிர்வாகத்தினர் தொடர்பு பட்டிருப்பதையும் அறிய முடிந்தது.

உண்மையில் கண்டோம் கதிர்காமம் எனத் தொடர்ந்த இக்கட்டுரை வெறும் பயணக்கட்டுரையாக அமையாது. சந்நிதியான் ஆச்சிரமத்தினூடாக இந்த ஆற்றங்கரையான் ஆடும் நாடகத்தின் சில காட்சிகளாகவும் இவை அமைந்துள்ளதை எழுதி வியக்க வைக்கும் இவ்வழகனின் அருட்திறத்தை எண்ணி அதனை உங்களுடன் பகிர்கிறேன். வெறும் அன்னதானப் பணிக்கென தொடங்கிய ஆச்சிரம சுவாமிகளை முருகன் என்னவெல்லாம் செய்ய வைக்கிறான் என்பதையும் ஒருக்காற் பாருங்களேன். அதுமட்டுமல்ல இவர் மனதில் சில உந்துதல்களை ஏற்படுத்தி அதனைச் செயலாக்கி மகிழும் ஓர் கர்த்தாவாகத் திகழ வைக்கிறான் அழகன். அன்று எமது பேரவைக் கூட்டம் என அறிவித்திருந்தனர். உண்மையில் மிகவும் மன நெருடலுடன்தான் நான் சென்றேன். காரணம் இதற்கு முந்தைய கூட்டத்திற்கு என்னை அழைத்திருந்தனர். அதற்கு என்னால் அன்றைய தினம் செல்லமுடியவில்லை. இந்தக் கூட்டத்திற்கு தவறாது செல்லவேண்டும் என்று சென்றேன். அன்று சுவாமிகள் சொன்ன தலைப்பு என்னை மட்டுமல்ல என் போன்ற சிலரை வியக்கவைத்தது.

ஆம்! எம் மாணவச் செல்வங்களை ஊக்குவிக்க வேண்டும். யாழ் மாவட்டத்தின் கல்விநிலை சரிந்து வீழ்ந்துகொண்டு செல்கிறது என்று படித்தவர்களும் பத்திரிகைகளும் பதறிக்கொண்டிருக்கின்றனர். எனவே இந்த கீழ்நோக்கிச் செல்லும் நிலையிலும் சாதனை நிலைநாட்டிக்கொண்டிருக்கும் இம் மாணவச் செல்வங்களிற்கு ஓர் ஊக்குவிப்பை நல்க சந்நிதியான் திருவுளங்கொண்டுள்ளான். அதற்கு ஒரு முயற்சி செய்வோம். "என்ன சொல்கிறீர்கள்". பலர் வாயடைத்துப் போனார்கள். என் மனதில்கூட சில எண்ணங்கள் ஓடின. ஆனால் மௌனித்தே இருந்தேன். எப்படித் தெரிவது? என்ன செய்வது? எங்கே செல்வது தேர்வுகளைத் தெரிதல் யார் பொறுப்பு என்று இன்னோரன்ன வியப்புகள். எம்மில் ஒருவர் ஆம் மிகவும் நல்ல முயற்சி இது காலத்தின் கட்டாயமுங்கூட ஆவன செய்வோம் என்றாரே பார்க்கலாம். எல்லோரும் இப்போ தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். பல தலைப்புகளில் கலந்துரையாடல், நிறைவாக ஓர் முடிவுக்கு வந்தோம். இடம் எமது ஆச்சிரம மண்டபமே. 2017ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேசிய நிலையிலும் மாகாண மட்டத்திலும்

*உனக்கு நீ நண்பனாக இருந்தால் மற்றவர் உன்னை நண்பனாக்கிக் கொள்வர்.*

முதல் இடங்களைப்பெற்ற வடக்கு மாகாண மாணவர்களை அடக்கிய தேர்வுக்குரியவர்களுக்கான கௌரவிப்பு என தலைப்பை அமைத்தனர். சரி தலைப்பும் எடுத்தாயிற்று. இதற்குரிய தெரிவுக்குப் பொறுப்பாக ஒருவர் தாமே ஏற்றார். அடுத்து ஒவ்வொரு போயா தினத்தன்றும் பேரவையினர் கூடவேண்டும். அடுத்த கூட்டத்தில் இதுபற்றிய ஓர் முடிவுக்கு வருவோம் என முடித்தனர்.

போயாவும் வந்தது. கூட்டமும் முடிந்தது. இப்போ இதோ மாணவச் செல்வங்களுக்கு அறிவித்தலும் அனுப்பியாயிற்று. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மொத்தம் 35 மாணவர்கள் பரிசிலுக்குத் தயாராக வருகிறார்கள். 17.02.2018 சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு விருந்தினர், பிரமுகர்கள், ஆசியுரைகள், கலைநிகழ்வுகள் நிகழ்ச்சி நிரலே தயாராகி விட்டது. எம்போன்ற பலர் இவை எப்படிச் சாத்தியமாகிறது என வியந்துபோகிறோம். சாதி, சமய, மொழி ஆகிய எந்த வேறுபாடும் சந்நிதியானின் முன் செல்லாது. அவன் ஏதோ ஒருவித நாடகத்தை எம் வருங்காலச் சந்ததிகளும் ஏனைய நிறுவனத்தினரும் பார்த்து விழிக்கும்வண்ணம் நடாத்திக்கொண்டிருக்கிறான் என்றே எண்ண வைக்கின்றான்.

அதுமட்டுமல்ல இதே கூட்டத்தில் இன்னோர் காட்சிக்கான கருவையும் தந்தான். ஆம் அதன்படி வவுனியாவில் மிகவும் பின்தங்கிய ஓர் பள்ளியினர் கற்றல் உபகரணங்கள் வழங்கும்படி சுவாமிகளிடம் கடிதம்மூலம் கோரியிருந்தனர். சுவாமிகளும் அவர்களிற்கு சந்நிதியான் தந்தால் தருகிறேன் என்று கூறிவிட்டார். கைவசம் உள்ள கொப்பிகள் இங்கு உள்ளவர்களின் கோரிக்கைக்கிணங்க வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவர்களுக்கு எப்படியும் கொடுக்கவேண்டும் என் செய்வது என்று யோசித்துக்கொண்டிருக்க சந்நிதியானின் மேல் பற்றுவைத்திருக்கும் ஒரு அன்பர் வந்து சொல்கிறார். "ஐயா! நீங்கள் உதவுகின்ற காரியங்களை அறிந்திருக்கிறேன். அவ்வகையான உதவிகளிற்கு ஒரு சிறு பங்களிப்பைத் தரலாம் என்று வந்திருக்கிறேன். என்னால் செய்ய முடிந்தால் செய்து தருகிறேன். என்ன செய்யவேண்டும் கேளுங்கள்" என்கிறாராம். சுவாமிகளிற்கு ஒரே சங்கடம். முருகா! எனக்கு இப்போ நீ காட்டியவர்களிற்கு அளிப்பதற்கு பெரும் நிதியல்லவா தேவைப்படுகிறது. இதனை இந்த அடியவருக்குச் சொல்லி அவரையும் சங்கடத்திற்கு உள்ளாக்கவா? என்று சிந்தித்து.....

(காட்சி தொடரும்...

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**


**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com


*ஒவ்வொரு வெற்றிக்குள்ளும் தோல்வியின் விதை ஒன்று ஒளிந்திருக்கும்.*

# வழித்துணை

8

— ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் —

01 பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம்
என்றுநாம் இருந்திட்டால் பிறந்ததால் என்னபலன்
நன்றே செய்தால் அதுவும் இன்றே செய்தால்
அன்றே நாம்பிறந்தோம் என்பது அர்த்தமாகும்.

02 ஆலயமே செல்லாதோர் அமோகமாக வாழ்வதுவும்
ஆலயமே தஞ்சமென்போர் ஏழ்மையிற் துஞ்சுவதும்
இறையுண்டோ இல்லையோ என்பதற்கு விடையன்று
நடந்ததெல்லாம் முடிந்தகதை நடப்பதற்கே இறைதுதியாம்.

03 எப்போது நம்வாழ்வு முடியுமென்று நாமறியோம்
அப்போது அதைத்தடுக்கும் வழியினையும் நாமறியோம்
இப்போதே அன்பிற்காய் நம்வாழ்வை அர்ப்பணித்தால்
ஒப்பரிய ஓர்பிறப்பில் மீண்டும் நாம் பிறந்திடலாம்.

04 நெருக்கடியால் உமையாரும் நெருங்கியே வந்திட்டால்
வரும்படியைப் பார்த்தவரை வாவென்று அழைத்திடாதீர்
உடுப்படியாய் அவர்க்கேதும் உதவவென்று நீர்நினைத்தால்
இருப்பதிலே கொடுத்துவிடும் இரட்டிப்பாய் நீர் பெறுவீர்.

05 எம்பெருமான் எமக்கேதும் செய்யவில்லை என்றெண்ணி
விம்மிவிம்மி விரக்தியுற்று வாழாமல் வீழ்வதிலும்
நம்பிக்கை யோடிந்த நானிலத்தே நடந்துவந்தால்
இம்மையிலே இல்லையென்ப தில்லாமல் பெற்றிடலாம்.

06 தாங்கிடவே முடியாத வேதனையால் தமையழிப்போர்
பின் ஓங்குமொரு வாழ்விற்காய்ப் பிறந்திடவே முடியாது
நீங்குமிந்த நிலையென்ற பாங்குடனே நடந்துவந்தால்
பொங்குமொரு புதுவாழ்வில் பின் திளைத்திடுவர் இனிதே.

07 பரம்பொருளார் பட்டஅடி பார்முழுதும் பட்டதெனில்
பாரிலன்று பட்டஅடி பரம்பொருளார் மீதுமன்றோ
ஆதலினால் பிறர்நோகா நெறியினைநீர் கடைப்பிடிப்பீர்
போரோயும் உம்மோடு பாரோங்கும் என்றறிவீர்.

08 எத்தனைதான் தராதரங்கள் எம்மிடத்தே இருந்தாலும்
அத்தனையும் ஓர்சிறிய இழிசெயலைச் செய்திடில்நாம்
மொத்தத்தில் அவைமறைந்து மோதலையும் உருவாக்கி
பித்தனென்ற பெயரையுமே சூடவைக்கும் அறிந்திடுவீர்.

09 மேலாடை தலைப்பாகை மட்டுமின்றிச் சென்றிட்டால்
ஆலயத்துள் ஆண்டவனை அடைந்திடலாம் என்றிராதீர்
கீழான எண்ணங்கள் செயல்களைநாம் விட்டாலே
தானாக வந்திறைவன் குடியிருக்க எமையடைவான்.

10 இயற்கையோடு இறையருளும் சேர்ந்தெம்மை இயக்குவதால்
வியத்தகு சாதனைகள் செய்துநாம் மகிழ்கின்றோம்
பயக்கின்ற அனைத்துமே நம்புய பலத்தால் என நினைத்தால்
புயலோடு பூகம்பம் வருமென்போம் தடுப்போமா.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 03 | மாசி | 19 | சனி | திருவள்ளுவர் |
| மார்ச் | 18 | பங்குனி | 04 | ஞாயிறு | குழந்தைவேற்சுவாமி |
| மார்ச் | 20 | பங்குனி | 06 | செவ்வாய் | செல்லப்பாசுவாமி |
| மார்ச் | 25 | பங்குனி | 11 | ஞாயிறு | நல்லைக்குருமணி<br>நல்லை ஆதீனம்<br>தவத்திரு முருகேச சுவாமிகள் |
| மார்ச் | 27 | பங்குனி | 13 | செவ்வாய் | யோகர்சுவாமி |
| ஏப்ரல் | 02 | பங்குனி | 19 | திங்கள் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 12 | பங்குனி | 29 | வியாழன் | பரமகுரு சுவாமிகள் |
| ஏப்ரல் | 17 | சித்திரை | 04 | செவ்வாய் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 19 | சித்திரை | 06 | வியாழன் | மங்கையற்கரசியார் |

*எதையும் எதிர்பாராதவனே அதிஷ்டக்காரன். அவன் ஒருபோதும் ஏமாறுவதில்லை.*

# சைவ சமயம் அழிந்துவிடும் என்று எண்ணாதே மனிதா

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

கல்தோன்றா மண்தோன்றா காலத்துக்கு முந்திய சமயம் சைவசமயம். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாகிய் சிவம் அருளிய சமயம் சைவசமயம். தோன்றாப் பொருளாகிய சிவபெருமான் அண்டங்களையும் உயிரினங்களையும் படைத்து, காத்து வருகின்றார். எங்கும் நிறைந்தவரும் என்றும் உள்ளவரும் எல்லாம் அறிபவரும், எல்லாம் வல்லவருமாகிய சிவன் இருப்பதினால் எமது சமயம் (சைவசமயம்) நீடு வாழும் என்பது உண்மை. எனவே சைவசமய மானுடர்களே எம்பெருமான் இருக்கப் பயம் ஏன்? என்று எண்ணி கணப்பொழுதும் மறவாது இறைவனை வழிபடுங்கள்.

முன்னொருகால் தமிழ்நாட்டில் ஏறக்குறைய கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் சமண சமயம் எங்கும் பரவி சைவசமயம் அழிந்துவிடுமோ என்ற எண்ணம் சைவ மக்களை வாட்டியது. இந்நிலையை உணர்ந்த எம்பெருமான் திருஞானசம்பந்தரை சீர்காழியில், திருநாவுக்கரசரை திருவாமூரிலும் அவதரிக்கச் செய்தார். திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தேவாரம் பாடி பல அற்புதங்களைச் செய்கிறார் என்று கேள்விப்பட்ட சமணர்கள் வாதத்திற்கு அழைத்தனர். அனல் வாதம், புனல் வாதம் இரண்டிலும் வெற்றிகொண்டு சமணர்களைக் கலங்க வைத்தார். அதுபோல் திருநாவுக்கரசருக்குத் துன்பங்கொடுத்து ஏழு நாட்கள் ஊண் இன்றியும், நீரின்றியும் சுண்ணாம்பறையில் அடைத்து வைத்து ஏழாம் நாள் திறந்து பார்த்தபொழுது, அவர் உயிருடன் முன்பிருந்ததைவிட பூரிப்புடையவராக இருந்தமைகண்டு திகைத்து, வேறு சூழ்ச்சிகளாகிய, நஞ்சு கலந்த பாற்சோறு உண்ணக் கொடுத்தும் இறவாமையால், மதங்கொண்ட யானையை ஏவிவிட்டும், அது வணங்கி நின்றதையும் கடைசியில் கல்லோடு கட்டிக் கடலில் போட்டும், கல் தெப்பமாக மாறி கரை சேர்ந்ததையும் அறிந்த அரசன் தான் சமணர் சொற்கேட்டு செய்த தவறுகளுக்கு நாவுக்கரசரிடம் மன்னிப்புக் கேட்டு, தானும் சைவசமயத்தவனாக மாறி செய்த தவறுகளுக்கு பிராயச்சித்தமாக ஒரு கோவிலையும் கட்டுவித்தான். திருஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் ஊர் ஊராகச் சென்று தலங்களை வழிபட்டு, பல அற்புதச் செயல்களையும் செய்து வந்தனர். இதனால் சமண சமய மக்களும் சைவ சமயத்திற்கு மாறத்தொடங்கினர். சைவ ஆலயங்கள் கிராமங்கள்தோறும் கட்ட அரசர்கள் முன்னின்று உழைத்தனர். எங்கும் சைவ ஆலயங்கள் பெருக கோவில் வழிபாடுகளும், பூசைகளும் சிறப்பாக நடைபெற்றன. சைவசமயம் தமிழ் நாட்டில் கொடிகட்டிப் பறந்தது. எனவே சைவ சமய மக்களே எமது சமயம் அழியும் என்ற எண்ணத்தைக் கைவிடுங்கள்.

எமது ஈழத் திருநாட்டிலும் அன்று சைவசமயத்தை அழிக்கும் நோக்குடன் புத்த பிக்குகளும் அரசனும் அவர்களது வாய் பேசா பெண்பிள்ளையையும், கடற்கப்பல்மூலம்

சிதம்பரத்தை அடைந்து, தங்களுடன் வாதிட வருமாறு, பூசகரைக் கேட்டனர் பூசகர்கள் மாணிக்கவாசகரை அழைத்து வாதிட வைத்தனர். மண்டபத்தில் ஒரு பக்கத்தில் புத்த பிக்குகளும், திரையிடப்பட்டு மறுபக்கத்தில் மாணிக்கவாசகரும் இருந்து வாதிட ஆரம்பித்தனர். மாணிக்கவாசகர் இறை அருளால் புத்தபிக்குகளை பேசமுடியாது வைத்து. தனது கேள்விகளுக்கு விடைசொல்ல, வாய் பேசா அரசன் மகளை அழைத்து, பேசும் திறனைக் கொடுத்து பதில் அளிக்க வைத்தார். இச்செயலைக் கண்ட அரசன் மாணிக்க வாசகர் பாதம் பணிந்து தாம் செய்த தவறை மன்னிக்குமாறு வேண்டி நின்றான். அதுமட்டுமன்றி தானும் மகளும் சைவசமயத்தில் சேர அனுமதி தரும்படி வேண்டி நின்றான். சைவ சமயத்தின் மேன்மையை புத்த பிக்குகள் கண்டு நடுங்கினர். எனவே அன்று அழியாச் சைவசமயம் உலகம் இருக்கும்வரை விளங்கும் என்பது திண்ணமாகும்.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சிறப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சைவக்கோவில்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. சைவ அனுட்டானங்கள் செய்ய தடைவிதிக்கப்பட்டன. சைவர்கள் என்ன செய்வதென்று அறியாது கலங்கி எம் பெருமானை வேண்டினர். அக்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயம் அழிக்கப்படாது பூசைகள் நடைபெற்று வந்தன. இதை அறிந்த ஒல்லாந்தத் தளபதி தான்தோன்றி ஆலயம் சென்று, நந்தி பகவானைப் பார்த்து "உந்தக் கல்மாடு புல் தின்னுமா" என ஏளனமாகப் பூசாரியாரிடம் கேட்டான். அதற்குப் பூசாரியார் ஆம் நாளை காலை பூசை நேரம் வாருங்கள் என்று சொன்னார். ஒல்லாந்தத் தளபதி கல்மாடு புல் தின்னாவிட்டால் உமது தலை நாளை இத் தலத்தில் கொய்யப்படும் என எச்சரிக்கையாகக் கூறிச்சென்று விட்டான். பூசாரியார் அன்று இரவு முழுவதும் கருவறையில் ஈசன் அருகே இருந்து பிரார்த்தனை செய்தார். காலையில் ஒல்லாந்தத் தளபதியும் பரிவாரங்களும் தான்தோன்றி ஆலயத்தை அடைந்தனர். அங்கு பூசகர் பாலில் தோய்த்த அறுகம் புல்லை தட்டத்தில் வைத்து, நெஞ்சம் உருகி "நந்தி பகவானே நாயினும் கடைப்பட்ட அடியேன் தரும் புல்லைச் சாப்பிடும்" என வேண்டி தாம்பாளத்துடன் நீட்டினார். என்ன அதிசயம் அந்தக் கல் பெருங் காளை போல் உருவெடுத்து அறுகம்புல் முழுவதையும் உண்டு சாணிபோட்டது. இதைக்கண்ட ஒல்லாந்தத் தளபதி நடுநடுங்கி பூசகர் பாதம் பணிந்து தனது பிழையைப் பொறுத்தருள வேண்டுமென வேண்டினான். தான் செய்த பிழைக்குப் பரிகாரமாகக் கோயிலின் புனருத்தாரண நிதியையும் தருவதாக வாக்குறுதி அளித்தான். இன்றும் தளபதி கட்டிய கோவில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அந்நியன் ஒருவனாலே மதிக்கப்பட்ட தான்தோன்றி ஈஸ்வரன் இன்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். எனவே சைவசமயத்தவர்களே சைவ சமயம் அழியும் என்ற எண்ணத்தைக் காற்றில் வீசுங்கள்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணக் குடாநாட்டில் அந்நியனுடைய சலுகைகளாலும், சட்டங்களினாலும் மக்களை கிறீஸ்தவராக்கினர். சைவர்கள் இதற்கு என்ன வழி செய்வதென்று தெரியாது நின்றனர். கரையோர மக்கள் கிறீஸ்தவ மதத்தைத் தழுவி நின்றனர். இந்நேரத்தில் எம்பெருமான் ஆறுமுக நாவலரைத் தோற்றுவித்தார். கிறீஸ்தவ பாடசாலையில் கல்வி கற்பித்த ஆறுமுக நாவலர் மாலை நேரத்தில் வண்ணைச் சிவன் ஆலயத்தில் சைவக் கடவுளின் திருவருளையும், மறு சமயங்களின் பிழைகளையும் எடுத்துக்கூறி

வந்தார். ஆனால் கிறீஸ்தவ நூலாகிய பைபிளை தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார். தன் னலம் கருதாது வாழ்கின்ற நாவலரின் செயல் கண்டு ஏனைய மதத்தவர்களும் போற்றி வந்தனர். நாவலரின் பிரசங்கத்தினாலும், துண்டுப் பிரசுரங்களினாலும் மக்கள் திரும்ப வும் சைவ சமயத்தில் ஒழுகத் தலைப்பட்டனர். நாவலர்பெருமானால் இன்று பல சைவக் கோவில்கள் விளங்குவதைக் காணலாம். சைவ சமயத்தின் அடிநாதமாக விளங்குவது அன்னதானம். அன்னதானம் வழங்கும் கோவில் கள் இன்று பல உள. சிறப்பாக அன்னக்கந் தன் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் வரும் அடியார்களுக்கு எந்நிதியும் கொடுத்து, அன்னம் பாலிக்கச் சத்திரங்களையும் அமைத் துக்கொடுத்துள்ளான். சிறப்பாக முன்வீதியில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் அடியார்கள் யாவருக்கும் காமதேனுபோல் அன்னம் பாலிக்க ஆச்சிரம முதல்வரை ஆக்கியுள் ளான். சந்நிதியான் ஆச்சிரம சுவாமிக்கு வேண்டியதைக் கொடுத்து, நடத்தும் வழி களையும் காட்டிக் கொடுத்துள்ளான். எனவே தான் ஆச்சிரம சுவாமியார் வரும் அடியார் களை அன்புடன் உபசரித்து அன்னம் பாலித் துக் கொண்டிருக்கிறார். ஆகவே சைவ சமயத்தவர்களே எமது சமயம் அழியும் என்ற எண்ணத்தை மறந்து, அனுதினம் ஆற்றங் கரையான் ஆலயம் சென்று வணங்கி வினை நீங்கி வீடுபேறு அடையுங்கள்.

## வந்தருள் புரிவாய் நீயே!

சந்தத் தமிழ் எடுத்துச்
சந்ததமும் நினைப் பாட,
சந்நிதிக்கு வந்தேனையா!
சிந்தையிலே நிறைந்து,
விந்தைகள் புரியுமுனை,
வந்தனை செய்தேனையா!
கந்தா! குகா! என்று
கையேந்தித் தொழும் எனக்கு
வந்தருள் தருவாய் ஐயா! சிவ
மைந்தனே நினைப் பாடி,
மலர்தூவி வாழ்த்துரைக்கும்
எந்தனுக்குக் கதி நீ ஐயா!
முந்தை வினை போக்கி,
முத்தி அளிக்கின்ற
செந்தில் வடிவேலனே!
எந்த வினை வந்தாலும்
ஏதும்குறை நேர்ந்தாலும்
சிந்தை கனிந்தருள்வாய் நீயே!
சொந்த பந்தம் எனக்கில்லை!
சொத்து சுகம் ஏதுமில்லை!
உந்தனையே நம்பி வந்தேன்!
நொந்தமனம் திருந்திடவும்,
நோய் நொடிகள் அகன்றிடவும்
வந்தருளைப் பொழிவாய் நீயே!

- கி. குலசேகரன் -

ஒவ்வொரு மனிதனுக்கும் வாய்க்கும் அதிஷ்டத்திற்கு அவன்தான் சிற்பி.

(தொடர் -05)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவு கர்ப்ப பந்தம், இரத்த பந்தம், இது முடிவில்லாத பந்தம்.

தந்தையின் கடமைகள் வேறு. அவன் குழந்தையைச் சீராட்டுகிறான், பாராட்டுகிறான், கொஞ்சுகிறான், குலாவுகிறான், மகிழ்கிறான், குழந்தையைப் பராமரிப்பது அவனுடைய பங்கு மகத்தானது. என்றாலும் தாயின் பங்குக்கு இணையானது ஆகாது. குழந்தைக்குக் கல்வி புகட்டுகிறவன் தந்தை என்று சொல்லப்பட்டாலும் அதற்கான முழுப்பொறுப்பையும் அவன் ஏற்பதில்லை; ஏற்கவும் முடியாது.

இன்றைய சூழலில் பிள்ளைகளின் படிப்பை முழுமையாகவே தாய் கவனித்துக் கொள்வதைக் காணமுடிகிறது. தம் குழந்தையை கல்விக்காக வீடு வீடாக ஏற்றிச் செல்வது தாய்தான் என்பதைப் பார்த்து வருகிறோம். ஆனால் தாயும்; தந்தையும் இணைந்து பிள்ளைகளின் அனைத்து விடயங்களையும் பார்க்கவேண்டும். தாய் தந்தையின் கவனக் குறைவுதான் இன்று இளைஞர் யுவதிகளிடம் ஏற்பட்டிருக்கும் பிறழ்வுகளுக்குக் காரணமாகும்.

மாதாவும் பிதாவும் குழந்தை கல்வி பயிலவேண்டும் என்பதற்காகவும் வாழ்க்கையை செவ்வனே புரிந்து நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவனுக்கேற்ற குருவை (ஆசிரியரை) தேடிக் கண்டுபிடிப்பது அவர்களின் பொறுப்பு ஆகிறது. அதனால்த் தான் குரு மூன்றாவது இடத்தைப் பெறுகிறார்.

குழந்தையின் வாழ்க்கை குடும்பத்துக்கு உள்ளேயே அடங்கிவிட முடியாது. வெளி உலகை உணரவேண்டும். வித்தைகளைக் கற்க வேண்டும். கல்வி கேள்விகளில் வல்லவனாக வேண்டும். வாழ்க்கையை வாழும் வழியறிந்து வாழவேண்டும். இதற்கெல்லாம் வழிகாட்டுகின்றவர் குரு. சைவசமயத்தவர் இதில் மிகுந்த தெளிவுடன் இருந்தார்கள். உலகத்தையே ஆளுகின்ற சக்கரவர்த்தியின் குமாரனாக இருந்தாலும், அவர்களும் குருகுலவாசம் செய்தே ஆக வேண்டும்.

குருகுலவாசம் என்பது பழங்கால சைவச் சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு சிறந்த கல்விப்பயிற்சி முறையாகும். அது வாழ்க்கைப் பயிற்சியாகவும் இருந்தது. அரசனுடைய பிள்ளைகளும் குருவின் ஆச்சிரமத்தில் எல்லா மாணவர்களையும் போலவே எளிய வாழ்க்கை வாழ்ந்தார்கள். அங்கே பேதங்கள் இருக்கவில்லை. உயர்வு தாழ்வு என்கிற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. குருகுலத்தில் வாசம் செய்ய வந்த அரச குடும்பத்தினரும் குருவுக்குப் பணிவிடை செய்தார்கள். குருவுக்குச் சேவை செய்வது கிடைத்தற்கரிய பாக்கியம் என எண்ணினார்கள். தெய்வத்துக்கு அடுத்த நிலையில் வைத்து குருவை வணங்கினார்கள். வழிபட்டார்கள்.

சைவசமயத்தவர் மனோதத்துவக் கலையில் வல்லவர்களாக இருந்தார்கள் என்பதற்கு அவர்கள் கண்டுபிடித்த குருகுல வாசம் ஒரு சிறந்த சான்று. குருவை மதிக்காதவன் அவர் சொல்லிக் கொடுக்கின்ற கல்வியையும் மதிக்கமாட்டான்.

*சொர்க்கத்திற்குப் போவதற்கான பயிற்சி நிலையமே நாம் வாழும் வாழ்க்கை.*

பாடசாலையில் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் விடயம் தெரிந்தவர் என்கிற எண்ணம் மாணவனுக்கு இருந்தால்த் தான், அவர் சொல்லுகின்ற விடயங்களைக் கூர்ந்து கவனிப்பான். அவர் ஒழுக்கமுடையவர் என்கிற எண்ணம் இருந்தால்த்தான், அவர் செய்கின்ற போதனைகளை மரியாதை கொடுத்துக் கேட்பான். போதனை வேறு, ஆசிரியர் வேறு என்கிற நிலை இருந்தால் மாணவர்களின் மனம் ஆசிரியர்களிடத்தில் ஒருமுகப்படாது. இப்போதும் கூட, திறமையாகப் பாடம் சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்களின் வகுப்பு அமைதியாக இருப்பதைப் பார்க்கலாம். அந்த வகுப்பில் மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதைப் பார்க்கலாம்.

எனவேதான் குருகுலவாசத்தில் பணிவு முதன்மையானதாகக் கருதப்பட்டது. சேவை மனப்பான்மை முக்கியமானதாகக் கருதப்பட்டது. குருகுலத்தில் வாசம் செய்த மாணவர்கள் உயர்வு தாழ்வு எண்ணிப் பழகவில்லை. எல்லோரும் ஒரே உணவை உட்கொண்டார்கள். ஒரே இடத்தில் படுத்து உறங்கினார்கள். உயர்வு தாழ்வு பாராட்டாமல் எல்லாப் பணிகளையும் மேற்கொண்டு செய்தார்கள்.

கண்ணனோடு குருகுலத்தில் ஒன்றாகப் படித்தவர் குசேலர். கண்ணன் மதுராபுரிக்கு மன்னனாகி விடுகிறான். குசேலர் இருபத்தேழு குழந்தைகளைப்பெற்று ஏழ்மையில் கஷ்டப்படுகிறார். மாளிகையில் வாழ்கின்ற கண்ணனைப் பார்க்க ஒருபிடி அவலோடு செல்லுகிறார். ஏழைக் குசேலருக்கு கண்ணன் மாளிகையில் ராஜ வரவேற்புக் கிடைக்கிறது.

இது குருகுலவாசம் போதித்த சமத்துவம், குருகுலவாசம் உருவாக்கிய அன்பு, குருகுலவாசம் உருவாக்கிய வாழ்க்கை முறை. கல்வி, வித்தைகளில்மட்டும் மனிதனை உயர்ந்தவனாக்கவில்லை. அவனுடைய மனதை விசாலப்படுத்தியது. பண்பினை வளர்த்தது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழச் சொல்லிக் கொடுத்தது.

ஆகவே குழந்தைக்கேற்ற குருவைத் தேர்ந்தெடுக்கின்ற கடமை பெற்றோர்களுடையது. இன்றைக்கு அது சாத்தியமில்லை என்பதால், குழந்தை கல்வி கற்பதற்குப் பொருத்தமான பாடசாலையைப் பெற்றோர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய கல்விமுறை பல குறைபாடுகளையுடையது எனக் கருதுகிறேன். ஆரோக்கியமான கல்வித் திட்டம் இல்லை. இதுவே முதல் குறைபாடு. மாணவர்களுக்கு சமய வாழ்வின் அவசியத்தைப் புகட்டக் கூடிய முறையில் சமய பாடத்திட்டம் இல்லை. சமயபாடம் என்பது நேரசூசியை நிரப்புவதற்கு என்றாகிவிட்டது. கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர் சமயபாடம் கற்பிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அன்றைய ஆசிரியர்கள் கணிதம், தமிழ், ஆங்கிலம், சமயம்.... நன்கு கற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் இன்று குறித்த பாடத்தில்கூட நிரம்பிய திறமையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். சமயக் கல்வியைப் பொறுத்தமட்டில் சமய வாழ்வு வாழும் பண்புடைய ஆசிரியர்கள் அவசியம்.

பெற்றோர் தம் பிள்ளைகளை சிறந்த பாடசாலைகளில் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதில் தவறில்லை. ஆனால் சிறந்த பாடசாலையை எப்படித் தெரிவு செய்யப் போகிறீர்கள் அல்லது தெரிவு செய்கிறீர்கள் என்பதுதான் மிகப் பெரிய கேள்வியாக உள்ளது. ஒழுக்கம் உடைய ஆசிரியர்களினால் ஒழுக்கத்தை கற்றுக்கொடுக்கும் பாடசாலைதான் சிறந்த பாடசாலையாக இருக்கமுடியும். பூதக் கண்ணாடி வைத்துத் தேடினாலும் அப்படியொரு

*தனது திறமைகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்தவன் அறிவாளி.*

பாடசாலை இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோரிடமே பெரிதும் காணப்படுகிறது. பிள்ளைகளை பண்பாளர்களாக வளர்க்கும் பொறுப்பு தாய், தந்தை இருவரையும் சார்ந்திருக்கிறது. தமது வேலைப் பளுவினால் பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்துவிட்டு பின்னர் "குத்துது குடையிது" என்று அடித்துக் கொண்டு அழுவதனால் விளையப்போவது ஒன்றுமில்லை. தாய், தந்தையர் பிள்ளைகளை ஆலயங்களுக்கு அழைத்துச் செல்வது அவசியமாகும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" எனும் பழமொழி, நின்று நிதானித்துப் பொருள் காணப்படவேண்டிய ஒன்றாகும்.

பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான சைவ உணவைத் தயாரித்துக்கொடுக்க வேண்டும். நேரமின்மையினால் கடைகளில் கண்டது, கடியதுகளை வாங்கிக் கொடுக்காதீர்கள். அதுவே சிறுவர்களுக்கு பழகிப் போய்விடுகிறது. ஒரு நேரமாவது குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து மனம்விட்டுப் பேசிக்கொண்டு உணவருந்தப் பழகுங்கள்.

கல்வியின் நோக்கம் இறைவனை உணர்வதாக இருக்கவேண்டும் என சைவ சமயம் சொல்லுகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிற முறைவைப்பின்மூலம் இது அருமையாக உணர்த்தப்பட்டிருக்கிறது. பெற்றவள் தாய், வளர்த்தவன் தந்தை. கல்வி போதித்தவர் குரு. இந்த மூவரின் முயற்சியின் விளைவாகவே நல்ல குழந்தைகளை உருவாக்க முடியும்.

கடவுளை உணர்ந்தால் வயிறு நிரம்பி விடுமா? வாழ்வதற்குத் தேவையான பொருள் கிடைத்து விடுமா? வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் கடவுள் பூர்த்தி செய்து விடுவாரோ? இதுபோன்ற கேள்விகள் தோன்றவே செய்யும்.

உண்ணாமல் உயிருடன் இருக்க முடியாது. பணம் இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகாமல் சுகம் இல்லை. இவை அனைத்துக்கும் நம்முடைய உழைப்பும் முயற்சியும் தேவை என்னும் இறை உணர்வு இல்லாமல் வாழ்க்கையில் நிம்மதி கிடைக்காது, என்பதால், கல்வியின் முக்கிய குறிக்கோளாக இறை உணர்வு வலியுறுத்தப் பட்டது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழஅர் எனின்"

என்பது வள்ளுவம்.

தூய இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழவில்லையானால், மெத்தப் படித்திருந்தும் அதனால் பயன் ஏதும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு.

குழந்தை பிறந்ததிலிருந்து உலகத்தை அவன் உணர்கின்றவரை உள்ள நிலைகள்தான்- மாதா, பிதா, குரு, தெய்வம் என நமது சமயம் வரிசைப்படுத்திக் காட்டி இருக்கிறது. சிலர் நினைப்பதுபோல சைவ சமயம் எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்த நிலையிலும் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி இருக்கும்படி உபதேசிக்கவில்லை.

வாழச் சொல்லும் நமது சமயம் வாழ்வாங்கு வாழவேண்டும் என்று சொல்லுகிறது. மன நிறைவுடன் வாழவேண்டுமென்று சொல்லுகிறது. மற்றவர்களுடன் சுகதுக்கங்களைப் பகிர்ந்து வாழவேண்டும் என்று சொல்லுகின்றது. இப்படிச் சொல்லிவிட்டுச் சும்மா இருந்து விடவில்லை. அதற்கான வழிகள் என்ன என்பதையும் வரிசைப்படுத்திச் சொல்லி இருக்கிறது.

அறம், பொருள், இன்பம், வீடு எவ்வளவு அற்புதமான வரிசை.

(தொடரும்...

*நெருப்பு பொன்னைச் சோதிக்கிறது, துயரம் உயர்ந்த மனிதரைச் சோதிக்கிறது.*

# மஞ்ஞை நடமிடும் மாதோட்டம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாக அறியப்படும் இராம இராவண யுத்தத்தின் பிரகாரம் இலங்கை ஒரு சிவபூமியாக அடையாளப்பட்டிருப்பதும், பல சிவாலயங்கள் ஏற்கனவே இருந்ததென்பதை உணர்த்தியிருப்பதும் திருக்கேதீஸ்வரம் எனும் சிவத்தலத்திற்கு அற்புதம் சேர்க்கிறது.

"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரு மிவ்வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் தில்லைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை இவை சிவபூமியே"

திருமூலர் அவர்களும் இலங்கையைச் சிவபூமியென குறிப்பிடுவது யாவராலும் உணரற்பாலது.

இலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் அமைந்த பதியாகவும், ஆறுநேரப் பூஜை கிரமமாகவும் நடைபெறும் ஆகமப் பதியாகவும் விளங்கும் புராதன ஆலயம் திருக்கேதீஸ்வரமாகும்.

பெருந்தவமுடையவர்களான, கேது, மயன், மாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் என்போரால் போற்றப்பட்டு வரம்பெற்ற வரலாறுடையது இத்திருத்தலம்.

இராவணன் ஒரு சிறந்த சிவபக்தனாகப் போற்றப்படுகின்றான். இவனுடைய சிவபக்தியால் அதிக வரம்பெற்ற வரலாறுகளில் திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் முக்கிய இடம்பெறுகிறது.

## சிறப்பு

சம்பந்தரும், சுந்தரரும், நாவுக்கரசரும், சேக்கிழாரும் கேதீஸ்வரப் பெருமானைப் போற்றி அருளிய திருப்பாசுரங்கள் இன்றும் பக்தியோடு போற்றப்படுகிறது. ஒவ்வொரு பாசுரமும் தேன் சொட்டும் தகைமையின. அவற்றைப் பாடுவோருக்கும், படிப்போருக்கும், கேட்போருக்கும் வாழ்வும் வளமும் வரமும் உண்டு. சம்பந்தரின் ஒவ்வொரு பாடல்களிலும் மாதோட்டம் விசேடமாக அலங்கரிக்கப்படுகிறது. சுந்தரரின் ஒவ்வொரு பாடல்களிலும் "பாலாவி"த்தீர்த்தம் மருந்தாக்கப்படுகிறது.

## மாதோட்டம்

1) கனைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்,
2) எழில் திகழ் மாதோட்டம்,
3) உயர்தரு மாதோட்ட அண்ணல்,
4) மறிகடல் மாதோட்டத்து அடிகள்,
5) மலிகடல் மாதோட்டம்,
6) மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்,

7) மஞ்ஞைகள் நடமிடும் மாதோட்டம்,
8) மாமணிகளும் பொருந்திய மாதோட்டம்,
9) மாவும் கதலியும் நெருங்கும் மாதோட்டம்,
10) யானையை உரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்து அத்தர்,
11) "முரசெனக் கடலொலி கதறும் மாதோட்டம்"

எனப் பலப்பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய பெரு நகரமாகவும் துறைமுகமாகவும் மாதோட்டம் மாந்தையெனும் சிறப்புடன் விளங்கிற்று.

**பாலாவி**

1) தொண்டர் தொழும் பாலாவி,
2) படஏரிடை மடவாளொடு பாலாவி,
3) மாதோட்ட நன்னகரில் பாலாவி,
4) பரியதிரை எறியாவரு பாலாவி,
5) பங்கம் செய்த மடவாளொடு பாலாவி,
6) பையேரிடை மடவாளொடு பாலாவி,
7) பானத்துறு மொழியாளொடு பாலாவி,
8) பட்ட வரி நுதலாளொடு பாலாவி,
9) பாவம் வினையறுப்பார் பயில் பாலாவி,
10) கடல் சூழ்ந்த கழி மேவும் பாலாவி,

இத்துடன் சுந்தரரும் மாதோட்டச் சிறப்பினை மகத்துவமாக்குகின்றார்.

வங்கம் மலிகின்றகடல் மாதோட்டம்,
வண்டு யாழ்செய்யும் மாதோட்டம்,
வையம் மலிகின்றகடல் மாதோட்டம்,
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டம்,
மட்டுண்டு வண்டாடும்பொழில் மாதோட்டம்,
மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்டம்,
கறையார் கடல் சூழ்ந்த கழிமாதோட்டம்

என்று பாலாவியையும் மாதோட்டத்தினையும் மிகவும் புனிதமோடு பக்திமயப் படுத்துகிறார்.

மேற்படி இரண்டு பதிகங்களையும் மனமுருகி தினமும் பாடி வந்தால், பாடுபவருக்கும், கேட்பவருக்கும், இந்த மண்ணுக்கும் கொடுவினைகளும், கொடு நோய்களும் ஏற்படாது.

கடுவினை அடையாது,
கெடுமிடர்- வினை தானே,
அருவினை அடையாவே,
மொய்த்தெழும் வினை போமே,
அல்லல் ஆசறுக்கும்,
பரகதி பெறலாம்! இஃது முழுதும் உண்மையாகும்.

இந்த ஆலயத்திற்கு அண்மையிலிருக்கும் வங்காலை என்னும் இடம், ஆதிகாலத்தில், துறைமுகமாகவும், வங்கமெனும் பெருங்கப்பல்கள் கட்டுமிடமாகவும் இருந்துள்ளது. பாப்பா மோட்டையும், மாளிகைத்திடலும் அந்தணர்கள் வாழ்ந்த இடமாகப் போற்றப்படுகிறது.

போர்த்துக்கேயரால் இவ்வாலயம் தகர்க்கப்பட்டபோது, அன்றைய சைவர்கள் அடைந்த துன்பத்திற்கும், கண்ணீருக்கும் அளவே இல்லை என்றே கூறலாம். இந்நிலையில் சைவ சமயத்திற்கு ஓர் விடிவெள்ளியாக அவதாரம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவர்கள் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட அந்த நிலபுலத்தை வாங்கி, ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். இதன் பேறாக,

கொழும்பு தம்பையா முதலியார்,
சுபைதார் வைத்திலிங்கம்,
புகையிரத தபால் ஒப்பந்தக்காரர்
மாத்தளை ஆசைப்பிள்ளை

ஆகியோரின் அருமுயற்சி காரணமாக அரசினர்க்குச் சைவசமயத்தின்பால் ஒரு பயபக்தியை ஏற்படுத்தினர்கள். 1890இல் தகைசான்ற பெரியோர்களின் முயற்சியால் அன்றைய அரச அதிபர் அந்நிலத்தை சைவர்களுக்கே வழங்கத் தீர்மானித்தார்.

## சபை

சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் முதலாவது தலைவராகவும், பொதுச் செயலாளராக நீராவியடி பண்டிதர் அ. சிற்றம்பலம் அவர்கள் தெரிவாகி, உரிய நிர்வாக அங்கத்தவர்களுடன், யாப்பொன்று தயாரிக்கப்பட்டது.

(அ) சைவ மணங்கமழ, மறுசீரமைத்தல், உரியவாறு பாதுகாத்தல்.
(ஆ) கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டு வணக்கத் தலமாக மாற்றுதல்.
(இ) அன்றாட தேவைகளை முன்னெடுத்தல்.
(ஈ) தயார்ப்படுத்தல் (ஆகம விதிகளுக்கமைய)
(உ) பதிவு செய்தல் (பொது உடமைச்சட்டம்)
(ஊ) நாட்டுக்கோட்டை நகரப் பெரியோர்களிடம் பேச்சுவார்த்தை.
(எ) பரிபாலனம் கைமாற்றம் பெற ஆவனபுரிதல்.
(ஏ) 10.02.1951 பதிவும், 14.09.1951இல் கைமாற்றமும் இடம்பெற்றது.
(ஒ) அறங்காவலர், பஞ்சாயத்தவர்கள், திருப்பணிச்சபை உருவாக்கம்.

## தீர்மானம்

காசி வாசி சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார்,
அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள்,
சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்,
கட்டிடக் கலைஞர் வி. நரசிம்மன்,
தமிழ்நாடு செல்லக்கண்ணு ஸ்தபதியார்,
மு. வைத்தியநாத ஸ்தபதியார் ஆகியோர்களினால் ஆகமவிதியின் பிரகாரம், கருவறைகள் கருங்கல்லாலும், சுதை காரைகளாலும், மற்றும் விமான வேலைகள் இணைந்த

*நேரம் விலை உயர்ந்தது. ஆனால் உண்மை நேரத்தைவிட விலை உயர்ந்தது.*

கோபுரப்பணிகள் நீடித்த ஆயுள்காப்புடனும் செய்வதற்குத் தீர்மானம் மொழியப்பட்டு, மக்களின் பங்களிப்போடு திருக்கேதீஸ்வரம் ஆலயம் மீண்டுருப்பெற்றது.

## தேன்பொந்து

இத்திருத்தலம் உருவாகவும் உருவாக்கவும், மிளிரவும், ஒளிரவும் வழிசமைத்தவர், திருப்பெருந்திருப் பேரருளாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானாவார். அவரது உள்ளத்தில் உதித்த ஒரு திருவமுதுதான், மன்னாரில் பேறாகியது.

மன்னாரில் ஒரு தேன்பொந்து இருக்கிறது. அதை எந்நாளும் அள்ளிப் பருகிட வாரீர். முன்னாளில் எம்மவர் செய்த பாக்கியந்தான், இந்நாளில் கேதீச்சரமாய்த் தேனாகிறது. சம்பந்தரும், சுந்தரரும் திருக்கேதீச்சரத்தைத் தேனாக அனுபவித்ததினால், இன்றும் அது இனிக்கிறது. தேன்பொந்து மாத்திரமல்ல அது ஒரு தேன்போன்ற சஞ்சீவி. சஞ்சீவி மாத்திரமல்ல, சிரஞ்சீவியாய் வாழ வைக்கும் அருட்டிருவாசி.

இது மாத்திரமல்ல, ஆறுமுகநாவலரின் வேண்டுகோளின்படியே,

விடத்தல்தீவு வேலுப்பிள்ளை அவர்களும் முதன்முதலாகக் குரல் கொடுத்த சபையே யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையென்பதும் இங்கு நோக்கத்தக்கது.

## கொள்முதல்

காடு மண்டிய நிலமான 43 ஏக்கர் 3 றூட் 33 பேச் காணி நாட்டுக்கோட்டை நகரத்துச் செம்மலும் சைவச் சான்றோனுமாகிய ராம. அரு. பழனியப்பச்செட்டியாரான பெருமகனாரால் யாழ் செயலகத்தில் 3100/= ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

1894இல், வண்ணை சைவப்பெரியார் பசுபதிச்செட்டியார், இராமுப்பிள்ளை வைத்தியர், பெரியார் ஆறுமுகம்பிள்ளை, பெரியார். இராகவப்பிள்ளை ஆகியோரது அயராத முயற்சியினால், 13.06.1894 அன்று, பழைய ஆலயம் இருந்த இடத்தில் சிறு கோவிலமைக்கப்பட்டது. ஏற்கனவே கண்டெடுக்கப்பட்ட திருவுருவச்சிலைகளையும் உரியவாறு ஸ்தாபித்து, 28.06.1903இல் முதலாவது கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது.

கருவறையில் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கம் காசியிலிருந்து தருவிக்கப்பட்ட தொன்றாகும்.

## மா வனப்பேறு

அடர்ந்த காடுகள், மஞ்ஞைகள், மந்தைகள், மந்திகள், வண்டுகள், வாளரவுகள், வன ஜீவராசிகள், வானுயர் மரங்கள், வான்முகில்கள் என இயற்கையின் ஆட்சி நிரம்பிய மாதோட்டம் மஞ்ஞைகள் நிறைந்த கூடலாகவும், வண்டுகள் ரீங்காரம் செய்யும் பாங்கான இசைக்கோட்டமாகவும், மாங்கனிகள் தூங்குகின்ற மாந்தோப்பாகவும், கொடிதெனக் கதறும் கடல் சூழ்ந்த வனப்பாகவும் மிளிர கேதீஸ்வரப்பெருமான் கௌரியம்பாளோடு ஆட்சிபுரிவதை எவருமே கண்டுகொள்ளாத நிலையிலே,

1948ஆம் ஆண்டு இத்திருப்பதியிலே ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தினரால் சைவப்பெரு மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. இம் மாநாடு நடைபெறுவதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள்,

வேலணை வி.கே. செல்லப்பா சுவாமியார்,

திருவாசகமட முதல்வர் சி. சரவணமுத்து அடிகளார்,

சட்டத்தரணி சு. சிவசுப்பிரமணியம் ஆகிய மூவருமாவர்.

இந்த மாநாட்டின் பிரகாரம் இலங்கைபூராகவும் ஒரு சமய விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன் பிரகாரம் பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் ஆலயத்தில் உருவாக்கப்பட்ட சபையே இன்று இயங்குவதற்கு வழிசமைத்த திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையாகும்.

1952இலும் 1960இலும் குடமுழுக்கு நடைபெற்று, இன்று பேறாகியிருக்கின்ற பூர்வாங்க நிலைக்கு அத்திவாரமிட்டவர், சிவப்பேறுகந்த சிவப்பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களாவார். ஆலயத்தையும், பாலாவித் தீர்த்தத்தையும் செப்பனிட்ட பெருமைக்கு இவருடன் நீர்ப்பாசனப் பொறியியலாளர், கொடைவள்ளல் எஸ். ஆறுமுகப்பெருந்தகையையே சாரும்.

## செம்மையுறல்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றையும் வளப்படுத்திக் கொண்டுவர, வீடும் நாடும் மேடும் கூடும் (உடலும்) புனிதம் பெறும் இதன்பேறாகவே, ஆலயச் சூழலில்

திருஞானசம்பந்தர் மடம்,
சுந்தரர் மடம்,
நகரத்தார் மடம்,
நாவலர் மடம்,
அம்மா சத்திரம்,
திருப்பதி மடம்
திருவாசக மடம்,
மகா சிவராத்திரி மடம்,
பொன்னாவெளி உடையார் மடம்,
நாதன் சத்திரம்,
மலேசியா மடம்,
கதிர்காமத் தொண்டர் மடம்,
திருக்குறிப்புத் தொண்டர் மடம்,
மகாதுவட்டா மடம்,
பூநகரி மடம்,
அடியார்கள் மடம்,
அம்மை அப்பன் மடம்,
நீர்ப்பாசன மடம்,
சிவபூசை மடம்,
நரசிங்கர் மடம்,
கட்டிடத் திணைக்கள மடம்,
எஸ்.ரி.ஆர். மடம்
நாகபூஷணி தண்ணீர்ப் பந்தல்,

முதியோர் மடம் எனப் பல அறச்சாலைகள் ஆலயச் சூழலிலே அடியார்களுக்குப் பெரும் ஆறுதலளித்தன. சிவன் அருள் இல்லம் குழந்தைகளின் ஆலயமாகியது.

இதைவிட, மக்கள் குடியிருப்புக்கள், சுகாதார பேணகங்கள், ப.நோ.கூ. சங்கம், கிராமசபைகள், நீர்வழங்கல் சபை, அஞ்சலகம், அங்காடிகள், கௌரியம்பாள் பாடசாலை, சிவன் அருள் இல்லம், சிறுவர் பூங்கா, தென்னந் தோப்புக்கள், மாந்தோப்பு, வாழைத் தோட்டம், சிற்பசாலை, வயல் கழனிகள், மந்தைகள் கூடம், மஞ்ஞைகளின் மருவு கூடங்கள், அந்தணப் பெருமக்களின் இல்லங்கள், புதைபொருளாராய்ச்சிப் பகுதிகள் என பலதரப்பட்ட வசதிவாய்ப்புக்களும் வாழ்விடங்களும் வடிவமைப்புக்களும் வரமாகின்றன.

1976இல் திருக்குடத் திருமுழுக்குப் பெருஞ்சாந்தி விழாவினைத் தொடர்ந்து 1990இற்கு பின்னதாக அசாதாரணச் சூழ்நிலை நிலவியபின்னர், சிற்பங்களும், திருத்தேரும் மாமல்லபுரம் பழனி, திருநெல்வெலி சிற்ப சித்திர வல்லுநர்களால் வரமாக்கப்பட்ட நிலையில், ஐந்து தேர்களில் உலாவரும் எம்பெருமானின் காட்சி மிகவும் அற்புதமானதாகப் பொலிவு பெறுகிறது.

சட்ட வல்லுநர், சிவாகமப் பெரியார் இ. நமசிவாயம் சார்ந்த அடியார்களின் பணி என்றும் நினைவு கூரத்தக்கது.

## பாலஸ்தாபனம்

07.06.2015 பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, தற்போது முழுக்க முழுக்க கருங்கல்லினால் ஆலயம் மாட்சி, பெறுகிறது. இந்திய அரசின் நல்லெண்ண கலாசார அடிப்படையில் 320 மில்லியன் செலவில் இந்த ஆலயம் அழகொழுகு சிற்ப அலங்காரங்களுடன் இந்திய சிற்பிகளால் மிகப்பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டு வருகிறது.

மேலதிக நிதியும், கருங்கற்களும் அதிகமாகத் தேவைப்படுவதனால், திருக்கேதீஸ்வரப் பெருமானும், எம்பிராட்டியும் வரமோடு அடியார்களது வருகையையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற காட்சி அலாதியானது. மாட்சிக்குரியது. பாலாவித் தீர்த்தக் கேணியும் தூர்வாரப்பட்டுச் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

## மஞ்ஞைகள்

நெஞ்சமதை அள்ளும் மஞ்ஞைகளின் சங்கீத அழைப்பும், அவை அகவுகின்றபோது தெறிக்கும் வண்ண ஜாலங்களும், மயக்கும் நடையழகும் ஆலயத்தில் எங்கும் பிரகாசிக்கின்றன. வண்டுகள் பண்பாட, மஞ்ஞைகள் நடமிடுகின்ற கேதீஸ்வரத்தில் கேட்ட வரங்கள் கிடைத்தே தீரும். வருடா வருடம் சென்று வரமும் வாழ்வும் பெறுங்கள்.

---

## ஆன்மீகச் சிந்தனை

தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்பவற்றிலே பெரியதொரு உண்மை அடங்கியுள்ளது. புலன்வழியே மனதை இழுத்துச் செல்லும் எண்ண அலைகளில் இருந்து விலக தனிமையாக மனதை வைத்திருப்பதே தனித்திரு என்பதாகும். இறைவனை அடையவேண்டுமென்ற ஆர்வத்தோடு கணப்பொழுதும் வீணாக்காமல் தீவிர பக்தியோடும் வைராக்கியத்தோடும் இருப்பதே பசித்திரு என்பதாகும். புலன்வழி செல்லும் தீய நினைவுகள், ஆசைகள் உள்ளத்தினுள்ளே புகாதவாறு விழிப்போடு இருத்தலே விழித்திரு என்பதாகும்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை (கல்விப் பணிக்காக) | 5000. 00 |
| ஞானஅருட்கரசி சிவபாலன் | கோண்டாவில் | 10000. 00 |
| ச. நடராஜபிரபு | லண்டன் | 5000. 00 |
| S. சிவக்குமார் | கொழும்பு | 1000. 00 |
| P. யுவராஜ் | கொழும்பு | 1000. 00 |
| P. சரவணதேவன் | இரத்தினபுரி | 1000. 00 |
| ப. ஸ்ரீசேகரன் | புங்குடுதீவு-3 | 500. 00 |
| த. சிவகுமாரன் | இணுவில் கிழக்கு | அரிசி, மரக்கறி |
| க.ம. செல்வரத்தினம் | நவாலி | 6000. 00 |
| செ. கோகுலானந்தன் | நவாலி | 1000. 00 |
| சி. கணபதிப்பிள்ளை | கரணவாய்மத்தி | 1000. 00 |
| K. வருணநாதன் | கோப்பாய் | 500. 00 |
| து. கோபாலசிங்கம் நினைவாக | கந்தர்மடம் | 2000. 00 |
| S. ஜெயவீரசிங்கம் | பத்தமேனி | 5000. 00 |
| கு. லீலாவதி | கீரிமலை | 1000. 00 |
| ச. முத்துலிங்கம் | கோண்டாவில் | 5000. 00 |
| S. பேரின்பராஜா | பொலிகண்டி | 2000. 00 |
| S. செல்வராஜா | நல்லூர் | 1000. 00 |
| வி. நளாயினிதேவி | கனடா | 5000. 00 |
| ர. அனுராதா | கனடா | 1000. 00 |
| ப. சிவமைந்தன் | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| அமரர் திருநாவுக்கரசு விகடகவி நினைவாக | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| ந. நவஜீவன் | இணுவில் | 500. 00 |
| தி. கோகுலன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. சுப்பிரமணியம் | ஆவரங்கால் | 5000. 00 |
| க. நிரஞ்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அமரர் தங்கராசா சட்டத்தரணி நினைவாக | பருத்தித்துறை | 5000. 00 |
| ந. இராசேந்திரம் | கொழும்பு | 2000. 00 |
| சதாசிவமூர்த்தி மூலம் வீரகத்திப்பிள்ளை வள்ளிப்பிள்ளை நினைவாக | கனடா | 50 டொலர் |
| சதாசிவமூர்த்திமூலம் முருகேசு இலட்சுமிப்பிள்ளை நினைவாக | கனடா | 50 டொலர் |
| S. நடேசன்மூலம் T. சிவசம்பு நினைவாக | தொண்டைமானாறு | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 1000. 00 |

*நன்மதிப்பை உடைமையாக்கிக் கொள்வதைவிட அதற்குரிய தகுதியாவது சிறப்பு.*

| | | |
|---|---|---|
| சிவநாதன் திருக்குமரன் | இணுவில்மேற்கு | 10000. 00 |
| பொ. முகுந்தன் | கொழும்பு | 5000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| இ. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ச. கார்த்திகன் | கொழும்பு | 5000. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| வ. ஆறுமுகம் | ஆவரங்கால் | 5000. 00 |
| S. நடேசன் | கொழும்பு-6 | 5000. 00 |
| ராசையா நடராஜசுந்தரம் | கொக்குவில் | 82000. 00 |
| திரு நேரு குடும்பம் | ஆவரங்கால் (கொழும்பு) | 20000. 00 |
| செ. சிவலிங்கம் | இணுவில் (கல்விப் பணிக்காக) | 10000. 00 |
| K. கைலைநாதன் | வட்டுக்கோட்டை (கல்விப் பணிக்காக) | 5000. 00 |
| சி. நாகலிங்கம் | கரணவாய் (கல்விப் பணிக்காக) | 5000. 00 |
| திருமதி சிந்துஜா அமுதராஜ் | திருகோணமலை | 9000. 00 |
| நா. குகதரன் | அச்சுவேலி | 5000. 00 |
| வ. துரைராஜா | உரும்பராய் | 2000. 00 |
| மு. ஆறுமுகசாமி | ஜேர்மன் | 5000. 00 |
| பு. சரஸ்வதி | உடுப்பிட்டி | 1500. 00 |
| நி. அருளன், சி. சிவானுஜன், சி. சிவாஸ்கரன் | மூளாய் | 5000. 00 |
| வை. பிரகலாதன் | சுண்ணாகம் | 1000. 00 |
| க. ஸ்ரீபாலச்சந்திரன் | கனடா | 10000. 00 |
| சி. ஜெயந்தன் | கரணவாய் வடக்கு | 3000. 00 |
| சி. பரமேஸ்வரி | தெகிவளை | 4000. 00 |
| கா. மதுமிதா | அளவெட்டி | 400. 00 |
| ஆ. செல்லத்துரை | உடுவில் | 505. 00 |
| செ. ரட்ணவேல் | இடைக்காடு | 1000. 00 |
| க. அருணகிரிநாதர் | சுழிபுரம் | 5000. 00 |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | 5000. 00 |
| S. ஸ்ரீரெங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| அன்ரா அச்சகம் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| Dr சிவஞானசூரியர் | கொழும்பு | 10000. 00 |
| கு. சபாபதிப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. சரவணன் | இந்தியா | 500. 00 |
| J. சுரீத்திகா, J. யாதவன் | சங்கானை | 1000. 00 |
| சண்முகம் பரஞ்சோதி | கோண்டாவில் | 10000. 00 |

(தொடரும்...

# மணிவாசகத் தேன்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

"மணிவாசகத் தேன்" பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம். தேன் இனிமையானது, சுவையானது, மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தது. இதேபோன்றுதான் மணிவாசகப்பெருமானது திருவாசகமும் கேட்கக் கேட்கத் தெவிட்டாதது. தெய்வீகமானது. உள்ளத்தை உருக்க வல்லது. இதனால்தான் திருவாசகத்தைப் பொருள் உணர்ந்து அனுபவித்தோர்,

"திருவாசகத்திற்கு உருகாதோர்
ஒரு வாசகத்திற்கும் உருகார்"

எனக் கூறிப்போந்தனர்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற வாசகம் யாம் அறிந்ததே. தென்னாட்டைச் சிவலோகமாகக் கருதியவர் மணிவாசகப் பெருமான். மார்கழி மாதத்தில் திருவெம்பாவை எமக்கு மணிவாசகப் பெருமானின் தேனான நினைவுகளை அள்ளித் தருவன. மார்கழிச் சூரியன் மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களைக் கேட்ட வண்ணமே மலர்கின்றன. மார்கழி உதய காலத்தில் புள்ளினங்களும் திருவெம்பாவைப் பாடல்களைக் கேட்டவண்ணம் ஆர்ப்பரிக்கின்றன.

இந்த வகையில் தேனினுமினிய திருவாசகப் பாடல்களை எமக்குத் தந்தருளிய மாணிக்கவாசக சுவாமிகள் சைவம் வளர்த்த சமய குரவர்களுள் ஒருவராக ஞானநெறி நின்று எம்பிரான் இன்னருள் பெற்றவர்.

"தாரமும் குருவும் தலைவிதிப்படியே" என்பது முன்னோர் வாக்கு. மணிவாசகப் பெருமானுக்கு குருவாக வாய்த்தவரோ சிவபெருமான் என்றால் இவரது பக்குவ நிலையை என்னவென்று கூறுவோம்! குருவாக வந்து மணிவாசகருக்கு இன்னருளை, இறையருளை அள்ளிச் சொரிந்தவர் எம்பெருமான். எம்பெருமானின் இன்னருளில் திளைத்தவர் மணிவாசகர். இதனால்தான் இறைவன் காட்சி கொடுத்து மறைந்ததும் தாயைப் பிரிந்த சேயைப்போல் ஐயனைக் காணாது அரற்றிப் புலம்பியவர் மணிவாசகர்.

பாண்டி நாட்டிலே திருவாதவூரில் அந்தண குலத்தில் பிறந்தவர் மாணிக்கவாசகர். அவர் பிறந்த ஊரின் பெயரால் அவருக்குத் திருவாதவூரர் எனப் பெற்றோர் நாமமிட்டனர். இவரது உலக நெறி, ஞானநெறி, அறிவைக் கண்டு உணர்ந்த பாண்டியன் இவருக்குத் "தென்னவன் பிரமராயன்" எனப் பெயர்சூட்டி தனது முதல் மந்திரியாகவும் ஆக்கிக்கொண்டான்.

பிரம்மம் தன்னையும் விளக்கி, பிரகிருதியையும் விளக்கி, தன்மயமாக இருப்பதால் மாசற்ற ஜோதி ஆகின்றது.

அஃது கல்லினுள்ளும் மறைந்திருக்கின்றது. அதேபோன்று சிவபோதத்தை வளர்க்காத அறியாதவர்களின் உள்ளத்துள்ளும் சிவ ஒளி மறைந்தே காணப்படும். பரமாத்மா இருந்தபடி எங்கும் செல்லக் கூடியவர். சயனித்தபடி எங்கும் இயங்குவார். அந்த ஜோதியினை இன்பமும்

*வாழ்வில் நிறையப் பெறவேண்டுமானால் உன்னையே அதிகமாகக் கொடு.*

துன்பமும் இல்லானை என் போன்றவர் அன்றி வேறு யார் அறிவார் என ஒரு சந்தர்ப்பத்தில் தகுதிவாய்த்தவர்கள் தான் பரம்பொருளை அறிந்துகொள்ள முடியும் என்னும் நோக்கில் யமதர்மனால் நசிகேதனுக்கு கூறப்பட்டதாக உபநிடதம் கூறுகின்றது.

"தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்" உள்ளவன் பரம்பொருள், சுய ஜோதிப்பிழம்பு என்பது இறைவனின் ஒரு வடிவம். இடையறாது மாறுபாடு அடைந்து கொண்டு வருகின்ற இந்த உலகிலே வெவ்வேறு வடிவங்கள் ஊடாக அறிவாக ஒளிர்பவன் இறைவன். இயற்கையில் உள்ள தாவர சங்கம சராசரம் யாவற்றிலும் நிறைந்து இயங்குபவன் பரம்பொருள்.

பக்தி நிறைந்த உள்ளத்தில் பரம்பொருளின் சாந்நித்தியம் தெளிவடைகின்றது. கடலை அடையும் நதிதான் கடலாகின்றது. அதேபோன்று பூரணத்தை அடைபவன் பிறவிகளையும் அதனின்று விளைகின்ற துன்பத்தையும் கடந்து அவற்றினின்றும் விடுபடுகின்றான்.

கடலின் அடிப்பகுதி அசைவதில்லை, மேற்பகுதி அசைகின்றது. அதேபோன்று நிர்க்குணப் பிரம்மம் அசைவதில்லை. சகுணப்பிரமம் அசைகின்றது. பரம்பொருள் வெகு தொலைவில் இருப்பது பக்குவமற்ற ஆன்மாக்கட்கே, பக்குவம் பெற்றோர்க்கு அது அந்தராத்மாவாக அமைகின்றது.

தவத்தின்மூலமும் பிரமச்சரியத்தின் மூலமும் மனிதனது அறிவு பக்குவமடைகின்றது. கூர்மையடைந்து நுண்ணறிவாகின்றது. மனதில் மாசு நீங்கும்போது ஈசனின் சாந்நித்தியம் உணரப்படுகின்றது.

ஞானம் ஒளிமயமானது. இறைவனும் ஒளிமயமானவன். ஊனக் கண்கொண்டு காண முடியாத இறைவனை ஞானக் கண்கொண்டு காண முடிகின்றது. "தோற்றச் சுடர் ஒளியாய்" சொல்லாத நுண்ணுணர்வாய் என்கிறது திருவாசகம்.

இந்துமத வழிபாட்டு முறைகளில் வேள்வி ஒன்றாகும். தெய்வ வழிபாட்டில் மக்களை ஈடுபடுத்துவது வேள்வி ஆகின்றது. ஹோமாக்கினி அல்லது வேள்வித் தீ எமது மதத்தில் ஒரு சின்னமே. அதில் இந்த வேள்வித் தீயில் சொரியும் பொருட்கள் உருமாறிப் பயன்படுவது போல, தேவர்கட்கு நிவேதிக்கப்படுவதுபோல் மனிதனும் தன் தூய வாழ்வின்மூலம் தன்னைத் தெய்வத்துக்கு ஒப்படைக்கின்றபோது அவன் இலட்சியம் நிறைவேறுகின்றது.

விறகு தன்னைத் தீக்குக் கொடுத்ததும் அது தீயாகின்றது. அதேபோன்று வேள்வி வாயிலாக மனிதனும் தன்னை இறைக்கு அர்ப்பணிக்கின்றான். எங்கு வேள்வி நிகழ்கின்றதோ அங்கு தெய்வ சாந்நித்தியம் உண்டாகின்றது.

மணிவாசகப் பெருமான் தன்னை இறை என்னும் வேள்வித் தீயில் ஆகுதியாகக் கொடுத்து ஆளப்பட்டமையை பாடியிருக்கும் அழகினைப் பாருங்கள்.

அன்றே எந்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

# சிறுதுளி பெரு வெள்ளம்

## மதுரை மீனாட்சியம்மன் ஆலயத் திருப்பணியின் அன்றைய வளர்ச்சி

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

செந்தமிழின் உறைவிடமான இந்தியத் தமிழகம் பண்டைக்காலத்தில் சேர, சோழ, பாண்டிய முடி மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. பாண்டிய மன்னர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டனர்.

இவ்வரசர்கள் செந்தமிழையும் சைவ நெறியையும் தமது கண்களெனப் போற்றி வாழ்ந்தனர். தமிழ் வளரச் சங்கங்கள் நிறுவி நன்கு கற்றறிந்த புலவர்கள், பண்டிதர்கள் மூலம் இறையருளையே துணையாகக் கொண்டு தமிழை நன்கு ஆராய்ந்து ஆய்வின் மூலம் மேம்படுத்தினர். சிவநெறியும் தமிழுடன் இணைந்து மக்களை உய்வித்தது. மேலும் சமயப் பற்றினால் யாவரும் நன்மை பெறு வதற்கு உதவினர். கோயில் இல்லாத ஊரிற் குடியிருக்கக் கூடாது என்றுணர்ந்ததால் மது ரையை பெருநகராக்குமுன் குடியிருப்பு வசதிக்காக கோயில்களை அமைக்க முன் வந்தனர். மதுரையிற் பல கோயில்கள் நிர் மாணிக்கப்பட்டபோதும் சக்திபீடமாம் மீனாட்சி அம்மன் கோயிலை மிகப் பிரமாண்டமாக அமைக்கவேண்டிய எண்ணக்கரு மன்னர் களிடையே உதயமானது.

ஒரு கோயில் எதிர்காலத்தில் எவ் வாறு பிரகாசிக்க முடியுமோ அதற்கமைவாக நன்கு திட்டமிட்டனர். நாலாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரான குலசேகர பாண்டியன் அடித்தள வேலைகளைத் தொடங்கினார். கோயில் கட்டுமானப்பணி நடைபெற்ற காலத் தில் அரச கட்டளைப்படி வீட்டுக்கொரு ஆணும் ஒரு பெண்ணும் கோயிற்பணிக் கெனக் கூலி ஏற்காது இறைபணி செய்தனர். அவர்களும் தெய்வீகப் பணியை உள்ளன் போடு வியர்வை சிந்தி அரும்பணியாற்றி அகமகிழ்ந்தனர்.

1310இல் அந்நியரின் படையெடுப் பினாற் கோயில் யாவும் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டது. காலஞ் செல்ல அமைதி நிலை வந்ததும் பாண்டிய மன்னர்கள் கோயிற் கட்டு மானப் பணியை ஆரம்பித்துத் திருப்பணி வேலைகள் உற்சாகமாக நடைபெற்றன. இக்காலத்தில் மன்னராக இருந்த கூன்பாண்டி யன் குழந்தை இல்லாதவர்களின் சொத்துக் கள் யாவும் கோயிற் திருப்பணிக்கே சேர வேண்டுமென ஆணையிட்டார்.

மாறவர்மன், சுந்தரபாண்டியன் ஆகிய மன்னர்களின் காலத்தில் ஊர் ஊராகச் சென்று உண்டியல் ஏந்தி நிதி சேகரித்துக் கோயிற் திருப்பணி செய்தனர். கோயிலின் கட்டுமானப் பணிகள் நடைபெறும் காலத்தில் திருவிழாக்களை நிறுத்தி விழாவுக்கான செல வுப் பணத்தைத் திருப்பணிக்காகப் பயன் படுத்துமாறு மன்னர் திருமலை நாயக்கர் உத்தரவிட்டார்.

இவ்வாறு காலத்துக்குக் காலம் அர சாண்ட மன்னர்கள் தமது காலத்தில் திருப் பணி நிதியை வளர்த்தனர். குலசேகர பாண்டி யர் காலத்தில் விவசாயிகளின் விளைச்சலில்

ஒரு பகுதி கோயிற்கட்டுமானப் பணிக்கு வழங்கப்பட்டது.

பற்பல மன்னர்களின் காலங்களில் திருப்பணிக்கெனச் சேர்ந்த நிதி ஏறக்குறைய ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாவாகும். கோபுரங்களின் வடிவமைப்புக்கேற்ப மூன்று கோடியே முப்பது லட்சம் பொம்மைகள் வடிவமைக்கப்பட்டன. இற்றைக்கு அறுநூறு வருடங்களுக்கு முன் மதுரை மீனாட்சியம் மன் திருத்தலத்தின் கட்டுமானப் பணிகளுக் குச் செலவு செய்த ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா இன்றைய பெறுமதியில் எவ் வளவு தொகையென உணரலாம். இவ் வேலைகள் யாவும் பூர்த்தியாக நூற்றியிரு பது வருடங்கள் நீடித்தது.

இச்சிறப்புமிக்க ஆலயத்தின் தேவை கருதிய செட்டியப்ப நாயக்க மன்னர் தாம் போரிட்டு வென்ற பகை அரசர்களின் திறை சேரிப் பணத்தை எடுத்துவந்து பொற்றாமரைக் குளத்தை வெட்டுவித்துக் கோயிலை அழகு படுத்தினார். திருமலை நாயக்கர் மன்னர் தென்பாண்டி நாட்டு மக்களின் பங்களிப்பு சிறப்படைய வேண்டுமெனக் கருதிப் பிடியரி சித் திட்டத்தை ஏற்படுத்தினார். தொண்டர்கள் மூலம் இல்லங்கள் தோறுஞ் சென்று பிடி அரிசி வாங்கி அதனை விற்றுப் பணமாக்கி னர். பொற்றாமரைக் குளத்தினருகேயமர்ந்த விபூதிப் பிள்ளையாரின் பின்புறத்தே கிளிக் கூட்டு மண்டபம் என விளங்கும் பெரிய மண்டபம் பிடியரிசித் திட்டத்தின் சிறப்பை உணர்த்துகிறது.

சிறிது சிறிதாகச் சேர்க்கப்பட்ட பல் வேறு வகையான திருப்பணி நிதித்துளிகள் சங்கமமாக மீனாட்சியம்பாளின் அருட்கடலில் வெள்ளமாகப் பிரகாசிக்கின்றது.

நல்லதையே சிந்தித்துச் செயலாற் றின் பக்தி நெறிநின்று பெருவெள்ளத்தில் மிதக்க இறையருள் கைகூட்டும்.

## மன்னிக்க வேண்டுகிறேன்

பனிசூழ்ந்த கைலாயம். உடுக்கை ஒலியும், துந்துபி முழக்கமும், ஹர ஹர மகாதேவா என்கிற உச்சாடனமும், ரம்மியமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க, முனிவர்களும், முக்கோடி தேவர்களும், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர் என புடைசூழ பரமசிவன் காட்சியளிக்கிறார். அங்கு நடந்த உரையாடலின்போது சனீஸ்வரனுக்கும், பரமேஸ்வரனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

"பரமேஸ்வரா! நான் எனக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையின்படி பூலோகத்தை ஏழரை ஆண்டுகள் பிடிக்கப்போகிறேன். அந்தச் சமயத்தில் தாங்கள் பூலோக சஞ்சாரம் செய்வது கூடாது" என்றான் சனீஸ்வரன். "ஏன்"? பரமசிவன் கேள்வி இது. "தங்களையும் நான் பிடிக்கவேண்டியிருக்கும். அதனால் தாங்கள் அல்லல்பட நேரிடும்" சனீஸ்வரன் பதில். "லோகநாதனாகிய என்னையே நீ பிடிப்பாயா? அதையும் பார்த்துவிடலாம்"- ஈஸ்வரன் சவால் விட்டார். பூலோக சஞ்சாரத்தில் இருந்த பரமேஸ்வரன், சனீஸ்வரன் சொன்ன நேரத்தில், உடலைக் குறுக்கி, ஒரு தாமரைத் தண்டிற்குள் ஒளிந்துகொண்டார். சனீஸ்வரன் தன்னைப் பிடித்துவிடக் கூடாது என்பதற்காக ஏழரை ஆண்டுகள் கழித்து, தண்டிலிருந்து விடுபட்ட ஈஸ்வரன்- சனீஸ்வரனிடம் கேட்டார். "பூலோகத்தை நீ பிடிக்கும்போது என்னையும் பிடிப்பேன் என்றாயே பிடிக்க முடிந்ததா உன்னால்?" கம்பீரமாகக் கேட்டார். "பூலோகத்தையும் பிடித்தேன்- பூமிநாதனாகிய உங்களையும் பிடித்தேன். என்னால் உங்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன்" என்று பவ்யமாக சனி பகவான் கூற, "என்ன கூறுகிறாய் நீ" புருவத்தை உயர்த்தி ஈசன் கேட்டார். "ஆம் பிரபு! ஆதியும் அந்தமுமில்லா தாங்கள் என் பார்வைபட்ட நிமித்தம்- உடலைக் குறுக்கி, தாமரைத் தண்டிற்குள் ஒளிந்து- ஏழரை ஆண்டுகாலம் அஞ்ஞான வாசம் செய்ய நேர்ந்ததே. அது என்னாலல்லவோ" சனி சொல்லச் சொல்ல சிவன் நிஷ்டையிலாழ்ந்தார்.

-அருள்-

உண்மை எங்கு இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள்.

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

திருமுறைப் பாடல்களைப் பாடி வழிபடும்போது தேவாரம், திருவாசகம் ஆகியவற்றை அடுத்து திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பாடவேண்டும். முதலிலிருந்து ஏழு திருமுறைகளுள் தேவாரமும் எட்டாம் திருமுறையுள் திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவும் இடம்பெற்றிருக்க அடுத்துவரும் ஒன்பதாம் திருமுறையாக திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் அமைந்துள்ளன.

நாயன்மார்களின் பின் அவர்களைப்போன்று இறையருள் பெற்றோர் அருளிய இசைப் பாடல்களே ஒன்பதாம் திருமுறையாக வகுக்கப்பட்டதென அறிஞர்கள் கூறியுள்ளனர். திரு இசைப்பா என அப்பாடல்களுக்குப் பெயரிட்டனர். சிறந்ததையோ போற்றத்தக்கதையோ அருள் பெற்றதையோ சிலாகித்து "திரு" என அடைமொழி கொடுத்துப் போற்றிப் புகழ்வது மரபு. அவ்வாறே இந்த இசைப்பாக்கள் "திருவிசைப்பா" எனப்பட்டன.

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி, நம்பிகடாநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் பாடிய இருநூற்றெண்பத்தெட்டுப் பாடல்கள் திருவிசைப்பாவில் அடங்கியுள்ளன.

சிவபிரானை அதீத பக்தியுடன் பலவாறு போற்றும் திருவிசைப்பா பாடல்கள் பாடுவோரிடமும் பக்தி பெருக்கெடுக்கச் செய்பவை. திருமாளிகைத்தேவர் பாடிய முதலாவது பாடலை இங்கு எடுத்துக்கொள்வோம். இதன் பண் பஞ்சமம்.

ஒளிவளர் விளக்கே, உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

அவன் அனைத்திற்கும் ஒளி நல்கும் விளக்கு. அந்த விளக்கின் ஒளி மங்காது வளர்ந்துகொண்டே இருந்தது. தற்போதும் வளர்கிறது. எதிர்காலத்திலும் அது வளரும். இவ்வாறு முக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் இப்பாடலில் "வளர்" என்ற சொல் ஆழ்ந்த பொருள் கொண்டதாகத் தேர்ந்தெடுத்து உபயோகிக்கப்பட்டுள்ளதென்பது கவனிக்கற்பாலது. என்றும் நிலைத்து வளரும் ஒளிகொண்ட விளக்கே, அழிவற்ற ஒன்றே, உணர்தற்கு அப்பாற்பட்ட உணர்தற்கரிய ஓர் உணர்வே, தெளிவு (தூய்மை) வளர் பளிங்கு திரண்டு உருவாகிய அழகிய குன்றே, சித்தத்துள் புகுந்ததும் இனிமை தரும் தேனே, பரிவுவளர்

*செய்த பிறகு அழவேண்டிய வேலையைச் செய்யாமல் இருப்பதே நலம்.*

உள்ளத்தில் பேரானந்தக் கனியாய் இருப்பவனே நினது ஆடலை நிகழ்த்தும் அரங்காகப் பொன்னம்பலத்தைக் கொண்டு அனைவரும் காணும் வண்ணம் நிகழ் நடனத்தை விரும்பும் உன்னைத் தொண்டனாகிய யான் புகழ்ந்துபாட அருள்வாயாக என இப்பாடலில் திருமாளிகைத் தேவர் வேண்டுகின்ற வேளையில் அவர் பாடியுள்ள ஒவ்வொரு சொல்லையும் நாம் உணர்ந்து தான் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. "ஒன்றே", "ஓர்" என்கின்றபோது அதற்கு ஒப்போ மிக்கோ எதுவுமில்லாததால் அந்த ஒன்றை வேறொரு சொல்லால் விளங்கவைப்பது கடினமாகி விடுகிறது.

பளிங்கின் தெளிவு வளர்ந்துகொண்டிருக்கிறது. அப்பளிங்கு திரண்டு மணிக் குன்றாகிறது. அந்தக் குன்றைக் கற்பனை செய்து பாருங்கள். பொதுவாகத் தேனை நாவி னால் சுவைப்பார்கள். இவனை உள்ளத்தினாலே தான் சுவைக்க இயலும். அதாவது உள்ளத்தால் அவனை உணர உள்ளம் தித்திக்கும்.

இவ்வாறு பொருளுணர்ந்து இப்பாடலைப் பாடுகையில் உள்ளம் பேரானந்தக் கனியின் சுவையை உணரும்.

பண் பஞ்சமத்தில் சேந்தனார் பாடிய மற்றொரு திருவிசைப்பா வருமாறு:

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

ஒன்று என்பதற்கு ஒத்த வடமொழிச் சொல்தான் ஏக. ஒப்பற்ற தலைவனை, தேவர் களுக்கு அரசனை எனது உயிருக்கு அமுதமானவனை, ஈடற்றவனும் பேரின்பம் அளிப்பவனு மானவனை கருமேக நிறங்கொண்ட விஷ்ணுவிற்கு சக்கராயுதத்தைக் கொடுத்தருள் செய்து, பொன்னாலான நீண்ட சிவிகையாய் அவனை ஆக்கி, அதில் ஏறிச் சென்றவனை, மேகம்போல் வாரி வழங்குபவனை திருவீழிமிழலையிலே விண்ணிலிருந்து கீழிறங்கி இருக்கும் செழுமையான கோவிலிலே யோகத்திலிருக்கும் இறைவனையன்றி வேறெதுவும் இருப்பதாக நான் உணர வில்லை என்கின்றார் சேந்தனார்.

இவர் தனது உயிருக்கு அமுதமாக இருப்பவன் இறைவன் எனப்பாடியுள்ளார். அமுதம் கிடைத்தற்கரியது. அமுதத்தை விஞ்சிய சுவையுடையது எதுவுமில்லை என்பார்கள். அது இறவா நிலையைத் தருவது. இவ்வாறு பலவற்றை அடுக்கிக்கொண்டே செல்லலாம். அவரது உயிருக்கு அத்தகு அமுதமாக ஈசன் உள்ளான்.

சேந்தனார் மற்றொன்றையும் கூறுகிறார். இறைவனைத் தவிர வேறெதுவும் இருப்பதாக அவர் உணரவில்லை என்கிறார். இத்தகைய ஒரு நிலை சித்தித்தால் எவ்வளவு அற்புதமாக

*மற்றவர்களை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்துடன் நடக்க முடியாது.*

இருக்கும் தேவைகளில்லை, துன்பங்களில்லை, துயரங்களில்லை, இன்பங்களுமில்லை, எதுவும் இல்லை. இறைவனும் ஆன்மாவும் மட்டும் ஐக்கியப்பட்டிருக்கும்நிலை. இந்தத் திருவிசைப் பாவினைப் பாடும்போது அத்தகைய நிலை பற்றிய நினைவொன்றே பேரானந்தத்தை அள்ளியள்ளித் தரும்.

பக்தி மிகுந்த நிலையில் இறைவனை எவ்வாறெல்லாம் போற்றுவோம் என்பதை இப்பாடல்களில் காணலாம். அவ்வாறே பிறப்பிறப்பில்லாப் பெருமானைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதுமாகும். நாம் வாழ்த்துவதாலோ வைவதாலோ அவனுக்கு எதுவுமாகாது. ஆனால் வாழ்த்தியோர் வாழ்வார்கள். இவ்வாறு பல்லாண்டு என வாழ்த்துவதால் அப்பாடல்கள் திருப்பல்லாண்டு என்று கூறப்பட்டன. சேந்தனார் பாடியருளிய பதின்மூன்று பாடல்களைக் கொண்டது திருப்பல்லாண்டு. பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே என அவரே திருப்பல்லாண்டில் பாடியுள்ளார். அந்தப் பாடல்களுள் ஒன்றை எடுத்து நோக்குவோம். இதன் பண்ணும் பஞ்சமம் ஆகும்.

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

சிவலோக நாயகனான சிவபிரானின் திருவடியின்கீழ் சிறப்பும் பெருமையும் பொலிய வேறெவரும் பெறாத மெஞ்ஞானத்தைப் பெற்றேன். அவ்வாறு யான் பெற்றதை, உலகில் வேறெவர் பெறமுடியும்? ஊரிலும் உலகிலும் உள்ளோர் பேசும் வண்ணம் பிதற்றி உமையம் மையின் மணாளனுக்கு யாம் ஆட்பட்டதை மண்ணுலகும் விண்ணுலகும் அறியுமாறு பல்லாண்டு கூறி வாழ்த்துவோமாக.

நாம் பலவற்றைக் கற்றறிகிறோம். அதற்காகப் பட்டங்கள் பெறுகிறோம். இவ்வாறு கற்றவர்கள் எவரும் பெறாத அறிவை சேந்தனார் பெறுகிறார். அந்த மெய்யறிவு கிட்டிவிட்டால் இவையனைத்தும் பொய்யாய்ப் புறந்தள்ளப்பட்டுவிடும். மெய்யறிவை யார் பெறக்கூடும் என்று கேட்கின்றார். இப்பாடலைப் பாடும்போது மனம் மெய்யறிவை வேண்டி நிற்கும்.

அவ்வாறு மெஞ்ஞானம் பெற்ற சித்தர்தான் திருமூலர். திருமூலரின் திருமந்திரம் தத்துவப் புதையல் என்பது தாங்கள் அனைவரும் அறிந்ததே. ஞானச்சுடரில் பலரும் திரு மந்திரம் பற்றியும் திருமூலர் பற்றியும் பல்வேறு கோணங்களில் பல கட்டுரைகள் வரைந்துள்ளனர். குறிப்பாக திரு சிவ. மகாலிங்கம் அவர்களின் கட்டுரைகளைத் தொடராக வாசித்தவர்களுக்குத் திருமந்திரம் பற்றி மீண்டும் எழுதித் தெரிவிக்கவேண்டியவை எதுவுமில்லை.

திருமூலர் அருளிய மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரம் பத்தாவது திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் இதழில் பதினோராந் திருமுறைப் பாடல்கள் பற்றிப் பார்க்கலாம்.

*நாம் பிறருக்கு அளிக்கும் இன்பத்திலேயே நமக்கு மகிழ்ச்சி இருக்கிறது.*

(கட்டுரைத்தொடர் - 39)

# சித்தர்களின் ஞானம்

- திரு சிவ மகாலிங்கம் அவர்கள் -

## மலையகத்துச் சித்தர்கள்

### நவநாதச் சித்தர் - நாகநாத சித்தர்

01) நவநாத சித்தர்:

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை என்ற குன்றுத்தொடர் காணப் படுகிறது. இதற்கு கொல்லி அறப்பள்ளி என்ற பெயரும் உண்டு. அம்மலை உச்சி யில் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அஹிம்சா தர்மத்தை அருள்செய்து அஞ் ஞானத்தைப் போக்கும் ஞானவல்லி சமேத அறப்பள்ளி நாதர் சந்நிதி ஒன்று காணப்படு கிறது. அங்கு சென்ற ஆதி சங்கராச்சாரியார் அம்பாள் சந்நிதிக்கு முன்பாக முருகப்பெரு மானுக்கு கோயில் ஒன்றை அமைத்தார். அம்மலையில் பல பெரிய குகைகள் இருக் கின்றன. அங்கு பல சித்தர்கள் காலம் கால மாக வசித்து வந்தனர். இன்றும் பல சித்தர் கள் அங்கே காணப்படுகின்றார்கள்.

இந்தக் குகைகளில் வாழ்ந்த சித்த புருஷர்களில் ஒருவரே நவநாதசித்தர் ஆவார். இவர் நீண்டகாலம் மன ஒருமைப்பாட்டுடன் தவம் செய்து அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவராக இருந்தார். ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றம் அளித்தவர். கொல்லி மலைச் சித்தர்களில் மிகச் சிறந்தவராக காணப்பட்டார். அயல் கிராமங்களில் உள்ள மக்கள் இவரை மானம்பாக்கி சுவாமிகள் என அழைத்து வந்தார்கள். சுவாமிகள் குகை யில் மோனத்தவம் புரிந்த காலங்களில் பசித் தால் அடிவாரத்திலுள்ள கிராமங்களுக்கு வருவார். அத்தகைய கிராமங்களில் ஒன் றாகிய கரிகாலியில் அடியார் பக்தியில் சிறந்து விளங்கும் பெருமாள் அம்மையார் வாழ்ந்து வந்தார். அம்மையாரின் அடியார் பக்தியால் கவரப்பெற்ற நவநாதசித்தர், அடிக் கடி அம்மையாரிடம் வந்து உணவுபெற்றுச் செல்வார். "ஆயா" என்றே இவர் அம்மையாரை அன்போடு அழைப்பார். கௌபீன உடை யோடு மலையில் இருந்து வரும் சித்தர் நேராக அம்மையாரின் வீட்டிற்குச் சென்று ஆயா என்று அழைப்பார். அம்மையார் சுவாமி களின் பாதங்களை நீரால் விளக்கிப் பூப் போட்டு வணங்கியபின் தயாராக இருக்கும் உணவினைக் கொண்டுவந்து ஏந்தி நிற்கும் சுவாமிகளின் கைகளில் இடுவார். நின்ற நிலையிலேயே வாங்கி உண்டு கையில் நீருற்ற அதனையும் வாங்கி அருந்தியவுடன் தவத்தை நோக்கி கொல்லிமலைக் குகைக் குச் சென்றுவிடுவார்.

மலையகத்தில் உள்ள நாவலப்பிட் டிப் பட்டினத்தில் இருந்து நுவரெலியா செல் லும் கொத்மலை வீதியில் பதின்மூன்றாவது மைல் தூரத்தில் குயின்ஸ்பரி என்ற தேயி லைத் தோட்டம் காணப்படுகிறது. அத்தோட் டத்தில் கரிகாலியில் இருந்து வந்து குடி யேறிய பெருமாள் அம்மையாரின் கணவர் நாகன் பெரிய கங்காணியாகப் பணிபுரிந்து வந்தார். பெருமாள் அம்மையார் வருடத்தில் பாதி நாட்கள் கரிகாலியிலும் மீதி நாட்கள் குயின்ஸ்பரியிலும் காலம் கழித்து வந்தார்.

அம்மையார் ஒருநாள் சுவாமிகளுக்கு உணவு பரிமாறும்போது நாங்கள் இலங்கையில்

நாவலப்பிட்டியில் முருகனுக்கு ஒரு கோயில் கட்டுகின்றோம். சுவாமிகள் கும்பாபிஷேகத்திற்கு வரவேண்டும் என்று வேண்டினார். "ஆயா நினைச்சா அடிமை வரும்" என்று நவநாதச் சித்தர் கூறினார்.

கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள் அம்மையார் சுவாமிகளுக்குக் கூறியதை நினைவு கூர்ந்தார். அன்று தபால் ஒன்றைச் சுவாமிகளுக்கு அனுப்பினார். அம்மையார் கும்பாபிஷேகத்திற்கு உரிய பொருட்களுடன் கோயிலுக்குச் செல்லும்போது சுவாமி எதிரிலே வந்து கொண்டிருந்தார். சுவாமி நேற்றுத் தானே கடிதம் அனுப்பினேன். எப்படி வந்தீர்கள்? என அம்மையார் கேட்டார். "ஆயா நினைச்சது அடிமை வந்திட்டுது" என்று சுவாமிகள் பதில் கூறினார்.

ஒருநாள் பெருமாள் அம்மையார் சிதம்பரம் செல்லவேண்டுமென்று சுவாமிகளிடம் உத்தரவு கேட்டார். சுவாமிகள் ஆசிகூறி உருத்திராட்சமாலை ஒன்றையும் கையில் கொடுத்து அம்மையாரை அனுப்பி வைத்தார். சிதம்பரம் சென்ற அம்மையார் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் உருவாக்கிய தீர்த்தத்தில் நீராடினார். தீர்த்தம் ஆடிய பின்பு ஜெபம் செய்வதற்காக சுவாமிகளால் கொடுக்கப்பெற்ற உருத்திராக்க மாலையைத் தேடினார். ஒரு இடமும் காணவில்லை. வீட்டில் பிரயாண அவசரத்தில் மறந்துபோய் வைத்துவிட்டு வந்துவிட்டதை உணர்ந்துகொண்டார். கண்கள் மூடியபடி கைகள் கூப்பியவண்ணம் நவநாதச் சித்தரை நினைந்து உருகினார். உருத்திராட்சமாலை கைகளில் விழுந்திருப்பதைக் கண்டார். நவநாதச் சித்தர் புறம் புறம் திரிந்து கருணை பாலிப்பதை உணர்ந்து அம்மையார் உள்ளம் நெக்குருகினார்.

தமிழ்நாட்டில் பச்சைப் பெருமாள் பட்டியில் ஒரு ரெட்டியாரின் வீட்டுப் புறத் திண்ணையில் நவநாதச் சித்தர் யோக நிஷ்டையில் அமர்ந்திருந்தார். ரெட்டியாருக்கு சுவாமிகளைக் கண்டால் பிடிக்காது. எல்லோரும் வேடதாரிகள் என்பது அவரது எண்ணம். ஒரு உண்மை மகானைச் சரியாக அறிந்துகொள்வதற்கும் பக்குவம் வேண்டும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என வாழும் பிரபஞ்சக் குஞ்சுகளால் உண்மை ஞானிகளை அறிய முடியாது.

புறத்திண்ணையிலே ஒருத்தர் செத்த ஆடு விழிப்பதுபோல விழித்து வேஷம் போடுகிறார் என்று வீட்டில் உள்ளோருக்கும் வீதியால் போய்வருபவர்களுக்கும் பரிகாசமாகக் கூறுவார். அவருடைய பரிகாசம் பேச்சளவில் நின்றுவிடாமல் செயலிலும் இறங்கியது. சித்தருடைய தலையில் ஒரு கொள்ளிக்கட்டையைக் கொண்டுவந்து வைத்தார். சித்தருக்கு அக்கொள்ளிக்கட்டையால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. அவர் அதனைப் பொருட்படுத்தாது உணர்வு வரப்பெறாதவராக ஞான நிஷ்டையிலே அமர்ந்து இருந்தார். இதனைக் கண்ட மற்றொரு ரெட்டியார் சிரசிலிருந்த கொள்ளிக்கட்டையை அகற்றிச் சித்த புருஷரை வணங்கி நின்றார். சித்தர் விழித்ததும் எதிரிலே நின்றவரைப் பார்த்து "என்னப்பா நடந்தது" என்றார். வீட்டு ரெட்டியார் தங்கள் தலையில் நெருப்பிட்டார். அதனை நான் அகற்றினேன் என்றார். அப்படியா? அவர் மிக நல்லவர் என்று கூறிவிட்டுச் சித்தபுருஷர் அவ்விடத்தைவிட்டு அகன்றார். அக்குடும்பமே இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோனதை யாவரும் அறிவர்.

இவர் 1902ஆம் ஆண்டு பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்தன்று (24.03.1902) மகா சமாதி அடைந்தார். சுவாமிகள் கூறியபடி நாவலப்பிட்டி குயின்ஸ்பரி முருகன் சூழலிலே இவருடைய சமாதி வைக்கப்பட்டது. சித்தரின் சமாதிக் கோயில் இருப்பதால் இத்தலம் இன்று யாத்திரைத் தலமாக மாறியுள்ளது.

*உண்மையோடு கூடிய நடத்தையின்மூலமே உண்மையை அடைய முடியும்.*

02) நாகநாத சித்தர்:

ஈழமணித் திருநாட்டின் மலையகத்தில். தோட்டத் தொழிலாளர்கள் செறிந்து வாழ்கின்றார்கள். மலையகத்தில் முத்துமாரி அம்பாள் ஆலயங்களே நிறையக் காணப்படுகின்றன. அம்பாள் ஆலயங்களுக்கு அடுத்த படியில் முருகன் ஆலயங்கள் உண்டு. ஹற்றனிலிருந்து கொழும்பு செல்லும் பிரதான வீதியில் குயில்வத்தை என்ற இடத்தில் சிவாலயம் ஒன்று காணப்படுகிறது. இந்த ஆலயத்தின் பூசகராகச் சாது ஒருவர் கடமை ஆற்றினார். திரிகரண சுத்தியுடன் பக்திபூர்வமாகச் சாது பூசைகளைச் செய்து வந்தார். குமரகுருபர சுவாமிகள் ஆகிய சாதுவின் குருநாதராக நாகநாத சித்தர் இருந்தார்.

நாகநாத சித்தர் தமிழ்நாட்டின் திருக்கோஷ்டியூரைச் சேர்ந்த வடகம்பட்டிக் கிராமத்தில் இராமகிருஷ்ண பிள்ளைக்கும் மீனாட்சி அம்பிகைக்கும் புத்திரராகத் திருஅவதாரஞ் செய்தார். இவர் ஈழத்திற்கு வருகை தந்து ஹற்றனைச் சேர்ந்த கன்னியப் பூந்தோட்டத்தில் சிலகாலம் ஆசிரியராக இருந்து வந்தார். எண்ணும் எழுத்தும் கற்பித்துக் குழந்தைகளுக்கு கல்வியை வழங்கிய நாகநாதருக்குதான் அகக்கண் குருடாக இருப்பது தவறு என்ற அகவிசாரணை மனத்திலே எழுந்தது. ஆசிரியத் தொழிலுக்கு முழுக்குப்போட்டுவிட்டு மன அமைதியைத் தரக்கூடிய இடத்தைத் தேடி அலைந்தார். குயில்வத்தையில் சிவாலயமாக உருப்பெற்றிருக்கும் இடத்தில் சாந்தி நிலவுவதைக் கண்டார். அவ்விடத்திற்கு வந்து தியான நிஷ்டையில் இருந்து சாதனைகள் புரிந்தார். அயலிலுள்ள மக்கள் அவரை அன்புடன் ஆதரித்தனர். இங்கேதான் யோகி குமரகுருபர சுவாமிகள் நாகநாத சித்தருக்கு சிஷ்யராக வந்து வாய்த்தார். இளவயதினராகிய குமரகுருபர சுவாமிகள் உலக விவகாரங்கள் எதுவும் அறியாதவர். தம்மை முழுமையாகக் குருநாதரிடம் ஒப்படைத்து விட்டுப் பக்குவமான சிஷ்யராக இவர் வாழ்ந்து வந்தார்.

குயில்வத்தைச் சிவாலயம் 1910ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. நாகநாத சித்தர் உடனிருந்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தி வைத்தார். கும்பாபிஷேகம் முடிந்ததும் நாகநாத் சித்தரும் சிஷ்யராகிய குமரகுருபர சுவாமிகளும் அன்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக புவப்பிட்டியா சென்றனர். இவர்கள் பார்க்கச் சென்ற அன்பர் இந்தியா சென்றுவிட்டதாக அறிந்தனர். இவர்கள் இருவரும் புகையிரதத்தில் ஏறிக் கொழும்பு சென்றனர். மறியல்காரரைக் கூட்டிச்செல்லும் பாதுகாப்பு அதிகாரி இவர்களைப் புகையிரதத்தில் பாதுகாப்பாகக் கூட்டிச் சென்றார். இருவரையும் தூத்துக்குடிக் கப்பலில் இந்தியா செல்பவர்கள் கொழும்பில் தங்கிச் செல்கின்ற மருதப்பிள்ளை என்பவரது தேநீர்க் கடையில் தங்க வைத்தார். இருவரிடமும் பணம் எதுவும் இல்லை. தேநீர்க்கடையில் ஒரு மூலையில் இருவரும் அமைதியாக இருந்தனர். அதிகாரி சாப்பாட்டுக் கடைக்காரரிடம் இரு சுவாமிகளையும் கவனித்துக்கொள் என்று கூறிவிட்டுச் சென்றமையால் இவர்களுக்கு உணவு ஒழுங்காகக் கிடைத்தது.

மறுநாள் அந்த அதிகாரி குறிப்பிட்ட நேரத்திற்கு வந்தார். அதேநேரத்தில் மிகக் கவர்ச்சியான தோற்றம் உள்ள பெரிய கங்காணி ஒருவர் அவ்விடத்திற்கு வந்தார். சுவாமிகள் இந்தியாவுக்கா போகப் போகிறீர்கள் என்று கேட்டார். இவர்கள் ஒன்றுமே பதில் கூறவில்லை. உடனே தனது வேலையாளைக் கூப்பிட்டு தூத்துக்குடிக்கு இரண்டு பயணச் சீட்டுக்கள் வாங்கி வருமாறு உத்தரவு போட்டார். உடனே அவன் சென்று இரண்டு பயணச் சீட்டுக்களுடன் வந்தான். சுவாமிகள் இருவரிடமும் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

*இன்றைய நாளை இறுகப் பற்றிக்கொள். நாளைய நாளைப்பற்றி அதிகம் நம்பவேண்டாம்.*

அந்த அதிகாரி இருவரையும் கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

கையில் ஒரு சதம் பணம்கூட இல்லாமல் எங்கே போகின்றோம் என்ற நினைவே இல்லாமல் இருவரும் மிக அமைதியாக கப்பலில் பிரயாணம் செய்தனர். இப்படிப்பட்ட யாத்திரைதான் பரிவ்ராஜக யாத்திரை என்று அழைக்கப்படும். சந்நியாசம் பெறுவதற்கு முன்பு இப்படிப்பட்ட யாத்திரை செய்தே சந்நியாசம் பெறுவதே வழக்கம் ஆகும்.

இருவரும் முதலில் முருகப் பெருமான் வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஆறு படை வீடுகளில் ஒன்றாகிய திருப்பரங்குன்றம் சென்றனர். கோவிலின் முன்பாக கௌபீன உடையுடனும் கையில் தகரக் கொத்துடனும் காட்சியளித்த சாது ஒருவர் "மக்களே வாருங்கள்; வாருங்கள்" என்று வரவேற்றார். இருவரையும் அழைத்துச் சென்று ஆலய தரிசனம் செய்வித்தார். அங்குள்ள ஒரு பிராமணக் குடும்பத்தினர் இவர்கள் இருவரையும் மதிய போசனத்திற்கு அழைத்தனர்.

வெகுநாட்களாக அப்பகுதியில் மழையே இல்லை. மக்கள் தண்ணீருக்காக மிகவும் கஷ்டப்பட்டனர். இருவரையும் மதிய போசனத்திற்கு அழைத்த பிராமணக் குடும்பத்தினர் நேர்த்திக்கடன் ஒன்று வைத்தார்கள். நாற்பது அடியார்களுக்கு அன்னமிடுவதாகவும் உடனே மழை பெய்யவேண்டும் என்பதும்தான் அந்த நேர்த்திக்கடனாகும். இவர்கள் இருவரையும் தவிர்ந்த ஏனைய அனைவரும் அந்த ஊரவர்களாகும். உணவு எல்லோருக்கும் வழங்கப்படுகின்றது. முருக நாமம் முழங்கியவண்ணம் இருக்கிறது. அடியார்கள் அனைவரும் பக்திப்பரவச நிலையில் நாம பஜனையில் ஈடுபட்டுள்ளனர்.

திடீரென ஒரு அரோகராச் சத்தம் கேட்டது. ஒரே நிசப்தம். அந்தணர் இரு புதிய சாதுக்களையும் பார்த்து ஒரு பணிவான விண்ணப்பம் செய்கின்றார். சுவாமிகளே! நீங்கள் இருவரும்தான் இந்த அடியார் கூட்டத்தில் புதியவர்கள். உங்கள் இருவரையும் தவிர்ந்த மற்றைய அனைவருக்கும் இந்த அன்னதானத்தின் நோக்கம் தெரியும். மழை பெய்யவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து உறுதி கூறியே அடியவர்கள் அனைவரும் உணவை உண்ணுதல் வேண்டும் என்பது இவர்களின் பணிவான வேண்டுதலாகும். உடனே நாகநாதர் இறைவன் திருவுள்ளம் அதுவானால் அவனிச்சைப்படியே எல்லாம் நடக்கும் என்றார். "அரோகரா" கோஷம் எழுந்தது. அடியார்கள் அனைவரும் உணவு உண்ணத் தொடங்கினர். வானம் இருண்டது; மின்னல் இடிமுழக்கம் எல்லாம் தோன்றியது. மழை சோனாவாரியாகப் பொழிந்தது. இவ்விரு சாதுக்களின் மகிமையையும் அவ்வூர் மக்கள் அறிந்து கொண்டனர். இருவருக்கும் வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து சில காலம் தங்கள் கிராமத்தில் தங்களுடன் இருக்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

சித்தர்கள் பலர் வாழ்ந்த இடம்தான் சிக்கந்தர்மலை. அம்மலையைத் தரிசிக்க சாதுக்கள் இருவரும் சென்றனர். அங்கிருந்த காளையார் கோயில் தாசில்தாரர் நாகநாத சுவாமிகளைக் கூர்ந்து கவனித்தார். சாதுக்களே நீங்கள் உள்ளது உள்ளபடியே பேச வேண்டும். பொய் சொல்லக்கூடாது என்றவர் நீர் இராமகிருஷ்ண மகன்தானே என்று கேட்டார். நாகநாதர் ஆம் என்றார். தாசில்தாருக்கு ஆனந்தம் பொங்கியது. உமது தந்தையார் காலமாகி விட்டார். தாயார் தான் மரணம் அடைவதற்கு முன்பு உம்மைப் பார்க்கவேண்டும் என்று தவிக்கிறார். ஆதலால் நீர் உடனே சென்று தாயாரைப் பார்க்க வேண்டும் என்று வேண்டினார். நாகநாதருக்கும் தாய்ப்பாசம் இருந்தது. நேராக

வடகம்பட்டி சென்று தாயாரைப் பணிந்தார். தாயும் மகனைக் கட்டித் தழுவி கண்ணீர் மழை சொரிந்தாள். நாகநாதர் வருகையால் வடகம்பட்டியில் மழை பொழிந்தது. நீண்ட நாட்கள் வானத்தையே பார்த்திருந்த மக்களுக்கு பேரானந்தம் பொங்கியது. தாயாரின் ஆசியைப்பெற்ற பின்பு குருவும் சிஷ்யனுமாகக் கும்பகோணம் சென்றனர். பொருள் ஒன்றுமே இல்லாத இரு சாதுக்களுக்கும் இங்கேதான் காவி உடையும், தண்டும், கமண்டலமும் இன்னும் சில பொருட்களும் கிடைத்தன.

கும்பகோணத்தில் இருந்து சிதம்பரம் சென்று சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானை பக்திபூர்வமாகத் தரிசித்தனர். பின்பு அங்கிருந்து திருவண்ணாமலைக்குச் சென்றார்கள். இவர்கள் அங்கே போகும் பொழுது இரவு அகால நேரமாகிவிட்டது. இருவரும் சாதுக்கள் சத்திரத்தில் தங்கினர். அதிகாலையில் மற்றைய அடியார்களுடன் இருவரும் கிரிவலம் வந்து எட்டுத் திக்குகளிலும் இருக்கும் சிவமூர்த்தங்களைத் தரிசனம் செய்தனர். சுற்றிவர உள்ள பன்னிரெண்டு கிலோமீற்றர் தூரத்தையும் கைகளைத் தலையிலே கூப்பியவண்ணம் அண்ணாமலையானின் நினைவோடு வலம்வந்து வணங்கினர். இருவரும் கிரிவலம் வந்து கோயில் வாசலை அடைந்தபொழுது சாது ஒருவர் சுவாமி தரிசனம் ஆகிவிட்டதா? என்று இவர்களிடம் வினாவினார். இவர்கள் ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தனர். திருவண்ணாமலை யாத்திரை பூரணமடைய வேண்டுமானால் இங்கிருக்கும் சாது ஒருவரையும் நீங்கள் தரிசித்து ஆக வேண்டும் என்றார். அவரைத் தரிசிக்காமல் சென்றால் நீங்கள் அண்ணாமலை வந்தும் பிரயோசனம் இல்லை என்று கூறினார். அந்தச் சாது கூறிய குறிப்பின்படியே இருவரும் திருவண்ணாமலையில் உள்ள குகையை நோக்கி நடந்தனர். எதிரே ஒருவர் கௌபீன உடையுடன் வந்துகொண்டிருந்தார். இருவரையும் பார்த்துப் பிராமணச் சுவாமிகளைப் பார்க்கச் செல்கின்றீர்களா? என்று வினாவினார். இவர்கள் இருவரும் ஆம் என்று கூறியதும் இருவரையும் அழைத்துச் சென்று பிராமண சுவாமி இருந்த குகையைக் காட்டினார். பிராமண சுவாமியின் தரிசனமும் கிடைத்தது. இருவரும் நிலத்தில் வீழ்ந்து சுவாமியை சாஷ்டாங்கமாக வணங்கி நின்றார்கள். சுவாமிகளின் காந்தக் கண்கள் இருவரையும் கவர்வதுபோன்ற நிலையை இவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இந்தப் பிராமண சுவாமிதான் பிற்காலத்தில் ரமணமகரிஷி என்று அனைவராலும் அழைக்கப்பட்ட மகானாவார்.

தென் இந்திய யாத்திரை முடித்துக் கொண்டு இருவரும் மறுபடியும் இலங்கைக்குத் திரும்பினர். குயில்வத்தை சிவாலயத்தில் இரு வருடங்கள் தங்கியிருந்து ஆலய தரிசனம் செய்யவரும் அடியார்களுக்கெல்லாம் அருளுபதேசம் செய்தார்கள். கோயிலின் முன்பாக இருக்கும் குகையில் நாகநாதர் பல நாட்கள் மோனத் தவம் புரிந்தார். பல அரிய தெய்வீகக் காட்சிகள் இவருக்குக் கிடைத்தது. தனது உத்தம சீடராகிய குமர குரு சுவாமிகளைக் குயில்வத்தை சிவாலயத்தில் இருக்க வைத்த பின்னர் நாகநாத சித்தர் தனியாக இந்தியா சென்று 1946ஆம் ஆண்டு வைகாசி உத்தர நட்சத்திரத்திலே சமாதி நிலை எய்தினார்.

குமரகுரு சுவாமிகள் தமது குருநாதரைத் தியானித்தவண்ணம் நாள் முழுவதும் பூமாலை தொடுப்பார். அன்பர்களைக் கண்டவுடன் அகமும், முகமும் மலர வரவேற்பார். ஆலய தரிசனத்திற்கு வருபவர்கள் அனைவருக்கும் தமது குருநாதரின் பெருமையைக் கூறிக்கொண்டே இருப்பார். குருநாதரின்

பெயரைக்கூறும்போதெல்லாம் நாத் தழு தழுக்க கண்ணீர் சொரிவார். இவர் பூசைகள் செய்யும்பொழுது அப்பூசையிலே ஒன்றிவிடு வார். தாம்வேறு மூர்த்தி வேறு என்ற நிலை இல்லாமல் பூசை செய்வார். இராமகிருஸ்ண பரமஹம்சர் தட்சணேஸ்வரத்து அம்பாளுக்கு பூசை செய்யும்பொழுது இருந்த நிலை யிலேயே குமரகுரு சுவாமிகளும் பூசை செய்து வந்தார். யார் எதைச் சொன்னாலும் கேட்டாலும் ஆகட்டும், நல்லது என்ற வார்த்தைகளையே கூறுவார்.

பாரதமாதா ஈழமணித் திருநாட்டின் பொருட் செல்வத்தை வளர்க்க இலட்சக் கணக்கில் மனித வளத்தை தந்து உதவி யதுபோல அருட்செல்வத்தை வழங்கவும் மகான்களை காலத்துக்குக் காலம் தந்து உதவினாள். அருட்செல்வத்தை வழங்க வந்தவர்களில் நவநாத சித்தரும் குறிப்பிடத் தக்கவர்கள். மலையகத் தமிழருக்கு இவர் கள் இருவரும் அருள் ஞானத்தை வாரி வழங்கினார்கள்.

(தொடரும்...

## தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின் சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வில் ஆச்சிரம பணிகளுக்குப் பேருதவி புரிந்த மக்கள் வங்கிக் கிளைகள்.

| | |
|---|---|
| மக்கள் வங்கி இளைப்பாறியோர் | 41,500. 00 |
| மக்கள் வங்கி யாழ் பிரதேச காரியாலயம் | 27,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி கிளை | 29,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதானவீதி கிளை | 16,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி கிளை | 7,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளை | 11,000. 00 |
| மக்கள் வங்கி சுன்னாகம் | 44,000. 00 |
| மக்கள் வங்கி சங்கானை | 19,000. 00 |
| மக்கள் வங்கி காங்கேசந்துறை | 2,000. 00 |
| மக்கள் வங்கி அச்சுவேலி | 10,000. 00 |
| மக்கள் வங்கி வல்வெட்டித்துறை | 13,500. 00 |
| மக்கள் வங்கி பருத்தித்துறை | 7,000. 00 |
| மக்கள் வங்கி நெல்லியடி | 3,000. 00 |
| மக்கள் வங்கி கொடிகாமம் | 11,000. 00 |
| மக்கள் வங்கி சாவகச்சேரி | 7,300. 00 |
| மக்கள் வங்கி பரந்தன் | 6,000. 00 |
| மக்கள் வங்கி வவுனியா | 10,000. 00 |
| மக்கள் வங்கி திருகோணமலை | 38,000. 00 |
| மக்கள் வங்கி மட்டக்களப்பு | 10,000. 00 |
| ஹம்சாளினி, ஹரிணி | 2,000. 00 |
| சோதிநாயகி குருசாமி | 2,000. 00 |

*மற்றவர்மீது கருணை காட்டுங்கள், உங்கள்மீது இறைவன் கருணை காட்டுவார்.*

# படங்கள் தரும் பதிவுகள்




வவுனியா கணேசபுரம் விநாயகர் வித்தியாலய மாணவர்களுக்குரிய
கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில் ஆச்சிரமம் சார்ந்தோர்.





*சிறிய உதவிகளை மறக்காதே. ஆனால் சிறிய தவறுகளை மறந்துவிடு.*



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுகப் பணிகளின் வரிசையில் வருடாவருடம் தைமாதத்தில் இடம்பெறும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்காகிய கல்விச் செயற்பாட்டுக்குரிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடு.





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுகப் பணிகளின் வரிசையில் வருடாவருடம் தைமாதத்தில் இடம்பெறும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்காகிய கல்விச் செயற்பாட்டுக்குரிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடு.



*நிச்சயமாக நன்மை விளையுமென உணர்ந்தாலன்றி உள்ளத்தில் உள்ளதை வெளியிடாதே.*



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமூகப் பணிகளின் வரிசையில் வருடாவருடம் தைமாதத்தில் இடம்பெறும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்காகிய கல்விச் செயற்பாட்டுக்குரிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடு.






தைமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் கலந்துகொண்டோர்...




காலத்தை வீணாக்குவது தன்னைத் தானே கொள்ளையடிப்பதற்குச் சமம்.




ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில், தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது துவிச்சக்கரவண்டிகள் வழங்கிய நிகழ்வு.





ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில், தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது துவிச்சக்கரவண்டிகள் வழங்கிய நிகழ்வு.



தவறு செய்து திருந்துபவன் தன்னைக் கடவுளிடம் ஒப்படைத்துவிடுகிறான்.

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

## 26.11.2016 செவ்வாய்க்கிழமை


காலை எட்டுமணியளவில் நேபாள இந்திய எல்லையில் அமைந்துள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தில் நாம் இந்திய எல்லைக்குள் உள்புகுவதற்குரிய அனுமதியைப் பெற்று முற்பகல் 10 மணியளவில் எமது தலயாத்திரையைத் தொடர்ந்தோம். நண்பகல் 12 மணியளவில் சொர்ணபுரி என்ற இடத்தில் அமைந்திருந்த கோர்நாத் சிவன் ஆலயத்தை அடைந்தோம். உண்மையில் சொர்ணபுரி என்ற பெயருக்கேற்ற வகையில் ஆலய வளாகமும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களும் மிகவும் ரம்மியமாக காட்சி அளித்தன. பெரிய மர விருட்சங் களோடு கூடிய சோலை அதனோடு இணைந்த கட்டடங்கள் நீர்த்தடாகம் வர்த்தக நிலையங் கள் எல்லாவற்றுக்கும் மேலாகப் பலவித உடையலங்காரங்களுடன் கூடிய யாத்திரிகர் கூட்டம் இவை எல்லாம் சேர்ந்து அவ்விடம் சொர்ணபுரியாகவே மிளிர்ந்ததை காணக்கூடியதாக இருந்தது.

உடல் அசதியைப் போக்கும் வண்ணம் நாமும் மரவிருட்ச நிழலில் சிரம பரிகாரம் செய்து உடன் தயாரிக்கப்பட்ட மதிய உணவுச் செயற்பாட்டை முடித்து ஆலய வழிபாட்டின் நிமித்தம் சிவன் ஆலயத்தை அடைந்தோம். ஆலய வழிபாட்டில் பலவிதமான வழிபாட்டிற்குரிய தெய்வங்கள் நிரம்பிய கலை அம்சங்களோடு அமைந்திருந்த காட்சியானது எம்மைப் பிர மிக்க வைத்தது. மிகப் பரந்த அளவில் காணப்பட்ட ஆலய வளாகத்தில் அமைந்த பிரமாண்ட மான ஆலய அமைப்புக்களும் அதனுள் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் இறை மூர்த்தங்களையும்



*வாழ்க்கை முக்கியமல்ல, வாழ்க்கையில் நீ காட்டும் மனவுறுதிதான் முக்கியம்.*

பார்க்கும்பொழுது வழிபாட்டின் மகத்துவத்தை உணரக்கூடியதாக இருந்தது. ஆலய தரிசனத்தில் மூல மூர்த்தியாக சிவன் அமர்ந்திருக்க பிள்ளையார், அம்மன், கபால வைரவர் ஆகிய தெய்வங்களைத் தரிசித்தபின் ஆலய உள் வளாகத்தை வலம் வந்தபொழுதுதான் அங்கே அமைந்துள்ள பலவித சிற்பங்களுடன் கூடிய சிலைகளைக் காணக்கூடியதாக இருந்தது. முனிவர்களது பர்ண சாலைகள், ரிஷி முனிவர்களின் உருவச் சிலைகள், சிவன் புராணகதை சிற்பங்கள் அவற்றோடு எமது வழிபடு தெய்வங்களான் சிவலிங்கம், அம்மன், ஆஞ்சநேயர், மகாவிஷ்ணு போன்ற மூர்த்தங்களை அழகுற அமைத்து அவற்றை அணுகாதிருக்கும் வண்ணம் பாதுகாத்து வருகின்றார்கள். எமது குழுவினரும் ஆளுக்கு ஒரு திசையாகச் சென்று அவற்றைப் பார்வையிட்டு தத்தம் மனதில் தோன்றியவற்றை எல்லோரிடமும் பகிர்ந்துகொண்டார்கள்.



நாமும் எமது வழிபாட்டை முடித்து ஆலய முன் வீதியில் அமைந்த ஒரு நீர்த்தடாகத்தை அடைந்தோம். சகல அம்சங்களும் நிறைந்த தடாகத்தைப் பார்த்தபொழுது ஒரு உல்லாசபுரியாகவே தென்பட்டது. ஆலயம் எவ்வளவு புனிதமாகப் பேணப்பட்டாலும் ஆலயப் புறச்சூழல் ஒரு கண்காட்சிப் பிரதேசமாகக் காட்சியளித்தது. ஆனாலும் இப்புனிதமான பிரதேசங்கள் ஒரு கண்காட்சிப் பிரதேசமாகவும், பொழுது போக்குவதற்காக மட்டும் இருக்கக்கூடியதாகவும் இருப்பதால், ஆலயத்திற்கு வழிபாட்டிற்கு வருகைபுரியும் யாத்திரிகர்களின் மனதில் பக்திநிலையை உருவாக்குவதற்குப் பதில் ஆலய சுற்றாடல் கேளிக்கைக் கூடமாக மாறி வருவது விரும்பத்தகாதது என்பதைக் கூறிக்கொள்ளத்தான் வேண்டும். மாலை நேரம் அண்மிக்க கோர்நாத் ஆலய வளாகம் அவ்வூர் மக்கள் கூட்டத்தினால் நிரம்பி வழிந்தது. காரணம் அங்கே அமைந்திருந்த பொழுதுபோக்கு சாதனங்கள் என்றே கூறவேண்டும். எமது குழுவினரும் இவற்றைப் பார்வையிட்டபடி இரவு உணவுச் செயற்பாட்டை நிறைவு செய்து காசியை நோக்கி எமது யாத்திரை தொடர்ந்தது.

எமது யாத்திரைத் தொடரில் ஆறு, ஏழு தடவை காசிக்குச் சென்றிருந்தாலும் இம்முறை எம்மோடு வருகை புரிந்த சமீபத்தில் அமரராகிவிட்ட நித்திய தசீதரனும் உடன் இருந்த காரணத்தால் காசிக்குச் செல்லவேண்டும் என்ற முனைப்புடன் பயணப்பட்டேன். ஆனாலும் ஒவ்வொரு முறையும் காசிக்குச் செல்லும்போதெல்லாம் பலவித அனுபவங்களை நான் அனுபவித்திருக்கின்றேன். இம்முறை காசியில் அகோரிகளின் குடிலுக்குப் போகக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தோம். அதுவும் கங்கைக் கரையோரம்....

(தொடரும்...

ஞானச்சுடர் 2018 மாசி மலர்

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

02.03.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "திருவாசகம் எனும் தேன்"

வழங்குபவர் :– சைவப்புலவர் பொன். சந்திரவேல் அவர்கள்

---

09.03.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :– "இன்னிசை"

வழங்குபவர் :– திருமதி சிவரஞ்சினி ரமணசர்மா அவர்கள்

(இசை ஆசிரியை)

(பக்கவாத்திய சகிதம்)

---

16.03.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "சைவம் காட்டும் வாழ்வு"

வழங்குபவர் :– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

---

23.03.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

30.03.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் பங்குனி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :– திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

(இளை. அதிபர்)

மதிப்பீட்டுரை :– திரு க. ஆனந்தராசா அவர்கள்

(இளை. அதிபர்)

243ஆவது மலர்

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

